கைதடி - ஆனந்தநகர்

# அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்



ஆவர்த்தன பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேக

# சிறப்பு மலர்

22.06.2008



உ

குருமயம்



கைதடி - ஆனந்தநகர்

# மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்

ஆவர்த்தன பிரதிஷ்டா


# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

ஆனி 2008


| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | ஆவர்த்தனா பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் |
| உரிமை | :- | மலர்க்குழு |
| ஆசிரியர் | : | சோ.சபாநாதன் |
| காலம் | :- | ஆனி 2008 |
| பக்கங்கள் | :- | 88 |
| வெளியீடு | : | நிர்வாகக்குழு,<br>கைதடி - ஆனந்தநகர்<br>மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் |
| பதிப்பு | :- | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>424, காங்கேசன்துறை வீதி,<br>யாழ்ப்பாணம். |




தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்



சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த அருளொளி செல்லம்மா மாதாஜி



ஆலய ஆதிமூலவர்



பிள்ளையார்



முருகன்



கௌரி அம்பாள் சமேத சந்திரசேகரர்



வைரவர்

உ
சிவமயம்

# கைதடி, ஆனந்தநகர்
# மாதாஜி லிங்கேஸ்வரசுவாமிமேற் பாடிய
# திருவூஞ்சற் பா

(பாடியவர்: பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக்குருக்கள்
ஐயப்ப குருசுவாமி, சிவதர்மசாஸ்த்தா ஆலயம்)

## காப்பு

பூமலியும் ஏழிசையும் பொலிந்து தோன்றும்
பூந்தமிழும் புகழ்சைவம் மலிந்து வாழும்
நாமகளும் பூமகளும் நயந்து மேவும்
நல்கை தடிஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரம
ஞானமா தாஜிலிங் கேஸ்வர ஸ்வாமி
சேமமுற சிவகாமி யாளோ டாளப்
பாமருவும் ஊஞ்சலிசை பாடி ஆட
ஓம்கார கணபதயே காப்ப தாமே.

## நூல்

சீர்மேவு வேதப் பொற்றூண்கள் நாட்டி
செப்பரிய உபநிடத விட்டம் பூட்டி
பார்மேவு கலைஞானக் கயிறு மாட்டி
பரம சிவ ஆகமத்தின் பலகை தேக்கி
தார்மேவு பிரணவமாம் பதுமம் வைகித்
தண்டமிழின் திருவூஞ்சல் தன்னில்ஏறி
ஊர்மேவும் கைதடி மாதாஜி லிங்கேஸ்வர
சுவாமியரே உவந்து ஆடீர் திருஊஞ்சல் தாமே.

பொற்றூண்கள் நால்மார்க்கப் பக்தியாகப்
பொலி விட்டம் சேரைந்து புலன்களாக
கற்றூறும் வடம்நான்கும் காரண மாக
கலைப்பதுமப் பீடமது முத்தியான
வற்றாத தத்துவப் பேரின்ப ஊஞ்சல்
வளமார்ந்த சிவனவன் ஆடருள்செய்
கற்றார் வாழ் கைதடி மாதாஜி லிங்கேஸ்வர
சுவாமியரே உவந்துஆடீர் திருஊஞ்சல் தாமே.

கங்கையொடு விரிசடையும் ஆட ஆட
கலைமதியும் அரவணியும் ஆடஆட
வெங்கையதில் மான்மழுவும் ஆட ஆட
செவ்விதழில் அருள்முறுவல் ஆட ஆட

மங்கையவள் மனோன்மணி மருங்கே ஆட
மாலயனும் மாதவரும் மகிழ்ந்தே ஆட
கொங்கைதிரள் கோன் மாதாஜி லிங்கேஸ்வர
சுவாமியரே உவந்து ஆடீர் திருஊஞ்சல் தாமே.

குழையாடக் கோடாடக் கோனும் ஆடக்
குஞ்சரனும் விஞ்சையரும் குகனும் ஆட
வளையாகப் பாம்பாட வரி புலித்தோல்
அரையாட நூலாட அண்டம் ஆடப்
படையான திரிசூலம் பரிந்தே ஆடப்
பார்வதியும் பாரதியும் திருவும் ஆட
இடையில்லா கைதடி இறை மாதாஜி
லிங்கேஸ்வரரே உவந்து ஆடீர் திருஊஞ்சல் தாமே.

நந்திதேவர் மிருதங்கவொலி செய்தே ஆட
நாரதரும் நாரியரும் போற்றிப் பாடச்
செந்திருவும் இசைவாணி வீணை மீட்டச்
செங்கணரி குழல் அயனும் தாளம் போடப்
புந்தி மகிழ் வெய்தடியார் புளகம்எய்தப்
புவனங்கள் அத்தனையும் அருளால் ஆடச்
செந்தமிழாம் கைதடிசேர் மாதாஜி லிங்கேஸ்வர
சிவனே உவந்துஆடீர் திருஊஞ்சல் தாமே.

கற்பகப்பூ மாரியதைத் தேவர் பெய்யக்
கந்தருவர் கானமழை பொழிந்து பாட
அற்புதத்தின் அற்புதமாய் நின்ற கோல
ஆனந்தக் காட்சிகண்டு அடியார் உள்ளம்
சொற்பதம் கடந்தபெரு மோனங் கொண்டே
சொரிந்துவிழி நீர் சொரியச் சொக்கி நிற்ப
விற்புருவக் கைதடிமா தாஜிலிங் கேஸ்வர
சிவனே உவந்தாடீர்திரு ஊஞ்சல் தாமே.

ஆதித்த ஞாயிறு வெண்குடையை ஏந்த
அழகால வட்டத்தைத் திங்கள் தூக்க
வேதத்தின் நாயகியாம் செவ்வாய் கன்னி
மனோன்மணி உளம்அன்பதனாற் பூப்ப
பாதத்திற் கழுத்தில் வியாழன் பூணும்

பனி வெள்ளி மலையரசே ஆசனித்தே
சீதத்தன் கைதடிசீர் மாதாஜி லிங்கேஸ்வர
சிவனே உவந்துஆடீர் திருஊஞ்சல் தாமே.

பிட்டுண்டு மண்சுமந்த களைப்பும் ஆற
பிரம்படி பட்டஅந்த நோவும் ஆற
கண்டுண்ட சுந்தரர் சொற்பித்தம் நீங்க
கொட்டுண்ட விடமுண்ட கண்டம் தேற
கோதைக்குத் தூதான கால்கள் ஆற
மட்டில்லாக் கைதடிப் பதிமேல் மேவும்
மிளிர் மாதாஜிசிவ மகேஸ் வரனே
சிறந்து வந்து ஆடீர் திருஊஞ்சல் தாமே.

தென்னிலங்கை வேந்தன் இராவ ணேசன்
தினவெடுத்த தோள்களினால் மலையைத் தூக்கி
சென்னியிற்கால் விரலூன்றிச் செருக்கும் தீர்த்துச்
செவியார வீணையிசை கேட்டாய் தேவா
மன்னிடுமண் டோதரிக்கு மகிழ்ந்தருள் செய்
மன்னவனே இன்னமுதே ஆடீர்ஊஞ்சல்
இன்னிசைவாழ் கைதடி மாதாஜி லிங்கேஸ்வர
சுவாமியரே உவந்துஆடீர் திருஊஞ்சல் தாமே.

தத்துவவத்தின் தத்துவநே ஆடீர் ஊஞ்சல்
தாண்டவத்தின் ஆண்டவநே ஆடீர் ஊஞ்சல்
அத்துவிதங் கடந்தவநே ஆடீர் ஊஞ்சல்
அன்பரகம் உறைபவநே ஆடீர் ஊஞ்சல்
சத்துசித்து ஆனவநே ஆடீர் ஊஞ்சல்
சச்சிதானந்த மானவநே ஆடீர் ஊஞ்சல்
வித்துவம்சேர் மனோன்மணி அம்மையோடு
சத்சித்தா னந்தசிவ ஆடீர் திருஊஞ்சல் தாமே.

## வாழி

அந்தணரும் வானவரும் ஆனும் வாழி
அருமாரி நல்லரசு வாழி வாழி
செந்தமிழ்சேர் சைவமும் சிறந்து வாழி
செப்பரிய செழுங்கலைகள் சீரும் வாழி
நன்தமிழன் நங்கையின் கற்பும் வாழி
நாநிலமும் வாழி திருவருளும் வாழி
பைந்தமிழின் கைதடிப் பதியும் வாழி
மாதாஜி லிங்கேஸ்வர சுவாமியும் வாழி வாழி வாழி.

சுபமங்களம்

## கும்பாபிஷேக மலரின் இதழ்களாக....


| | | |
|---|---|---|
| 1) | ஆசியுரைகள் | 01–21 |
| 2) | மலராசிரியரின் இதயத்திலிருந்து... | 22 |
| 3) | பதிப்புரை | 23 |
| 4) | மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் – தல வரலாறு | 29 |
| 5) | சிவபுராண விளக்க உரையின் சிறு தொகுப்பு | 41 |
| 6) | சைவசித்தாந்தம் காட்டும் வாழ்வியல் – சில சிந்தனைகள் | 43 |
| 7) | சரீர யாழும் சாரீர யாழும் ஓர் ஆய்வு | 49 |
| 8) | கனவுகளும் பலன்களும் | 54 |
| 9) | மெய்ப்பொருளின் உண்மையை உணர்ந்து வாழ்ந்த சித்தர்கள் குடிகொண்ட லிங்கேஸ்வர ஆலய மகத்துவம் | 55 |
| 10) | கைதடிப் பதிக்குக் கிடைத்த மாதாஜி லிங்கேஸ்வரர் | 58 |
| 11) | என் கடன் பணி செய்து கிடப்பதே | 61 |
| 12) | இந்துக்கள் வழிபாட்டில் விரதங்கள் | 62 |
| 13) | சக்தியின் மகத்துவம் | 64 |
| 14) | கோவிற் கும்பாபிஷேகத் தத்துவம் | 66 |
| 15) | சமய சாதனை | 71 |
| 16) | மாதாந்த பூஜை விபரம் | 75 |
| 17) | மண்டலாபிஷேக உபயகாரர் | 77 |
| 18) | மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய திருப்பணி மொத்த வரவு செலவு அறிக்கை | 78 |
| 19) | நன்றியுரை | 79 |

உ
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.
ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.
*பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.*

தொலைபேசி: 021 - 222 2870

17/04/2008



## அருளாசிச் செய்தி

சிவனடியார்களுக்கு,

மாதாஜி லிங்கேஸ்வரப்பெருமான் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 22.06.2008 ஞாயிற்றுக்கிழமை இன்று நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பன்னிரெண்டு வருடத்துக்கு ஒருமுறை நிகழும் மகா கும்பாபிஷேகத்தைச் செய்வதும், பார்த்து அனுபவிப்பதும் புண்ணியப்பேறாகும். அந்தவகையில் மாதாஜி லிங்கேஸ்வரப் பதியில் உறைந்து அருளாட்சி புரியும் இலிங்கேஸ்வரப் பெருமானுக்கு நிகழும் கும்பாபிஷேகத்தை ஆவணப்படுத்தும் வகையில் மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலரினை வெளியிடுவது சிறப்பானதாக அமைகின்றது. எமது வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது தெய்வ வழிபாடாகும். இதனை நன்கு உணர்த்தும் முகமாக கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நிகழ்த்துவது சைவத்தமிழ் மக்களுக்கு நிலையான, நிம்மதியான வாழ்விற்கு வழியமைக்கின்றது. கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து, பயன் அடைய வேண்டுகின்றோம். நிகழும் கும்பாபிஷேகம் நாட்டில் அமைதியையும், சுபீட்சத்தையும் தரவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். கும்பாபிஷேக மலர் சிறப்புற வெளிவருவதற்கு ஆசிகள். இப்பணி தொடர்ந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இன்பவன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள்,**
நல்லை ஆதீன முதல்வர்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்



# சந்நிதியான் ஆச்சிரமம்
# Sannithiyan Achchiramam



செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

Selvachchannithy,
Thondaimanaru.
28.06....200.8.

## அருளுரை

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரம மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய ஆவர்த்தன மகாகும்பாபிஷேக மலர் உதயமாதலையிட்டு எமது ஞான குருவின் துணைகொண்டும் ஞான பண்டிதனான சந்நிதி முருகனின் துணைகொண்டும் அருளுரை வழங்குவதில் பரிபூரண மனநிறைவடைகின்றேன். பஞ்சபூதங்களினிடமாகவும், இயங்கும் உயிர்கள் இயங்கா உயிர்கள் யாவற்றின் இடமாகவும் வியாபகமாக உள்ள இறைவனின் திருவருட் சக்தியை மந்திர பூர்வமாக, வேதாகம கிரியா முறைப்படி மகாகும்பத்தினிடமாக ஈர்த்து அதனை மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகளினிடமாகப் பதிப்பதற்காக மகாகும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. மகாகும்பாபிஷேகத்தை அடுத்து நிகழ்த்தப்படும் மண்டலாபிஷேகங்களும் மண்டலாபிஷேகப் பூர்த்தியின்போது நிகழ்த்தப்படும் சங்காபிஷேக நிகழ்வும் இறைவனின் திருவருளினைப் பரிபூரணமாக விக்கிரகத்தின் இடமாகப் பதியப்பெறச் செய்கின்றன. பெருஞ்சாந்தி விழாவாகப் போற்றப்படும் இந்நிகழ்வுகளின் மூலமாகச் சகல உலகங்களிலும், சகல உயிர்களினிடத்தும் சாந்தியும் சமாதானமும் ஏற்படுவதாக எனப் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றேன்.

குருபணியில்
மோகனதாஸ் சுவாமிகள்.
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

**Sri Durgadevi Devasthanam**

Tellippalai, Sri Lanka

T.P.No. 0602-213151 திகதி 29/04/08



# ஆசியுரை

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தின் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ள செய்தி அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். கைதடியில் ஞானபீடமாக விளங்கும் சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் சச்சிதானந்த செல்லம்மா அம்மையார் இல்லத்தில் சிலகாலம் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளும் யானும் தங்கி இருக்கும் வாய்ப்புப் பெற்றோம். ஜீவன் முத்தர்களாக வாழ்ந்த ஞானிகளின் தவப்பெருமையைப் போற்றி மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற இறைவனைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
(சமாதான நீதிபதி)
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Thavathiru
Vadivel Swamy

அம்மை அப்பருக்கு அன்புசெய்ய அருட்குருவாய் வந்த எமது
அம்மை இம்மை அல்லல் அகற்றி அருள்செய்திடுவர்
பொல்லாங்கவை தவிர்த்து பொன்னடிக்கீழ் சேர்த்திடுவன்
எல்லோரும் இன்புற்றிருக்க அருள் செய்திடுவன்



Srimath
Ganeshanantha Swamy

# மகாதேவ ஆச்சிரமம்

Thavathiru Ganesanantha
Mahadeva Swamigal,
MAHADEVA ASHRAM
Jeyanthinagar
Kilinochchi (Sri Lanka)
Peoples Bank, Kilinochchi A/C No :13704

தவத்திரு
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி,
இலங்கை

7.....4.....2008.

## ஆசியுரை

பேரன்புடையீர்,

மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயக் குடமுழுக்கு விழா பக்தி பூர்வமாகவும், உலக மக்கள் சுபீட்சமாக வாழவும் எங்கள் இதயபூர்வமான நல்லாசியை தெரிவிப்பதோடு மனமார்ந்த மகிழ்ச்சியையும் நல்குகின்றோம்.

வாழி சோபனம் வாழிநல் அன்பர்கள்
சூழ வந்தருள் தோற்றமும் சோபனம்
ஆழிபோல் அருள் ஐயன் மவுனத்தால்
ஏழையேன் பெற்ற இன்பமும் சோபனம்

எங்கள் நல்லாசிகள் கிடைப்பதாகுக.
மங்களம், மங்களம், மங்களம்

தவத்திரு
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி,
இலங்கை.

# ஆசியுரை

**"சிவேன ஸ்தாபித: சைவ:**
**சைவேந ஸாவித: சிவ:"**
**ஓம்**

என்பது ஆகம வாக்கியமாகும். சிவனால் ஸ்தாபிக்கப்பட்டது சைவசமயம். சைவனால் ஸ்தாபிக்கப்படுபவர் சிவன் என்பது இதன் பொருள்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். நம் நாட்டிலும் பல சித்தர்கள் காலத்திற்குக் காலம் தோன்றி அற்புதங்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். இந்தப் பாரம்பரியத்திலுள்ள கைதடி கிராமத்தில் சித்தர் பாரம்பரியத்தில் வாழ்ந்து அற்புதங்கள் நிகழ்த்திய அம்மையாரின் சிவதத்துவத்தை நினைவுகூர்ந்து கைதடி வாழ் மக்கள் அவருக்குச் சிவாலயம் அமைத்துப் பூசித்து வருகிறார்கள். மாதாஜி லிங்கேஸ்வர மஹா கும்பாபிஷேகமும் சிறப்புற சமீபத்தில் நடந்தேறியது. சிவனின்

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்,**
**காயத்திரி பீடம்,**
**இணுவில்.**

# ஆசியுரை

யாழ்ப்பாணத்தில் கைதடி என்னும் கிராமத்தில் ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமத்தில் அருள்ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் 06.05.2008 அன்று நிறைவேறி மண்டலாபிஷேகப் பூர்த்தியின்போது சிறப்பு மலரொன்று வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடை கின்றோம். இம்மலர் வெளியீட்டோடு தொடர்புடைய அனைத்து அன்பர்களுக்கும் எம் நல்லாசிகள் உரித்தாகுக.

கைதடி புண்ணியபதி என்று போற்றப்படக்கூடிவாறு ஞானிகளது திருப்பாதம் பதிந்த புனித கிராமமாகும். தவத்திரு கனகரத்தினம் சுவாமிகளைக் குருவாகக் கொண்டவர் தவத்திரு மகாதேவ சுவாமிகள் ஆவார். தவத்திரு மகாதேவ சுவாமிகளைக் குருவாகக் கொண்டு ஆன்மீக வாழ்வில் நிறைவுபெற்றவர் தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள். இம்மகானைக் குருவாகக்கொண்ட மாதாஜி செல்லம்மா அம்மையார் இல்லறவாழ்வு வாழ்ந்து துறவறம் பூண்டு 42 வருடங்கள் வரை ஞானியாக வாழ்ந்து சமாதிநிலைபெற்று பூரணத்துவம் பெற்றவர். தமது குருவாகிய ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் பெயரில் ஆச்சிரமம் ஒன்றினை அமைத்து ஞான வாழ்வுக்கு வழியமைத்துக் கொடுத்தவர். இத்தகைய சிறப்புப்பெற்ற ஆச்சிரமத்தில் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் அமைக்கப்பெற்று ஆவர்த்தன மகாகும்பாபிஷேகம் நிறைவேறியுள்ளது. இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட லிங்கேஸ்வரர் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது விசேட அம்சமாகும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளை எளிதில் உணர்ந்து வழிபடுவதற்குரிய இடமே ஆலயம். அத்தகைய ஆலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை உணர்ந்து வழிபடத் தேவைப்படுவது அகப்புறத் தூய்மையாகும். ஆலயத்தில் வழிபடும் இறைவனை ஆலயத்திற்குப் புறத்தேயும் எல்லா ஜீவராசிகளிலும் உணரும்போதுதான் சமய வாழ்வு அர்த்தமுள்ளதாகின்றது. அனைத்து உயிரினங்களுக்கும் நாம் சேவையாற்றும்போதுதான் இறைவழிபாடு பூரணத்துவம் பெறும். இத்தகையதொரு ஆன்மீக வாழ்வுக்கு ஆற்றுப்படுத்திய பெருமைக்குரியவர் மாதாஜி அவர்கள். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற உன்னத இலட்சியத்திற்கு அவரது தூய்மையான வாழ்வு வழிகாட்டி நிற்கின்றது.

அத்தகைய புனிதரது பெயரால் எழுந்துள்ள இவ்வாலயத்தின் வழி லிங்கேஸ்வரப் பெருமானது திருவருட் கடாட்சம் உலகெங்கணும் பரவவும் அனைவரது வாழ்வில் சந்திக்கும் இடர்களும் துன்பங்களும் நீங்கி வளமான இன்பமயமான வாழ்வு சிறக்கவும் ஞான பரம்பரையினரது குரு ஆசி கிட்டவும் வழியேற்பட்டுள்ளது. அவனருளாலே அவன் தாள் வணங்கும் வாய்ப்பு இவ்வாலயத்தின் மூலம் அடியார்களுக்குக் கிட்டியுள்ளது. திருவருளும் குருவருளும் நல்கும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தினைக் காலந்தோறும் நினைவு கூரத்தக்கதாகவும் சிறந்த ஆன்மீக சிந்தனைகளைக் கொண்டதாகவும் வெளிவரும் இம்மலரின் வெளியீடு சகல நிலைகளிலும் சிறக்க லிங்கேஸ்வரப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துகின்றோம். கும்பாபிஷேகத் திருவருட்பேறு எங்கும் நிறைந்து விளங்குவதாகுக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

**யாழ்ப்பாணம்**
**26-05-2008**

**பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்,**
**வாழ்நாள் பேராசிரியர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை.

அலுவலகம் : 2328
இல்லம் : —

[illegible]
டாக்டர் மா.வேதநாதன்
பி.ஏ.(ஆனர்ஸ்), டி.ஏ., டிஎஸ்.எஸ்., எம்.ஏ., பிஎச்.டி.,
தலைவர்.

நாள் : ________

# செல்லம்மா மாதாஜி ஒரு மறைஞானி

ஈழத்து ஞானிகளின் பாரம்பரியம் தனிச்சிறப்புடையது. அந்த ஞானிகளின் அடிச்சுவட்டில் அவதரித்த ஈழத்துப் பெண் மறைஞானி என்ற பெருமைக்குரியவரே கைதடி செல்லம்மா மாதாஜி அம்மையார் ஆவார். இணுவையம்பதியில் அவதரித்த சுவாமி சச்சிதானந்தரை இவர் தனது ஞான குருவாக ஏற்றுக் கொண்டார். நயினாதீவு ஸ்ரீமத் முத்துக்குமாரசாமி எனும் மகா ஞானியின் அருள் வீழ்ச்சியும் மறைஞானி செல்லம்மா மாதாஜின் ஆன்மீக வாழ்வு மேலோங்குவதற்கு உந்து சக்தியாக அமைந்தது. இல்லற ஞானியாகத் திகழ்ந்த செல்லம்மா மாதாஜி, பிற்காலத்தில் முற்றும் துறந்த கைதடி ஞானியாகத்திகழ்ந்தார். பாவியரைக் கரையேற்றும் ஞானத்தாயாக விளங்கினார். இறைவனிடம் இறவாத இன்ப அன்பு வேண்டிப் பெற்ற, காரைக்கால் அம்மையாரின் வழித்தடத்தில் தோன்றிய ஈழத்து பெண் மகாஞானியாக இவரைக் கருதலாம். சுவாமி விவேகானந்தர் தனது குருநாதராகிய ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இராம கிருஷ்ணமடம் அமைத்து ஆன்மீக அலையைப் பரப்புரை செய்தது போல, மறைஞானி செல்லம்மா மாதாஜி அம்மையாரும் தனது ஞான குருவான சுவாமி சச்சிதானந்தரின் பெயரில் கைதடியில் ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தை அமைத்து தனது சமாதி நிலையிலும் குருவருள் நெறியும், அருளொளியும் பரப்பி வருவது நாம் செய்த தவப்பயனாகும். திருமூலர் கூறும் சமாதிப் பண்பாட்டு மரபிற்கு கைதடி செல்லம்மா அம்மையாரின் சமாதிக் கோயில் ஓர் உன்னதமான எடுத்துக் காட்டாகும்.

இந்த மறைஞானிக்கு திருமந்திரம் கூறும் முறைப்படி சமாதிக்கிரியைகள் செய்து, சமாதி ஆலயம் அமைத்து குடமுழுக்குச் செய்ததுடன், சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடும் தொண்டர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள். வணக்கத்திற்குரியவர்கள்.

வாழ்க வளமுடன்

மா.வேதநாதன்,
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# SIVAPOOMI ELDERS HOME
# சிவபூமி முதியோர் இல்லம்

**Head Office :**Sivapoomi
Kondavil East,
Kondavil.
T.P No: 021 2227938,
E_mail:- sivapoomi@gmail.com, sivapoomi@yahoo.com

Valakkampirai,
Sulipuram.



## ஆசியுரை

சித்தர்கள், யோகிகள் தியானித்த புண்ணிய பூமி கைதடி. இத்திருவூரில் ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம் வளாகத்தில் மாதாஜியின் மாதவத்தால் எழும் லிங்கேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறப் பிரார்த்திக்கிறேன். இத்திருக்கோவில் குடமுழுக்கு வைபவத்துடன் எம் திருநாடு விடிய வேண்டும் என்று பிரார்த்திக் கிறேன். அருளாளர்களின் திருவடிபட்ட மண்ணில் திருவருளுக்குக் குறையில்லை. உலகத்துக்காகப் பிரார்த்தித்த ஞானிகளின் மூச்சு – பாவங்களைப் பொசுக்கும் சக்தியுடையவை. அவ்வகைகளில் சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த அவர்களின் மீளா அடியவராக விளங்கிய அன்னையின் திருவருள் நிறைந்த வாழ்வு பலரைப் புனிதம் அடையச் செய்துள்ளது. அம்மையாரின் மெய்ஞ்ஞான வேட்கையால் விருட்சமாக வளர்ந்த இச்சச்சிதானந்த ஆச்சிரமம் சிறப்புப்பெற்று மிளிர்கிறது. அம்மாவின் திருவருள் தீட்சைபெற்ற அன்பர்கள் நெறிதவறாது காத்து வருது பாராட்டுக்குரிய விடயமாகும். கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தின் வளர்ச்சியில் மிகவும் அக்கறையோடு செயற்பட்டு வருகின்ற உயர்திரு.இ.குழந்தைவடிவேலு, J.P. அவர்களின் பெருந்தொண்டு மெச்சத்தக்கது. குருவருளும் திருவருளும் கைகூடி நடைபெறும் கும்பாபிஷேகம் எம்மண்ணுக்கு மாண்புதரவேண்டி நல்லாசி கூறி அமைகிறேன்.

**"யாவர்க்குமாம் இன்னுரைதானே"**

செஞ்சொற்செல்வன் ஆறு. திருமுருகன்

# மஹா கும்பாபிஷேக விழாக் காணும் கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்

இணுவையூர் தந்த ஞானப்பெருமகன் ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகளின் பேரில் 1958ஆம் ஆண்டு சச்சிதானந்த ஸ்வாமிகள் ஆச்சிரமம் ஸ்தாபிக்கப்பட்டது. ஞான வாழ்க்கை வாழவேண்டுவோர்க்கெல்லாம் இது ஒரு தவப்பேறாகும். இணுவில் சச்சிதானந்த ஸ்வாமிகள் யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்கள்தோறும் சென்று ஞானநடனம் செய்த தவசிரேஷ்டராவார். இவர் தென்மராட்சியில் பல ஊர்களிலும் சென்று ஞானநடனம் புரிந்தவர். செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற சித்தர் பரம்பரையினர் அனைவரும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாளை வழிபாடு செய்தவர்களாவர். இங்கு குறிப்பிடுகின்ற ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளும் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலில் ஞான நிஷ்டை செய்த சித்தராவார். சுவாமிகளின் ஞான நிஷ்டையின் தவ விஷேடத்தினால் பன்றித் தலைச்சி அம்மன் கோயில் அறங்காவலரில் ஒருவரான திரு.சி.செல்லத்துரை அவர்களும் சீடராயினார். மேலும் இவர்களின் பாரியாரான செல்லம்மா அம்மையாரும் இவர்களின் சீடரானார். அறங்காவலரான செல்லத்துரை அவர்கட்கும் செல்லம்மா அம்மையார்க்கும் பிள்ளைச்செல்வம் கிடைக்கவில்லை. இதனால் ஞானச்செல்வமாகிய சுவாமிகளின் சீடராகி, தமது கணவரான செல்லத்துரை அவர்களின் பூரண சம்மதத்துடன் துறவறம் பூண்டார். துறவறத்தின் பயனாகத் தமது ஜென்ம பூமியாகிய கைதடிக்குச் சென்று அங்கு ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் பேரில் ஆசிரமம் ஒன்றை அமைத்தார். இதன் பெறுபேறாகத் தினமும் சித்த ஞான பரம்பரையினர் கூடும் தளமாக மாறியது.

என் சிறிய வயதில் அம்மையார் என்னை உணவூட்டி வளர்த்தவரில் ஒருவர். அவருடைய மட்டுவில் இல்லமும் என் தந்தையாரின் இல்லமும் நேரெதிர் இல்லங்களாக இருந்தன. இதனால் செல்லம்மா அம்மையார் பற்றிய நினைவுகள் இன்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. அம்மையாரின் இல்லத்தில் திருமுறைப் பாராயண ஒலி தினமும் கேட்ட வண்ணமாயிருக்கும். இதனால் சிறு வயதிலேயே திருமுறைகளைக் கேட்கும் பேறுபெற்றிருந்தேன்.

நாட்டில் யுத்தம் காரணமாக எங்கள் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களும் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளும் ஒரு சில மாதகாலம் கைதடி சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் தங்கியிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் அம்மையார் அவர்களைக் காணும்போதெல்லாம் எங்கள் சிறுவயதில் எம்மை வளர்த்தெடுத்த பெருமைபற்றிக் கூறுவார். ஞான வாழ்க்கை வாழ்ந்த செல்லம்மா அம்மையாருடன் ஏற்பட்ட தொடர்பு ஒரு வரப்பிரசாதமாகும். மாதாஜி செல்லம்மா அம்மையார் பேரில் மாதாஜி லிங்கேஸ்வர ஆலய மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுவது மகிழ்ச்சி தருவதாகும். ஞான வாழ்க்கை வாழ்ந்த செல்லம்மா அம்மையாரின் தவவலிமை இருந்தவாறு.

கா. சிவபாலன்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஓ
உ
சுவாமி சரணம்



**பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக் குருக்கள்**

*ஐயப்ப குருசுவாமி*

*சிவதர்மசாஸ்த்தா ஆலயம்*

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி, முதல் தெரு.



# ஆசியுரை



ஈழமணித்திருநாட்டின் முடிபோல விளங்குகின்ற யாழ்ப்பாணத்திலே நல்லொளி வீசிப் பிரகாசிக்கும் கைதடிப் பதியிலே அறப்பணியாற்றிய அம்மையார் ஸ்ரீ சச்சிதானந்த அருளொளி செல்லம்மா அவர்களின் அருமையும், பெருமையும் சொல்லில் அடங்காது. அருளே வடிவான அம்மையார் கைதடி தந்த தெய்வத்தாய் என விளங்கி, நாட்டில் நல்ல பல சேவைகளைச் செய்த ஓர் ஆன்மீக அருளாளர் ஆவார். அவரது பெருமைகூறும் நூலுக்கு அடியேனும் ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்பும், அறமும், அருளும், அறிவும் துலங்க விளங்கிய அம்மையார் எமக்குக் கிடைத்தது நாம் செய்த தவப்பேறாகும். இந்தப் புண்ணிய பூமியிலே சைவமும், தமிழும் தழைத்தோங்கி, அடியார் பெருமக்கள் ஆனந்தமும், மகிழ்ச்சியும், அமைதியும், சமாதானமும் நிறைந்த வாழ்க்கை வாழ்வதற்கு முற்று முழுதாகத் தன்னையே அர்ப்பணித்த அன்புத்தாய் ஸ்ரீ சச்சிதானந்த அருளொளி செல்லம்மா அம்மையாராவார்.

சைவக் கோட்பாடுகளையும், சைவ மரபுகளையும் பேணிக் காத்து வளர்த்த அம்மையார் ஈழத்தில் எத்தனையோ குடும்பத்தினர் இன்னல்களை நீக்கி இன்ப வாழ்வுக்கு வழிகாட்டியவர் என்று கூறின் மிகையாகாது. உவமையிலாக் கலை ஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும் கைவரப்பெற்ற அன்பு அன்னை அருளொளி செல்லம்மா அம்மையார் இவ்வுலகுக்குக் கிடைத்தது பூர்வ ஜென்மப் புண்ணியப் பலனாகும்.

வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தனிப்பெருந்தலைவன் சிவபெருமான். அந்தப் பரம்பொருளின் திவ்ய பேரருட் கடாட்சத்துக்குப் பாத்திரமாகி பேரானந்தப் பெருவாழ்வு நாம் வாழ மாயையை வென்ற சத்தியாக, மனித நேயத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்த அம்மையாரின் அருளாட்சிச் சிறப்புக் கூறும் இந்நூல் பலருக்கும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆகவே, சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த அருளொளி செல்லம்மா அம்மையாரின் மகத்துவமும், மகிமையும் கூறும் இந்நூலைச் சைவமக்கள் உவர்ந்தேற்று வாசித்துப் பயன்பெற எமது நல்லாசிகள்.


இந்த அம்மையாரின் அருளொளியானது அனைத்திடங்களிலும் பரவி ஒளிவீசி எல்லோருக்கும் ஆனந்தமயமான அமைதி நிறைந்த செல்வச் செழிப்பான வளமுடன் கூடிய நல் வாழ்வைத் தரவேண்டுமென எல்லாம் வல்ல சிவபெருமானைப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றேன்.

இன்னல்கள் மறைந்து, இடையூறுகள் நீங்கி, கஷ்டங்கள் விலகி, துன்பங்கள் கழிந்து எல்லோரும் இன்புற்றிருக்க எமது இதயங்கனிந்த, உளம் நிறைந்த நல்லாசிகள்.

"லோகா சமஸ்தா சுகிர்னோ பவந்து"

**சபரிமலை குருசுவாமி சபரீச தாசன்**
**"பிரதிஷ்டா பூஷணம்" "சிவாகம தத்துவநிதி"**
**பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக் குருக்கள்,**
பிரதமகுரு - நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில்.

SIVAKAMA GIRIYA BOOSHANAM
nainai swaminatha
**BALASUNTHARA KURUKKAL**
Aatheena Paramparai Kuru
SRI NAGAPOOSHANI AMMAN
THEVASTHANAM
Nainathivu
Sri Lanka.



சிவாகம கிரிய பூஷணம்
நயினை சுவாமிநாத
பாலசுந்தரக் குருக்கள்
ஆதீன பரம்பரை குரு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
தேவஸ்தானம்
நயினாதீவு
இலங்கை.

05 . 06 . 200[illegible]

# ஆசியுரை

அகில உலகமெங்கும் பரந்து விரிந்து வியாபித்து விளங்குவது இறைவன் பரம்பொருள் சக்தியாகும். நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை ஒரு உருவிற்குள் கொணர்ந்து நாமம் கொடுத்து வழிபாடு செய்து பக்தி செலுத்துவது மானுட மரபு. இதற்கமைய ஓர் ஆலயத்தை முறைப்படி அமைத்து விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து மஹா கும்பாபிஷேகம் செய்து, நித்திய நைமித்ய உற்சவங்கள் நடாத்தி இறைவனைத் தரிசிப்பது மானிடப் பிறவியின் பயனே எனக்கூறுவது மிகப் பொருத்தப்பாடு உடையது.

அண்டங்கள் எங்கும் வியாபித்து இருக்கும் இறைசக்தியை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு சிலை வடிவில் உருவம் கொடுத்து மந்திர, தந்திர, கிரியா, பாவனைமூலம் நிலை நிறுத்தும் கிரியை முறையே கும்பாபிஷேகம் அல்லது பிரதிஷ்டை எனப்படுகிறது. "திஷ்ட" என்கின்ற சமஸ்கிருத வினையடிக்கு "நிறுத்துதல்" என்பது பொருள். அத்தோடு "பிர" என்கின்ற உபசர்க்கம் இணைந்து "பிரதிஷ்டா" என ஆகும் பொழுது அதற்கு "நிலைநிறுத்துதல்" என்ற பொருள் உணர்த்தப்படுகிறது. கட்புலனிற்கு அகப்படாத தெய்வங்களை கண்ணெதிரே வடிவமைத்து நிறுத்தி மந்தி, தந்திர, பக்தி மார்க்கங்களால் வழிபாடு இயற்றும் வகையில் சிறந்ததொரு மார்க்கத்தை கும்பாபிஷேகங்கள் மூலம் ஆலயங்கள் ஆன்மாக்களிற்கு பக்தி மார்க்க உபாயங்களை வகுத்துத் தந்துள்ளன. இதற்கு எமது அருள் நிறை ஸ்ரீ மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயமும் விதிவிலக்கல்ல.

யாழ் நகரின் மத்தியில் சிறப்பு மிக்க சைவப் புலவர்கள், சித்தர்கள் வாழ்ந்த கைதடியூரில் உருப்பெற்று இன்று சிவாலயமாகப் பரிணமித்து அனைத்து அடியவர்களின் ஒத்துழைப்பாலும், சிவாச்சார்ய பெருந்தகையினரின் ஆசிகளோடு நடாத்தப்பெற்ற பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எனப்படுகின்ற

பெருஞ்சாந்தி இறையருள் மேலீட்டால் திருவருள் துணைகொண்டு இனிதே நிறைவெய்தியுள்ள இத்தருணத்தில் அடியவர்கள் யாவரும் இறையருள் இனிதே கிடைக்கப்பெற்று, நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவி, உயிர்கள் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ மாதாஜி லிங்கேஸ்வரரைப் பிரார்த்தித்து கும்பாபிஷேகத்தின் நிறைவான மண்டலாபிஷேக பூர்த்தியில் வெளிவர இருக்கும் கும்பாபிஷேக மலர் சிறப்புற அமைய எமது மனமுவந்த நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"லோகாசமஸ்தா சுகிநோ பவந்து"

சாதகசிரோன்மணி, சாதகாச்சார்யதிலகம்
பாலசுந்தர கணேஸ்வரக்குருக்கள்
நயினை.

ஸ்ரீராம ஜெயம்
Srirama Jeyam
வேதாகமகிரியா கலாபூஷணம் பிரதிஷ்டா கிரியாபானு
ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ. க.ச. சோமாஸ்கந்தக்குருக்கள்
பிரதமகுரு, பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
*Vedakama Kiriya Kalapusanam, Pirathisda kiriyabanu,*
**SRI VISHNU SRI K. S. SOMAASKANTHAKURUKKAL**
*Chief Priest, Ponnala Sri Varatharajapperumal Thevasthanam*

பொன்னாலை,
சுழிபுரம்.

*Ponnalai,*
*Chulipuram.*

# ஆசியுரை

மெய்யன்பர்களே!

சைவமும், தமிழும் புராணபடனங்களும், சித்தர்கள், யோகிகள் தியானித்து வணங்கிய பல சேத்திரங்களைக் கொண்டதுமான கைதடிப் புண்ணியபதியில் நர்மதா ஆற்றில் இருந்து கிடைக்கப் பெற்ற பாணலிங்கமாகிய காசிசேத்திரத்திற்குச் சமமான சிவபெருமான் லிங்கவடிவிலே அருளாட்சி செய்து அடியார்களை இரட்சித்துக் கொண்டிருக்கும் பெரும்பேறு இத்தலத்துக்குண்டு. மேலும் இந்த மாதாஜி ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் வரும் முழுநிலா காலத்தில் அதாவது (பௌர்ணமி) அன்று காயத்திரி மந்திர ஹோம ஆராதனை நிகழத் திருவருள் சித்தமாகி இருக்கின்றது. இப்படியான ஒரு சித்தர் பீடத்தில் மகத்தான கைங்கரியங்கள் நிகழ மேன்மேலும் திருவருள் கூட வேண்டுமெனப் பிரார்த்தித்து, அத்தொண்டுகளைச் செய்கின்ற அடியார்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் சகல வளங்களும் நிறையப்பெற்று இந்த ஆலயமும் முன்னுதாரணமாக அமையப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

**ஸ்ரீ விஷ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**



Aum

**SRI MATHAGI LINKESWARAR TEMPLE**

KAITHADI

**SRI KANDASAMY KOVIL**

KAITHADI



Sri Kandasamy Kovil
Kaithady West,
Kaithady.

Chef Priest
K. Umasutha Sarma

Rajasutham,
21/1A School Lane,
Kondavil West, Kondavil.
T.P : 021 4590047



# ஆசியுரை

பல வளங்களும் சீர்பூத்துத் திருவும் தழைத்தோங்கும் இயற்கை அழகும், வான் நோக்கி வளர்ந்த பனைமரங்களும், பச்சைப் பசேல் எனக் காட்சியளிக்கும் வயல் வெளிகளும், சை நற்சிந்தனையும் தமிழ் பண்பாடும், நிறைந்த மக்களையும் கொண்ட கைதடியூரிலே சிவ வழிபாடு ஒரு முக்கிய அம்சம் பெறுகிறது. சிவ வழிபாட்டில் அருவமுமாகவும், உருவமுகமாகவும் வழிபடலாம். இதில் லிங்கவழிபாடு சிவபெருமானுக்கே உரிய தனி முறையாகும். சிவ ஆலயங்களில் பெரும்பாலும் லிங்க வடிவில்தான் சிவனை வழிபடுகிறோம். இது சைவத்தின் ஒரு மகத்தான தத்துவம். 'சிவம் என்றால் மங்களம் என்று பொருள். சிவன் என்றால் சீவனுக்கு ஆதாரமானவன் என்றும் கொள்ளலாம்.

கைதடியூரில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள லிங்கமானது புண்ணியத்தலங்களில் ஒன்றான காசியிலிருந்து தருவிக்கப்பட்டது. இந்த பானுலிங்கமானது சுயமாகவே ஞானஒளியை வீசக்கூடியது. மந்திரகிரியைகள் எதுமில்லாமலே சுயமான சக்தி கொண்டது. இங்கு கும்பாபிஷேகம் நிகழப்பெற்று மாதாந்த பௌர்ணமித் தினத்தில் காயத்ரி ஹோமம் நிகழ்வது மிகவும் சிறப்பம்சமாக அமைந்துள்ளது. இங்கு கைதடி வாழ்மக்கள் மட்டுமன்றி பிறவூர் மக்களும் வந்து தரிசித்துச் செல்வதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாலயத்தை அமைப்பதற்கு அரும்பாடுபட்ட ஸ்ரீமான் இ. குழந்தைவடிவேலு அவர்கட்கும், கும்பாபிஷேக மண்டலபூர்த்தி விழாவின்போது மலர இருக்கும் மலரை அமைத்த Dr. சபாநாதன் அவர்கட்கும், மாதாஜி லிங்கேஸ் வரருடைய அருட்கடாட்ஷம் கிடைக்கவும் மற்றும் அடியவர்கள் யாவரும் ஆனந்தப் பெருவாழ்வு வாழவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கு. உமாசுதசர்மா

கைதடி மாதாஜி லிங்கேஸ்வர ஆலய மகாகும்பாபிஷேக விழா மலருக்கு

# ஆசியுரை

மலரில் அடியேனுடைய பங்களிப்பும் தேவை என்பதை உணர்ந்த குழந்தை ஐயா என்னுடன் கொழும்பிற்குத் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு அறியத்தந்தார். ஒரு மானிடமாகத் தோன்றித் தாயாக மிளிர்ந்து, எங்கள் எல்லோரையும் அரவணைத்து அன்பு வழிகாட்டி இன்று ஒரு பெரும் சக்தியாக ஆலய வடிவில் எங்களை வழிநடத்துகின்றார். மாதாஜி செல்லம்மா அம்மையார் அன்று அவரை தெரியாதவர்கள், வழிபட்டு அருள் பெறாதவர்கள் இன்று அவரைப் பூசிப்பதை இட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். அந்நிகழ்ச்சி அவரவர் செய்த புண்ணியத் திற்கு ஏற்றவாறு ஆண்டவனினால் கொடுக்கப் படும் நல்லாசிகள். எல்லாரும் நினைத்தபடி, நினைத்தவாறு இயங்கவோ ஒழுகவோ முடியாது. அந்தந்த எல்லைகளை இட்டு அதன்படி நடத்துகின்றார் இறைவன். இதை எல்லோரும் அறிவதும் இல்லை. அறிந்து நடப்பதுமில்லை. ஒரு ஆலயத்தை அமைத்து அவ்வாலயத்திற்கு கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்று ஒருவர் நினைத்தால் அது நிறைவேறாக்காரியம். ஆனால் அவருக்கு இந்த நிகழ்வு பொருந்துமா, பொருந்தமாட்டாதா? என்பது ஆண்டவன் திருவுளம். நீங்கள் அநேகமாக உங்களுடைய வாழ்நாட்களில் இதை அனுபவித்து இருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். அனுபவவாயிலாக சிலருக்கு இது தெரிந்திருக்கும். இந்த வழிகளில் வந்தவர்தான் குழந்தை ஐயா. அடியேனுக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே தான் ஐம்பது வயதில் குடும்ப ஓய்வுபெற்று சச்சிதானந்த ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்று மக்களுக்கு அவ்வாலயம் மூலமாச் சேவை செய்ய வேண்டும் என்று என்னிடம் கூறினார். நான் அப்போது என்மனதில் இவருக்கு இப்புண்ணிய கருமம் செய்தவற்கு வழி கிடைக்குமா? என்று என் மனதினுள் எனக்கே விடை தெரியாமல் நின்றேன். ஆனால் இன்று இப்புனித பணி அவருக்கு குடும்பத்தில் உள்ள பொறுப்புக்கள் நீங்கி, முழு மனத்துடனும் வீட்டில் உள்ளவர்களுடைய ஆசியுடனும் செய்வதற்குக் கிடைத்திருக்கின்றதை எண்ணி எண்ணிப் பெருமகிழ்வும் பேரானந்தமும் அடைகின்றேன். அவருக்கு ஆண்டவன் எல்லாம் வல்ல மாதாஜி செல்லம்மா அம்மையார் தொடர்ந்தும் வழிகாட்டியாக நின்று அவருடைய சமய, சமூகப் பணிகள் மிளிர வழிவகுக்க வேண்டும் என்று கூறி அன்புடன் அமைகின்றேன். வணக்கம்.

கு.கங்கைவேணியன், J.P.
பசுக்கள் இடபங்கள் பாதுகாப்பு அமைப்பு,
வேணி களஞ்சியம்.

# ஆசியுரை

காசியிலிருந்து தருவிக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கமானது அளவற்ற சக்தி கொண்டது. வணங்குபவர்களுக்குப் பாபங்கள் போக்கி வரங்கள் கொடுக்கும் சக்தி வாய்ந்தது. சிவபூசையினைத் தெய்வங்களே செய்துள்ளார்கள்.

ஏகமுதல்வர் விநாயகப்பெருமான், எங்கள் ஷண்முகநாதப் பெருமான், லோகநாயகி மகா திரிபுரசுந்தரி, பிரம்மதேவர், ஹரி, ஸ்ரீராமர், சூரியபகவான், சந்திரன், தேவர்கள் யாவரும் சிவலிங்க பூசை செய்து வரம் பல பெற்றார்கள். எனவே நாமும் சிவலிங்கப் பெருமானை வணங்கி வரம்பல பெறுவோமாக!

**சிவஸ்ரீ யோ.குருசாமிக்குருக்கள்,**
**பிரதமகுரு,**
**கைதடி இணுங்கித்தோட்டம்**
**கந்தசுவாமி கோவில்.**

# வாழ்த்துரை

கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய ஆவர்த்தன மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி தருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எண்பதுகளின் நடுப்பகுதியில், கைதடிப் பதியில் சிறிது காலம் கால்பதித்திருந்தேன். அப்போது அங்கு கண்ட இந்து சமயப் பாரம்பரிய நிகழ்வுகள், இந்துவுக்குரிய உயரிய கலாச்சார விழுமியங்கள், தமிழனுக்குரிய உயர்ந்த அடையாளமான "விருந்தோம்பல்" எனது மனதைக் கவர்ந்திருந்தன. அப்படிப்பட்ட மண்ணில் ஞானிகள், சித்தர்கள், யோகிகள் எனப் பல்வேறுபட்ட மகான்களது பாதங்களும் பதிந்து சென்றதை மலராசிரியரினூடாக அறிந்தேன். அந்த மண்ணில் தன் குருவுக்குத் தலம் அமைத்து கும்பாபிஷேகம் செய்கின்ற சிவதர்மவள்ளல் குழந்தைவடிவேலு அவர்களின் தொண்டினையும் அறிந்துள்ளேன்.

மாதாஜி லிங்கேஸ்வரரின் அருளொளி அனைவர்க்கும் கிடைக்கவும், ஸ்ரீமான் குழந்தைவடிவேலுவின் தொண்டு மென்மேலும் வளரவும் இம்மலர் எட்டுத் திசையும் மணம் பரப்பவும் வாழ்த்தி என் வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**வி.கணேசராசா,**
B.Com.(Cey), Dip.in.Eng., M.Ed.,
அதிபர், யாழ். இந்துக்கல்லூரி.

ஓம்
சத்து சித்து ஆனந்தம்

# வாழ்த்துரை

ஈழத்திருநாட்டில் சித்தர் பரம்பரை ஒன்று பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமாகின்றது. அதற்கு முன்னரும் பல சித்தர்கள் வாழ்ந்ததாக அறிய முடிகின்றது. சித்தர்கள் தாம் வாழ்ந்த இடங்களிற் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வழிபாடுசெய்து, பல சித்து விளையாட்டுக்களையும் ஆற்றியதாக அறிகின்றோம். கைதடிப் பதி பல ஞானிகளின் பாதம்பட்ட புண்ணிய பூமி ஆகும். இங்கு இணுவையூர் தந்த ஞானப்பெருமகன் ஸ்ரீ சச்திானந்தசுவாமிகளும் வாழ்ந்து அருளொளி பரப்பினார். சுவாமிகளின் பல சீடர்கள் தற்போது தியான மண்டபம் அமைந்துள்ள இடத்தில் சிறு குடிசை அமைத்து, இறைபணி செய்தனர். ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் மகா சமாதி அடைந்தபின் மாதாஜி செல்லம்மா சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமிகள் மற்றும் அவரது சீடர்கள் சேர்ந்து சுவாமிகளின் பெயரில் "ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்" அமைத்து இறைபணி செய்தனர். தினமும் தேவார பாராயண ஒலி கேட்டவண்ணமுள்ளது. திரு.இ.குழந்தைவடிவேலு அவர்கள் மாதாஜியுடன் இருந்து பல அறப்பணிகளைச் சிறப்பாக செய்து வருகையில் மாதாஜியும் மகாசமாதி அடைந்துவிட்டார். மாதாஜியின் சமாதிமீது மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் அமைக்கப்பெற்று குட முழுக்கு வைபவம் சிறப்பாக நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

கைதடி வடக்கு,
கைதடி.

செயலாளர்,
ஸ்ரீ வாலாம்பிகை தேவஸ்தான
பரிபாலனசபை.

# மலராசிரியரின் இதயத்திலிருந்து

ஆன்மீகச் செல்வங்கள் முன் அடியேனின்
பணிவன்பான வணக்கங்கள்.

கைதடி ஆனந்தநகர் அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவினைக் கண்டு ஆனந்தத்தில் இன்புற்றிருக்கும் அடியவர்களின் திருக்கரங்களில், அன்னையின் அருட்கடாட்சம் பெற்று, கும்பாபிஷேக மலரொன்றினை மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவன்று தவழவிடவேண்டுமென்று உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்து அருந்தொண்டாற்றிவரும் சிவநேசச்செல்வர் ஸ்ரீமான் குழந்தைவடிவேலு அவர்களின் பேரவா. அவ்விருப்பினை நிறைவேற்ற அடியேனுக்கு அன்னையின் அருள் கிட்டியது.

இம்மலர் ஒளிர்விட மனநிறைவோடு அருளாசி வழங்கி உதவிய ஆதீன முதல்வர், சிவாச்சாரியர்கள் ஆகியோருக்கும், வாழ்த்துரை வழங்கிப் பொலிவூட்டிய கல்விமான்கள், சிவதர்ம வள்ளல்கள் ஆகியோருக்கும் நன்றிகூறுவதுடன், அரும்பெரும் கருத்துக்களை உள்ளடக்கிப் பல ஆக்கங்களை உரிய காலத்தில் எழுதி அனுப்பிய அனைவருக்கும் நன்றி கூறுவதில் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். இப்பெரும் கைங்கரியத்தைக் கணினி மூலம் வடிவமைத்து உதவிய கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாதாஜி லிங்கேஸ்வரர் அருளால் மலரின் அருந்தி அனுதினமும் ஆனந்தத் திருக்கூத்தை இவ் ஆனந்த நகரில் அனைவரும் கண்டு களிப்போமாக.

அன்னையின் அடியவன்
சோ.சபாநாதன்

# பதிப்புரை

வரலாற்றுப் பெருமையும் வாழ்வியல் தத்துவங்களும் நிறைந்த புனித சமயமான சைவசமயத்தின் வளர்ச்சிக்காகக் காலத்துக்குக் காலம் சித்தர்கள், ஞானிகள், அறிஞர்கள் தோன்றி மறைந்துகொண்டு இருக்கின்றார்கள். இந்த வகையிலே எமது கைதடிக் கிராமம் பெருமை பெற்றதாகத் திகழ்கிறது. ஆத்மீகத்துறையிலும், வாழ்வியல்துறையிலும் போட்டிபோட்டு வளர்ச்சியடைந்து வருகின்றது. வாழ்வியல் துறையிலே முதியவர்களின் அன்புக்கும், பெருமைக்கும் உரிய முதியோர் இல்லமும், தொன்றுதொட்டு மக்கள் மத்தியிற் பேணப்படும் சித்த, ஆயுள்வேத வைத்தியசாலையும், சமூக மத்தியில் தாங்களும் போற்றப்படுகின்றோம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்ற நவீல் பாடசாலையும், அன்பும், பண்பும் நிறைந்த சிறுவர்களை வளர்த்து எடுக்கின்ற சிறுவர் இல்லங்களும் முன்னணியில் திகழ்கின்றன. ஆத்மீக வளர்ச்சியிலே இன்றும் கருணை உள்ளங்களிலே தங்களின் அருள்ஒளியை வீசிக்கொண்டிருக்கின்ற யோகர் சுவாமிகளும், மார்க்கண்டேய சுவாமிகளும், பேராயிரம் உடையார் எனப் பெயர்கொண்ட சச்சிதானந்த சுவாமிகளும் அவரின் வழித்தோன்றலான செல்லம்மா மாதாஜி அவர்களும், அவரின் சீடரான சுப்பிரமணியம் சுவாமிகளும் வாழ்ந்து அவர்களின் பாதம் பதிந்த அருளினாலே ஒரு சிவபூமியாக இன்று திகழ்கின்றது. செல்லம்மா மாதாஜி அவர்கள் தனது விதேக முத்திவரை எமது ஊரிலே வாழ்ந்த அருட்கடாட்சத்தினால் இன்று மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் தோன்றியுள்ளது.

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் மாணாக்கர்களுள் ஒருவரான பளையைச் சேர்ந்த சிவத்திரு கந்தையா சுவாமி அவர்கள் மாதாஜியின் சமாதிக்கு நித்திய பூசகராக இருந்தார். 2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு நேரத்திலும் குருவே துணை எனக்கொண்டு சமாதிக்கு பூசை செய்துகொண்டிருந்த பெருமை மாதாஜியின் தவத்தின் அருட்கடாட்சத்தை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

வலிகாம இடம்பெயர்வின்போது சிலகாலம் தங்கியிருந்த தெல்லிப்பளை யைச் சேர்ந்த துர்க்கா துரந்தரி, கலாநிதி, சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களையும் அவரது இல்லத்துப் பிள்ளைகளையும் என்னால் மறக்கமுடியாது. மாதாஜிக்குச் சில அன்பளிப்புக்கள் செய்தது மட்டுமல்ல; மாதாஜி

சமாதி ஆனது என அறிந்தவுடன் அதற்குத் தேவையான வாசனைப் பொருட்களுடன் வந்து சமாதி வைபவத்தைச் சிறப்பித்தமையும் மாதாஜியின் அருட்கடாட்சத்தை எடுத்து இயம்புகின்றது.

"நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே" என்ற மாணிக்கவாசகப் பெருமானின் மணிவாக்குக்கு அமைவாகப் பரம்பொருளின் திருவருளினால் செல்லம்மா மாதாஜி அவர்களின் தொடர்பு எனக்குக்கிடைத்தது வரப்பிரசாதம் ஆகும். 1917–07–28 திகதி கைதடியில் வாழ்ந்த கனகசபைக்கும், சடைப்பிள்ளைக் கும் மகளாக அவதரித்தார். இயற்கையாகவே ஆத்மீக உணர்வு தோன்றி இருந்தாலும் 17 வயதில் இல்லறத்தில் இணைந்தார். பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் தனது இல்லற வாழ்வை ஆரம்பித்தார். பூர்வ புண்ணிய பலனாக இல்லற வாழ்வில் நாட்டமில்லாத மாதாஜி 1958ஆம் ஆண்டு தனது குருவாகிய சச்சிதானந்தம் சுவாமிகளின் திருவுளப்படி சிறுகுடிசையில் தனது தவ வாழ்க்கையை மேற்கொண்டார். மாதாஜியின் தவவாழ்க்கைக்கு அவரின் சகோதரியான சோ.தங்கம்மா அவர்கள் காணியையும் அக்காணியில் தவக்குடிசையை வ.சின்னப்பு அவர்கள் அமைத்துக் கொடுத்தும் மாதாஜியின் மற்றைய தேவைகளை அவரின் சீடரான சுப்பிரமணியசுவாமிகளும் பூர்த்திசெய்து தவ வாழ்க்கைக்கு உறுதுணை புரிந்தார்.

ஆச்சிரம வளர்ச்சியில் 1967ஆம் ஆண்டு மடம் அமைக்கப்பட்டது. சச்சிதானந்த சுவாமிகளைக் குருவாகக்கொண்ட மாதாஜியின் ஞான வாழ்வு பரிணமிக்கத் தொடங்கியது. கொடிகாமத்தைச் சேர்ந்த திருப்புகழ்சுவாமிகள் மாதாஜியுடன் தங்கியிருப்பதாகக் கூறினார். அக்காலத்தில் தனக்கு சமாதிக் கிடங்கு ஒன்று வெட்டி அதற்குள் தன்னை சமாதி வைக்கும்படி கூறினார். ஆனால் மாதாஜியின் தவத்தின் வலிமையும் அருள் வார்த்தையும் பரம்பொருளின் அருட் கடாட்சமும் ஒன்றுசேர்ந்து திருப்புகழ்சுவாமியின் மனத்திலே அருள்ஒளி பொங்க, "அம்மாவைத்தான் இந்த கிடங்கிலே சமாதி வைக்கவேண்டும்" என்று கூறிவிட்டுத் தனது சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டார். இதே நேரத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் தொடர்பும் நெருங்கிக் காணப் பட்டது. வளர்ச்சி அடைந்துவரும் காலத்தில் மாதாஜியின் அருட்பார்வையினால் ஆத்மீக உணர்வு மேலோங்கி தாய் பிள்ளை உறவாக மாறியது. சந்திக்கும் நேரங்களில் அவர் கூறிய திருவார்த்தைகள், அருள்மொழிகள் என்பன எனது

மனத்திலே ஆழமாகப்பதிந்தது. மாதாஜியின் இறுதிக் காலங்களில் அடிக்கடி தனது சமாதியைப் பற்றியும் சமாதியில் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்றும் "ஒன்றுக்கும் பயப்படாதே" "நீ செய் குருநாதன் அருள் செய்வான்" எனக் கூறுவார். அத்தோடு வெளி அன்பர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கத் தவறவில்லை. இதனால் பாலர் பாடசாலை, யோகாசன வகுப்புக்கள், சமய வகுப்புக்களையும் மக்கள் பணியாக மேற்கொள்ளப்பட்டது. ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் நூல் வெளியீடு, தியான மண்டபம், தியான மண்டப நூல் வெளியீடு என்பவற்றையும் அம்மையாரின் தவ வாழ்க்கையில் மேற்கொள்ளப் பட்ட நிகழ்வுகள் ஆகும்.

நீயென நானென வேறில்லையென்னும் நினைவருளத்
தாயென மோனகுருவாகி வந்து தடுத்தடிமைச்
சேயெனக் காத்தனை யேபர மேநின்றிரு வருளுக்
கேயென்ன செய்யுங் கைம் மாறுளதோ சுத்தவேழையனே.

என்னும் தாயுமானவர் கூற்றுக்கு இணங்க எனது ஆச்சிரமப் பணிகள் வளர்ந்துவரும் காலத்தில் அம்மையாரின் தேகம் விடும் காலமும் அண்மித்துக் கொண்டிருந்தது. அவ் ஊரைச் சேர்ந்த குகதாசன் குடும்பத்தினர் அம்மையாருக்குத் தேவையான கடமைகளைப் பூர்த்தி செய்தனர். 2000ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 8.05 மணிக்கு நானும் திருமதி அன்னபூரணியும் நிற்க, தன்னைப் பத்மாசனத்தில் இருத்தும்படி அருள்வாக்குக் கூற நாங்களும் அப்படியே பத்மாசனத்தில் இருத்த, மாதாஜி அவர்கள் விதேக முத்தி அடைந்தார். இச்செய்தியைக் கேட்ட வெளியூர் அன்பரான கு.கங்கைவேணியன் அவர்கள் "தாய் இறைவனுடன் ஒன்றாகக் கலந்துவிட்டா" என்ற பேரானந்தத்துடன் சமாதிக்குத் தேவையான அபிஷேகப் பொருட்களுடன் வந்துசேர்ந்தார். அவர் இன்றும் அம்மாவின் பிள்ளையாகவே வாழ்கிறார் என்பதை என்னால் மறக்கமுடியாது.

மேலும் அம்மையார் விதேக முத்தி அடைந்தபின் சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த அருளொளி செல்லம்மா அம்மையார் அவர்களின் மகத்துவம் என்ற நூலும், சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த அருளொளி செல்லம்மா மாதாஜி என்ற நூலும் வெளியிடப்பட்டது. இவ் ஊரைச் சேர்ந்த இ.சுதாகரன் (சுதன்) அம்மையார் அவர்களுடன் சிறுபராயத்தில் இருந்து பழகி அம்மையாரின் அன்பையும் அருளையும் பெற்ற ஓர்

அன்பராவார். அதே போன்று டாக்டர் K.T.S.சபாநாதன் அவர்களும் அம்மையாரின் அருளாசியைப் பெற்ற ஓர் அன்பராவார். இவர்களே சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த அருளொளி மாதாஜி செல்லம்மா என்ற நூல் வெளிவர ஊன்றுகோலாக இருந்தார்கள்.

போரும், இடப் பெயர்வுகள், இழப்புக்கள், துன்பங்கள், ஏக்கங்களும் நிறைந்த இக்காலகட்டத்திலே அம்மாவின் திருவார்த்தைகளும், அருள்மொழிகளும் ஆழப்பதிந்து இருந்தது. "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என்ற கூற்றுக்கு இணங்க ஒரு லிங்கேஸ்வரர் அமைக்க வேண்டுமென்ற எனது மன ஏக்கத்தை அம்மையாரின் திருவருட்கடாட்சம் இன்று நிறைவேற்றி உள்ளது. தேசவிளக்காய்த் திகழ்ந்த அம்மையாரின் திருவருட்கடாட்சம் ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் திருவுள்ளம் புகுந்து என்னுடன் அடிக்கடி சிவலிங்க பிரதிஷ்டை பற்றி வினவிக் கொண்டிருந்தார். இதன் விளைவாக அவருடன் தொடர்புகொண்டு எனது உள்ளக் கருத்துக்களைத் தெரிவித்தேன். ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் திருவருட்கடாட்சமும், அருளொளி செல்லம்மா அம்மையாரின் தவத்தின் பேரின்பநிலையும் ஒன்று இணைந்து 2006ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 02ஆம் திகதி (பங்குனித்திங்கள் கார்த்திகை நட்சத்திரத்தில்) ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் தலைமையில் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்குக் கால்கோல் விழா நடைபெற்றது.

ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் அன்பரான மானிப்பாயைச் சேர்ந்த சிவத்திரு நவரட்ணம்ஜயா அவர்கள் இந்தியாவில் இருந்து லிங்கம் கொண்டுவந்து தந்தார். புண்ணிய பூமியாக விளங்கும் இந்தியாவில் அமைந்துள்ள காசிவிஸ்வநாதப் பெருமானின் நர்மதா ஆற்றிலே திருவுள்ளம்கொண்ட லிங்கேஸ்வர மூர்த்தி ஆகும். மேலும் விநாயகர், பாலமுருகன், சிவன், அம்மன், எழுந்தருளி வைரவர் போன்ற மூர்த்திகளை அராலியில் வசிக்கும் சிற்பாசாரியார் [illegible]வான் அவர்கள் வடிவமைத்துக் கொடுத்தார்.



ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் அருட்கடாட்சமும் அருளொளி செல்லம்மா அம்மையாரின் தவத்தின் மேன்மையையும் எடுத்து இயம்பும் ஒரு சின்னமாக 2008.05.06 அன்று அருள்ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய ஆவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அம்மையாரின் சமாதியிலே சிவன்

ஆலயத்தை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்வதும், அதைப்பார்த்து அனுபவிப்பதும் கைதடி மக்கள் செய்த ஒரு புண்ணியப்பேறாகும். சைவர்களாகப் பிறந்த நாம் முழுமுதற் கடவுளாகிய லிங்கேஸ்வரப் பெருமானையே தரிசிக்கின்றோம். இந்தியாவிற் பல கோயில்களும், நல்லூர், சந்நிதி போன்ற ஆலயங்களும் ஞானிகளின் சமாதியில் உருவாக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. காசி சென்று காசி விஸ்வநாதப் பெருமானைத் தரிசிக்கமுடியாத அடியார்கள், காசி விஸ்வநாதப் பெருமானின் திருவுள்ளத்தால் உருவான கைதடி மாதாஜி லிங்கேஸ்வரரைத் தரிசிப்பதன் மூலம் காசிவிஸ்வநாதப் பெருமானைத் தரிசித்த பெறுபேறினை அடைவீர்களாக.

42 வருடகாலமாக மக்கள் மத்தியிலே துறவறத்தை மேற்கொண்டு விதேக முத்தி அடைந்த அம்மையார் அவர்களின் சமாதியிலே மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் அமைக்கப்பட்டது பற்றி நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். என்றென்றும் லிங்கேஸ்வரர் அருட்கடாட்சத்தில் திளைப்போமாக. அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய மகாகும்பாபிஷேக மலருக்குப் பதிப்புரை வழங்குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் மானிடப்பிறவி எடுத்த பலனை நாம் அனுபவிக்க வேண்டும். இதனைத் தாயுமானவர் சுவாமிகளின் இப்பாடல் உணர்த்துகின்றது.

"காக முறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட நாமினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே"

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

என்றும் சிவப்பணியிலுள்ள
இ.குழந்தைவடிவேலு (ஜே.பி.),
தலைவர், மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்.

உ
சிவமயம்



அருள் ஞானமிகு

# மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்

## ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம், கைதடி

# ஆவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

சிவஞான பக்தர்களே,

பிரபஞ்சமெங்கணும் அணுவுக்கும், ஆன்மாவுக்கும் அசைவைக் கொடுத்து அகில லோகங்களையும் அருள்ஞான ஆட்சி செய்யும் பரம்பொருள்! இப்பூவுலகில் இந்துமா சமுத்திரம் ஈன்றெடுத்த முத்தாகத் திகழும் இலங்கைத் தீவகற்பத்தின் சிரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் கண்ணே ஆன்றோரும், சான்றோரும் வாழ்ந்து அருள்ஞானம் பெற்ற ஞானப்பதியாக மிளிரும் கைதடிக் கிராமத்தில் நிர்மல பிரம்மத்தை பேராயிரம் தவஞான நிட்டைசெய்து முக்தி ஆனந்தம்பெற முனை தவப்பதியாக ஒளிரும் ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தில் அக இருள் அகற்றி பரம ஆனந்த ஒளிவீச லிங்கேஸ்வர சுரூபம் தாங்கி நித்திய வாசமாகும் மந்திர மஹா கும்பாபிஷேகம்! நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் சித்திரை மாதம் 24ஆம் நாள் (06.05.2008) மங்களவாரமும் பிரதமைத் திதியும், கார்த்திகை நக்ஷத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 10.45 - 11.30 மணிக்குள் அமைந்த சுபவேளையில் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அடியார்கள், சீடர்கள், குரு பக்திமார்கள் அனைவரும் அருளொளிச் செல்வமாகப் பேராயிரம் ஒளி சேரும் இக் கும்பாபிஷேகத்தில் கலந்து மெய்யருள் வழிபாடியற்றி அவனருளால் அருளானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக!

| | |
|---|---|
| சித்திரைத் திங்கள் 20 ஆம் நாள் (02.05.2008) வெள்ளிக்கிழமை | காலை 8.10 மணியளவில் கர்மாரம்பம், அனுக்ஞை, பிரதிஷ்டா சங்கற்பம், மஹா கணபதி ஹோமம், 9.30 மணிமுதல் 10.30 மணிவரை சிவதீக்ஷை வழங்கும் நிகழ்வு இடம்பெறும். |
| சித்திரைத் திங்கள் 21ஆம் நாள் (03.05.2008) சனிக்கிழமை | காலை 8.00 மணிமுதல் நவக்கிரக ஆராதனை, வேத பதிக பாராயணம். |
| சித்திரைத் திங்கள் 22ஆம் நாள் (04.05.2008) ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணிக்கு கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, நூதன மூர்த்தி தான்யாதிவாசம், நயனோன்மீலனம், ஜலாதிவாசம், சயனாரோகணம். |
| சித்திரைத் திங்கள் 23ஆம் நாள் (05.05.2008) திங்கட்கிழமை | மாலை 4.00 மணிக்கு ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், யாகபூஜை, ஹோமம். மாலை 6.26 - முன்னிரவு 7.26க்குள் ஸ்தூபி, பீட, யந்திர, பிம்ப ஸ்தாபனங்கள். |

**(05.05.2008 மாலை 4.00 மணிமுதல் 06.05.2008 காலை 8.00 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவார்)**

| | |
|---|---|
| சித்திரைத் திங்கள் 24ஆம் நாள் (06.05.2008) செவ்வாய்க்கிழமை | காலை 7.00 மணிக்கு புண்ணியாகவாசனம், பூர்வபச்சிம சந்தானம், யாக பூஜை, ஹோமம், தீபாராதனை, சதுர்வேத, தோத்திர, தேவார பாராயணங்கள். கும்பங்கள் வீதியுலா 10.45 மணிமுதல் 11.30 மணிவரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். |

**சித்திரைக் கார்த்திகைத் திருநாள்முதல் வைகாசிக் கார்த்திகைத் திருநாள் வரை**
**பன்னிரு திருமுறைப் பாராயணம் தினமும் நடைபெறும்.**

| சர்வபோதகர் | பிரதிஷ்டா பிரதம குரு | சர்வசாதகர் | ஸ்தானிக குரு |
|---|---|---|---|
| சிவாகம ஞானபாஸ்கரன் பிரம்மஸ்ரீ நா.மகாதேவக் குருக்கள் (காயத்திரி பீடம், இணுவில்) | சிவாகம தத்வநிதி பிரம்மஸ்ரீ தாணு மகாதேவக் குருக்கள் (சட்டநாதர் சிவன் கோவில், நல்லூர்) | பிரம்மஸ்ரீ சோ. வேணுகோபால சர்மா (மாரியம்மன் தேவஸ்தானம், புங்குடுதீவு) | பிரம்மஸ்ரீ கு.சண்முகநாத சர்மா (கைதடி) |

**ஏனைய குருமார்கள்:**

பிரம்மஸ்ரீ கு. ஜெயந்துரை குருக்கள் (கைதடி) பிரம்மஸ்ரீ க. நரேந்திரக் குருக்கள் (கைதடி). பிரம்மஸ்ரீ குமார சுவாமிநாதக் குருக்கள் (இணுவில்). பிரம்மஸ்ரீ பால கணேசக் குருக்கள் (நயினை). பிரம்மஸ்ரீ யோ.குருசாமிக் குருக்கள் (கைதடி). பிரம்மஸ்ரீ கு.உமாசுத சர்மா (கொண்டாவில்). பிரம்மஸ்ரீ கு. கிருத்திக சர்மா (கைதடி)

**ஆசியுரை**
பிரம்மஸ்ரீ வி.சந்திரசேகரக் குருக்கள்
(பிரதம குரு, வீரகத்தி விநாயகர் கோவில், கைதடி)
பிரம்மஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள்
(பிரதம குரு, இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோவில், கைதடி)

**அருளுரை**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)

**மங்கள இசை**
நாதஸ்வர வித்துவான்
(கைதடி)

**ஆசாரி**
சில்ப பிரம்மஸ்ரீ ஜெயகுமார்
(அராலி)

**ஓதுவார்**
சிவத்திரு. த. ஆறுமுகம்
(கைதடி)

**பூமாலை**
கனகலிங்கம் ஐயா
(கைதடி)

**மண்டலாபிஷேகம் 45 தினங்கள் நடைபெறும். அபிஷேகம் செய்ய விரும்புவோர் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

குறிப்பு:- இப்புனித வைபவத்திற்கு நன்கொடை செய்ய விரும்புவோர் இலங்கை வங்கி, சேமிப்புக் கணக்கு இல: 10652, சாவகச்சேரி என்ற கணக்கில் வைப்பிலிடலாம்.

அடியார்கள் இப்புனித யாகத்திற்குத் தேவையான பால், தயிர், இளநீர், புஷ்பம், வில்வம், சமித்து முதலிய சிவத் திரவியங்களைத் தந்துதவி கும்பாபிஷேகத்திலும் அன்னதானத்திலும் கலந்துகொண்டு ஆனந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்
கைதடி. 30.04.2008
T.P: 021 222 5817

இங்ஙனம்

Harikanan Printers, Jaffna



மாதாஜி லிங்கேஸ்வரப் பெருமானுடன் பிரதமகுரு



பிரதம சிவாச்சாரியார்



ஆலயத் தொண்டன் குகதாஸ் குடும்பம்.



நல்லை ஆதீன குருமுதல்வர் சுவாமிகளை கௌரவித்தல்



பிரதான தண்ட யாகபூஜை



பிரதான கும்பங்கள் பிரதட்சணம்



வசந்தமண்டபப் பூஜை



தலைவரின் நன்றியுரை

### கைதடி, ஆனந்தநகர்

# மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் - தல வரலாறு

**வைத்திய கலாநிதி K.T.S சபாநாதன்**

இந்து சமுத்திரம் ஈன்றெடுத்த முத்து இலங்கைத்தீவு. இதற்குச் சிகரமாகத் திகழ்வது யாழ்ப்பாணம். யாழ்பாடி புகழ் தேடிய இவ்விடத்திலிருந்து தெற்கே 10 கிலோ மீற்றர் தொலைவில் அழகான தீபகற்பம் போன்ற ஒரு சிறு கிராமம். மூன்று பக்கமும் கடலாற் சூழப்பட்டு, பாலத்தால் இணைக்கப்பட்டு, பச்சைப் பசேலெனக் காலத்தால் மாறாது கண்ணைக் கவர்ந்து இழுத்தவண்ண மிருக்கும் அந்தக் கிராமந்தான் கைதடி. கிராமத்தின் நுழைவாயிலில் சைவச்சிறுவர் இல்லமும், முதியோர் இல்லமும், யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை, ஆயுள்வேத போதனா வைத்தியசாலை போன்றவை அமைந்துள்ளன. கிழக்குப் புறமாக வரலாற்றுப் பெருமை கொண்ட பிள்ளையார் கோவிலும், மேற்குப் புறமாக இணுங்கித்தோட்ட முருகன் ஆலயமும் வடக்குப் புறமாகக் கயிற்றசிட்டிக்கந்தன் ஆலயமும் திருவருள்மிக இருந்தவாறு இக்கிராமத்தைக் காத்தவண்ணம் திகழ்கின்றன. இவற்றின் மத்தியில் அமைந்ததுதான் ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம். அன்று குனிந்து செல்லக்கூடிய தவக்குடிசையாக இருந்தது. அந்த ஆனந்த நகரில் இன்று நிமிர்ந்த கம்பீரத்தோற்றத்துடன் காலத்தால் அழியாத கரும்கல்லிற் பொழிந்த தியானமண்டபம் ஒருபுறம்; அருளாட்சிபுரியும் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் மறுபுறம்.

பூஞ்சோலைகளும், மாஞ்சோலைகளும் பூத்துக்காய்த்துப் பொலிவுதர, பக்தி ஞானப் பரவச மூட்டும் பஜனைகள், பிரார்த்தனைகள் தினமும் எங்குமில்லாதவாறு நடந்து அடியவர்களைத் தன்பாற் கவரும் தலமாக மாறிவருவது கண்கூடு. தவக்குடிசை தலமாக மாறிய வரலாறு பற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

'ஒருமையுடன் நின்திருவடிகள் நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்' என்ற இராமலிங்க வள்ளலின் பாட்டை மீட்டுப் பார்க்கும்போது இவ்வாக்குக்கும் இவ்வாச்சிரம ஆலயத்திற்கும் ஒரு தொடர்பு இருப்பதையும், பக்திமார்க்கத்தில் பசிப்பிணி தீரப் புரட்சி செய்த சுவாமி இராமலிங்க வள்ளலாரின் ஞான திருஷ்டி ஆனந்த பூமிக்கும் கிட்டியுள்ளது போன்ற சிந்தனையையும் தூண்டுகிறது. ஏன்? தமிழகத்தில் ஒரு தவப் புதல்வன் இராமலிங்க வள்ளல். கைதடி வடக்கில் அவர் பாடல்களை உச்சரித்து "பாடீர் அவர் நாமம் வீடே பெறலாமே" என்றவாறு ஒரு இராமலிங்கம் - கனகசபை என்று ஒரு அடியார். இவர் இங்கே கனகசபையினுள் இறைவனுடைய திருநடனத்தைக் காண்கின்ற இராமலிங்கமாகத் திகழ்ந்தார். இராமலிங்கம் கனகசபை அவர்களுக்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடி, அவர்களது பெற்றோர்கள் அக் கிராமத்திலுள்ள சடைப் பிள்ளை அம்மையாரைத்

திருமணம் செய்து வைத்தனர். "இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நின்ற துணை" என்ற குறள் வழி வாழ்ந்து வருங்காலம் இறையருள் நன்மக்கட் பேறுகளாக இராமலிங்கம், தங்கம்மா, வேலாயுதபிள்ளை, செல்லம்மா தெய்வயானைப்பிள்ளை, முத்து லிங்கம், சரஸ்வதி என்போரைக் கனகசபை சடைப்பிள்ளை தம்பதியர் பெற்றெடுத்தனர். பிற்காலத்தில் ஆனந்த நகரில் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயமாகப் பரிணமிக்க செல்லம்மா அவதரித்தார். 1911.07.28 வேண்டுவதை வேண்டியோர்க்கு ஈந்த ஈசன் அருளால் திழைத்திருந்த குடும்பத்தினருக்குப் பிற்காலத்தில் ஒரு ஆன்மீக விருட்சமாகி, ஆலயமாக வர இருந்த நாலாவது குழந்தை செல்லம்மாவின் நிறைபற்றி அப்போது அறிந்தி ருக்கவில்லை. பெற்றோர் செல்லமாக வளர்த்த செல்லம்மாவைக் கல்வி கேள்விகளிற் சிறந்த பிள்ளையாக வளரவேண்டு மெனவும், அவயத்தில் முத்தி யிருக்க வேண்டுமெனவும் ஆசைப்பட்டு கல்வி கற்பிக்க ஆரம்பித்தனர். ஆன்மீக ஞானத்தால் மழலையிலே நிரம்பியிருந்த குழந்தைக்கு பாடசாலைக் கல்வி பாகற் காயானது. பக்திப் பாடல் கள் பாடுவதிலும் மண் ணிலே இறை விக்கிரகங் களைச் செய்து வீட்டிலே தனியறை அமைத்து தியானிப்பதிலும் அவளது பொழுதுபோனது. அத்து டன் தந்தையார் பாடும் இராமலிங்கவள்ளலாரின் பாடல்களை மனனம் செய்து படிப்பதும், தியானிப்பதும், அம்மையைப்போல் உடுப்பு உடுத்தி அலங்கரிப்பதும் அவளது பெற்றோரை வியப்புக்குள்ளாக்கியது. லௌகீக உலகில் வாழ்ந்துகொண்டிருந்த பெற்றோர் வளர்ந்து வாலைப் பருவம் எய்திய நிலையில் ஒரு மணாளனைத்தேடி திருமணம் செய்து வைத்தால், சாதாரண உலகியலுக்குள் திருப்பி விடலாம் என்ற உற்றார், அயலவருடன் கூடி ஒரு திருமணம் செய்ய விழைந்தவர், சாஸ்திர விற்பன்னர்கள் மூலம் ஒலைப் பொருத்தம் பார்த்தனர். 1934ஆம் ஆண்டில் வரலாற்றுத் தொன்மையும் அண்ட சராசரம் அனைத்தையும் பூத்தவண்ணம் காத்தருளுகின்ற யாழ்ப்பாணம் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய முகாமையாளர் செல்லத்துரையின் பொருத்தம் பார்க்கப்பட்டு, திருமணத்தைப் பெற்றோர் செய்துவைத்தனர். புகுந்த வீடு செல்லம்மாவிற்கு உலகியலின்படி ஒரு தேன்நிலவு மாடமாக அமையவில்லை. அவரது ஆன்மீகவாழ்வில் ஆனந்த வீடாக அமைந்தது. அப்போது செல்லம்மாவின் வயது பதினேழு.

அம்மையாரது 17வது பராயத்தில் திருமணம் நிகழ்ந்தது. மட்டுவிலில் கணவருடன் கணவரின் தாயாரும் இருந்தார். கோயிலின் உடைமைகளாகிய வயல், நிலங்கள், நூற்றுக் கணக்கான பசுக்கள், இன்னோரன்ன யாவும் முகாமையாளரின் பொறுப்பிலேயே இருந்தன. பல தொழிலாளர்கள் இவற்றைப் பராமரிக்கும் பொறுப்பில் இருந்து வந்தனர். செல்லம்மாவின் மாமியார் செல்லம்மாவை வீட்டு வேலைகளிலும் ஆலய வேலைகளிலும் தேர்ச்சி பெறும் வகையில் பலவற்றைக் கற்றுக் கொடுத்தார். விடிகாலை யில் பசுக்களில் பால்கறந்து ஆலயத்திற்கு எடுத்துச் செல்வதும், ஆலயச்சூழலைக் கூட்டிப் பெருக்குவதும் முக்கிய பணிகளாகும். செல்லம்மாவிற்கு இப்பணிகள் மிகவும் பிடித்துப்

போயின. எல்லாவற்றிற்கும் மேலாகக் கோயில் முதலாளியின் மனைவி என்பதிலும், பல ஏவ லாட்கள் தனக்கு உண்டு என்பதிலும், எல்லை யற்ற சொத்துக்களின் நிர்வாகி என்பதிலும் அவரை அறியாமலே அவருக்குள் கர்வமும், பெருமையும் வளர்ந்து வந்தன.

அக்காலத்தில் இவரது சிறு சிறு விருப்பங்களையெல்லாம் அம்பாள் நிறைவேற்றி வந்தாள். தாம் எது கேட்பினும் அம்பாள் நிறைவேற்றுவாள் எனும் உறுதியான நம்பிக்கை அவருள் வளர்ந்து வந்தது. அக்காலத்தில் அவரது விருப்பங்களெல்லாம் சேலைகளிலும், நகைகளிலுமே இருந்தது. இவ்வாறு தம்மை அலங்கரித்து அழகு பார்த்த செல்லம்மாவிற்கு எல்லாம்வல்ல அம்பாளையும் அலங்கரித்து அழகுபார்க்கும் விருப்பம் எழுந்தது. அம்பாளிற் குப் பலவிதமான அலங்காரங்களைத் தமது விருப்பப்படி செய்து, அழகு பார்க்கத் தொடங்கி னார். அம்பாளிற்கு முதல்நாள் கட்டிய சேலையை மறுதினம் அன்பர்கள் விருப்பப்படி தாம் கட்டிக்கொண்டு ஆலயம் வருவார். விசேடமாகத் தாம் அதிகமாக விரும்பும் நீலமாகக் காணும் பட்டுச்சேலையை அம்பாளிற் குக் கட்டுவித்து நகைகளும் போட்டு, அம்பாளின் உச்சியிற் கொன்றைப் பூவை இலையுடன் சூடி, தூர நின்று அம்பிகையின் அழகைப்பார்த்துப் பார்த்து பூரித்து விடுவார். இவ்வாறு அம்பிகையின்மீது அவரையறியாமலே அதீத ஈடுபாடு ஏற்படலாயிற்று. பட்டப்பகலிலும், கனவுகளிலும் சரி அம்பிகையின் காட்சி கிடைக்கப்பெறுவது அவவிற்குச் சர்வ சாதாரண மாயிற்று. பல அறிவுரைகளையும் அளவற்ற அன்பினையும் அம்பிகையிடமிருந்து பெற்று வந்தார் செல்லம்மா. அம்மையாரின் இந்நிலை ஒரு குழந்தையின் நிலையிலிருந்தது. தான் விரும்பியது கிடைக்கவேண்டும் எனத் தாயிடம் குழந்தை அடம்பிடிப்பது வழக்கம் அல்லவா? தாய் தனது அன்பினைக் குழந்தை மீது சொரிந்து பல சிறுசிறு அறிவுரைகளைக்கூறிக் குழந்தையை நல்வழிப்படுத்தும் பாங்கினையும் நாம் அறிவோமல்லவா? இங்கு செல்லம்மா என்னும் குழந்தைக்குப் பன்றித் தலைச்சி அம்பாள் அன்புமிகு தாயாக இருக்கத் தொடங்கி னாள். செல்லம்மாவின் அற்புத ஆன்மீக வாழ்விற்கான ஆரம்பத்தை உருவாக்க அன்னை திருவுளம் கொண்டாள் போலும். செல்லம்மாவின் மேற்கூறிய நிலைகளிற்கு உதாரணமாக அக்காலத்தில் அவர் வாழ்வில் நிகழ்ந்த சில சம்பவங்களை இனிக்காண்போம்.

வழமையிற் செல்லம்மா, அம்பாளின் சமாதியைக் கூட்டிப் பெருக்குவதுண்டு. ஒரு தினம் இருவர் அம்பாளின் ஆலயத்தைக் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருக்கும்போது பல அடிய வர்கள், கோவிற்பணி யாளர்கள் ஆகியோருடன் பழகுவதுகண்டு அவரை ஏளனமாகச் சிலர் பேசுவது கண்டு செல்லம்மா மன முடைந்து, அம்பாளைப் பார்த்து "கண்கெட்ட நீயும் இதைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாயோ" என அழுது முறையிட்டு விட்டு வீட்டிற்குப் போய்விட்டார். அன்று இரவு அவரின் கனவிலே ஒரு சிறுபெண் பரட்டைத் தலையுடன் தோன்றினாள். அவள் ஆடு, மாடு மேய்க்கும் ஒரு சிறுமிபோல் தென்பட்டாள். அம்மையார் அவசரமாக ஆலயத்திற்குப் புறப்பட்டவர்

அச்சிறுமியைக் கண்டதும் சிறிது தள்ளி நின்றார். அச்சிறு பெண்ணின் ஒரு கண்ணின் கருமணி தெரியாமல் வெள்ளையாய்த் தெரிவது கண்டு; அது ஏன்? என அம்மையார் கேட்கவும் அச்சிறுபெண் "எனக்குக் கண் கெட்டது உனக்குத் தெரியதோ" எனக் கேட்க; செல்லம்மா கனவினின்றும் கண் விழித்து, தாம் கவலையில் அம்பாளைக் கண்கெட்டவள் என்று கூறியதை நினைத்துத் தம்பிழை பொறுக்குமாறு வேண்டி அழுதார். இங்கு சிறுமியாகத் தோன்றியது அம்பாளே என்பது தெளிவு.

இன்னுமொருமுறை செல்லம்மா ஒரு தங்கச் சங்கிலி செய்து அம்பாளிற்கு அணிவிக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டார். இதற்காகப் பலரிடமும் பண உதவி கேட்டுச் சேகரித்து வந்தார். இது தொடர்பாகச் சின்னத் தம்பி என்னும் பெண்மணியிடம் சென்று விடயம் கூறினார். அதற்கு அப் பெண்மணி அம்மையாரைப் பலவாறாகவும் வைது "நீயும் அம்பாளோட சேர்ந்து ஆட வாறாய் போ போ" என்று பரிகாசம் பண்ணி அனுப்பி விட்டார். இதனால் செல் லம்மா மனமுடைந்து கவ லைப்பட்டார்.





இச்சூழ்நிலையிற் செல்லம்மாவிற்குக் கடும் சுகயீனம் ஏற்பட்டது. இதனால் இவரை மானிப்பாய் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அவர் தங்கவைக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டு வந்தார்.

இந்நாளில் செல்லம்மாவின் தாயாரும் உறவினர்களும் வண்டில் ஒன்றில் வைத்திய சாலைக்கு வந்து கொண்டிருந்தனர். அப்போது கோப்பாய் பாலத்தடியில் ஒரு கருமை நிறமான வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவர் தாமும் வைத்தியசாலைக்குப் போவதாயும் ஒருவனைப் பார்க்க வேண்டும் என்றும் தம்மையும் ஏற்றிச் செல்லுமாறு கேட்க, இவர்கள் மறுத்து விட்டனர். பின் இவர்கள் வைத்தியாசலையிற் சென்ற டைந்ததும் செல்லம்மா யாருடனோ கதைத்துக் கொண்டிருந்தார். ஆனால் மற்றவர் கண் களிற்கு எவரும் புலப்படவில்லை. பின் செல்லம்மாவிடம் அவர்கள் இதுபற்றிக் கூற செல்லம்மாவும் அப்பெண்மணியின் குறிப்பு களைக்கூற இவர்கள் அதிர்ச்சியும், கவலையு முற்றனர். வந்த முதிய பெண்மணி பன்றித் தலைச்சி அம்பாள் அல்லவோ, தாங்கள் தவறு செய்து விட்டோமே எனக் கவலையுற்றனர். அம்பாளிடம் தம்பிழை பொறுக்குமாறு வேண்டி னர். இவர்களிடம் கோப்பாயில் கதைத்த அதே பெண்மணிதான் செல்லம்மாவை வைத்திய சாலையில் சந்தித்ததும். அது சாட்சாத் அம்பிகையே என்பதும் குறிப்பால் உணர்த்தப் பட்டது. இந்நாளில் முன்பு செல்லம்மா அம்பாளிற்குச் சங்கிலி செய்வதாகப் பணம் கேட்டிருந்த சின்னத்தங்கம் எனும் பெண்மணி செல்லம்மாவிடம் வந்து அழுது, தமது பிழைபொறுக்குமாறு வேண்டி, அம்பாளைத் தான் கனவிற் கண்டதாயும், தனது படுக்கையில் தமக்கருகில் அமர்ந்து அம்பிகை ஒரு பழைய பையைத் தலைகீழாகப் பிடித்துப் கொட்ட அதிலிருந்து விதம்விதமான தங்க நகைகள் வீழ்ந்ததாகவும், பின்பு அம்பாள் "பாத்தியோ, என்னட்டை எவ்வளவு நகையள் இருக்கு தெண்டு; எண்டாலும் அவள் (செல்லம்மா) ஆசைப்படுகிறாள் எனக்கு நகைபோட வேணு மெண்டு" என்று கூறி மறைந்ததாகவும் கூறி

செல்லம்மாவிடம் பவ்வியமாக மன்னிப்புக் கோரி, நகைக்கு வேண்டிய பணமும் கொடுத்தார். இச் சம்பவங்களால் செல்லம்மாவின் உள்ளம் நெகிழ்ந்து போனது. அம்பிகையின் கருணை யின் லீலையையும் எண்ணிக் கண்ணீர் பெருகத் துதித்தார்.

இதுபோன்று இன்னுமோர் சம்பவம் இங்கு நினைவுகூரத்தக்கது. செல்லம்மா அடியவர் தொண்டு, கோயில் திருப்பணி என்று பல வழிகளிலும் செலவு செய்ததனால் அவர் கையில் பணமுடக்கம் ஏற்பட்டது. செல்லம்மா வும் பணமுடக்கம் காரணமாகத் தமது திருப் பணிகளிற் குறைவு வந்துவிடுமோ என் றெண்ணி அம்பாளிடம் முறையிட்டழுதார். அன்றைய தினமிரவு கனவிலே ஒரு சிறு பெண் தோன்றி "நான் மாத்தளைக்குப் போயிட்டு வாறன். போன லொறிகளிலை ஏறிப்போன னான். அங்கை சமைச்சுக் கொடுத்தனான். காசு வேணுமென்று கேட்டால் எல்லாரும் கை விரிக்கினம்" என்று கூறினாள்.

மேற்படி கனவுகண்டு ஒரு வாரத்தில் மாத்தளையில் வசித்து வந்த ஞானசேகரம் என்பவர் செல்லம்மாவின் வீட்டிற்கு அதிகாலை யிற் காரில் வந்து இறங்கினார். செல்லம்மா கோயிலைக்கூட்டிக் கொண்டிருந்தார். ஞானசேகரம் கோயிற்படி ஏறக் கண்டதும் செல்லம்மா, "என்ன? அவ (அம்பாள்) அங்க வந்தவவாம்?" என்று கேட்டார். ஞானசேகரம் "அவ சொல்லித்தானே நான் வந்தனான்" என்று கண்ணீர் சொரியக்கூறினார். பின்பு அவர் ஆலயத்தைச் சுத்தி வழிபட்டுவந்து அம்மையாரிடம் ஒரு தொகைப்பணமும் ஒரு தேயிலைப் பைக்கற்றும் கொடுக்கிறார். செல்லம்மாவும் "இது என்ன கணக்கு; என்று ஞானசேகரத்திடம் கேட்க "கணக்கு உங்களிற் கும் அவவிற்கும்(அம்பாள்) தான் உள்ளது எனக்கொண்டும் தெரியாது" என்று கூறிச் சென்றார்.

மேற்கூறிய சம்பவங்கள் எல்லாம் செல்லம்மாவின் வாழ்வில் நிகழ்ந்த சம் பவங்களில் ஒரு சில எடுத்துக்காட்டுக்களே யாகும். நாளாந்த வாழ்வில் ஒவ்வொரு தினமும் அம்பாள் தன்மீது அருள் கூர்ந்து கண்மணி போலப் பாதுகாப்பதை அம்மையார் கண்டும் உணர்ந்தும் வந்தார்.

இச்சம்பவங்கள் பற்றி அவர் பிற்காலத் திற் கூறும்போது 'அவள் (அம்பாள்) எனக்கு ஆசை காட்டினாள். தன்னை முழுமையாக நான் நம்ப வேண்டும் என்பதற்காக நான் கேட்ட தனைத்தையும் எனக்குக் கொடுத்தாள். நான் இழுத்த இழுப்புக்கெல்லாம் என்னுடன் ஆடி னாள். அவள் ஏன் இப்படிச் செய்கிறாள் என்பதன் உண் மையான விளக்கம் எனக்கு அப்போது விளங்கவில் லை" என்று குறிப்பிடுவார். அம்பாள் ஏன் இவ்வண்ணம் செய்தாள் என்பது இவ்வர லாற்றினைத் தொடர்ந்து படிக்கும்போது உங்களிற் குப் புரியும்.

இதேகாலப்பகுதி யில் (1938) இன்னுமோர் குறிப்பிடத்தக்க சம்பவம் நிகழ்ந்தது. இது அம்மை யாருக்கும் நயினாதீவுச் சுவாமி என்றழைக்கப்படும் முத்துச்சுவாமி அவர் களிற்குமிடையிலான

சந்திப்பேயாகும். இது பற்றி இங்கு பார்ப்போம். செல்லம்மா ஒருநாள் ஆலய வீதியைக் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்தார். அவ் வழியே வந்த முத்துச்சுவாமி அவர்கள், "அட நீ உவளுக்கு (அம்பாளிற்கு) உப்படி பார்த்துப்பார்த்துச் செய்தியெண்டால், உவள் உன்னைச் சும்மா விடமாட்டாளே! உன்னை மினுக்கிப் (பரிசுத்தமாக்கி) போடுவாளே! அ.. அ... பொருள் கூட்டு" என்று கூறிச்சென்றார். இதன் உண்மைப்பொருள் அப்போது செல்லம்மாவிற்குப் புரியவில்லை. இது பற்றி அவர் கூறுகையில் "ஷ.... ஷ... நான் அப்ப ஒரு பேக்கட்டை" ஞானம் என்டால் என்ன என்றே எனக்குத் தெரியாது. அந்த மகான் முத்துச் சுவாமியின் கூற்று நூறு சதவீதம் உண்மையானதன் பிறகுதான் நான் கண்டன்" என்பார்.

இதன் பின்பொருமுறை கோயில் வீதியில் தீர்த்தக் கேணியடியில் முத்துச் சுவாமியவர்களை இருத்தி ஒரு பக்தர் அபிஷேகம் செய்வதைக் கண்ணுற்றார். செல்லம்மா தமது வேலைகளை அப்படியே போட்டுவிட்டு இக்காட்சியைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அபிஷேகம் முடிந்ததும் அப்பக்தர் சுவாமிகளிற்கு ஈரம் துடைத்து அன்புடன் வணங்கி ஆசிபெற்றுச் சென்றார். அப்போது செல்லம்மா சுவாமியிடம் சென்று தமது இல்லம் வந்து உணவு ஏற்குமாறு வேண்டினார். அவரும் சம்மதித்துச் செல்லம்மாவின் வீட்டிற்குச் சென்றார். அங்கு உணவு ஏற்பாடுகளை முடித்து, சுவாமிகளை உணவு ஏற்குமாறு செல்லம்மா வேண்டி நின்றார். அப்போது சுவாமிகள் தமது வாயில் வெற்றிலைச் சக்கை வைத்திருந்தார். அதை என்ன செய்வது எனச் சைகையால் கேட்டார். செல்லம்மா கையை நீட்டி அதில் துப்புமாறு வேண்ட, சுவாமிகளும் அவ்வாறே செய்தார். செல்லம்மா அச் சக்கையைப் பெற்று அப்படியே தம் வாயில் போட்டு விழுங்கி விட்டார். இதைக் கண்ணுற்ற சுவாமிகள் "ஓ! செல்லம்மா இனி உனக்கென்ன குறை?" என்று கூறி நெகிழ்ந்தார். ஆம்; மனது காட்டும் பேதாபேதங்களும் நீங்கி; இது நல்லது; அது தீது என்பதான பாவனையை விடுத்ததாகச் செல்லம்மாவின் செய்கை இருந்ததாற் செல்லம்மா அடைந்திருந்த சித்தசுத்தி நிலையைப் பாராட்டினார். இனிவரும் சந்தர்ப்பங்களில் நாம் செல்லம்மாவினை அம்மையார் எனவே விழிப்போம்.

1952ஆம் ஆண்டு இந்தியாவைச் சேர்ந்த நித்தியானந்தப்பா எனும் சந்நியாசிப் பெரியார் இலங்கை வந்திருந்தார். யாழ்ப்பாணம் வந்த அவர் அம்மையாரின் வீட்டில் தங்கியிருந்தார். இதனைக் கேள்விப்பட்டுப் பல அன்பர்களும், அடியவர்களும் அவரை வந்து பார்த்து, வணங்கி, ஆசிபெற்றுச் சென்றனர். இப்படியான ஒரு சூழ்நிலையில் இங்கு வந்த இளம் துறவிதான் அம்மையைப் பின்பு ஆட்கொண்டு அருளியவர் ஆவார். இவர் கந்தர்மடத்தில் அமைந்துள்ள வேதாந்த மடத்தின் ஸ்தாபகரும், பெரும் மகானுமாகிய ஸ்ரீமத் மகாதேவா சுவாமிகளின் நேரடிச் சீடராவார்.

ஒரு தினம் பிற்பகல் அம்மையாரின் வீட்டுவாசலில், "அம்மா பிச்சை" என்னும் கீச்சுக்

குரல் கேட்டது. அம்மையார் வெளியே வந்து பார்த்தார். ஓர் இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயது மதிக்கத்தக்க ஓர் இளம் துறவி உச்சிக்குடும்பியும், அடர்தாடியும், மடித்துக்கட்டிய அழுக்கேறிய நான்கு முழ வேட்டியுமாக நின்றார். அம்மையாரும் இவரைப் பார்த்துவிட்டு உள்ளே சென்று நித்தியானந்தப் பாவிடம் விடயம் கூறினார். "ஷ... ஷ... ஆரோ சோதனையில பெயில் பண்ணின பெடியன்போல கிடக்கு" என்று அம்மையார் கூறினார். நித்தியானந்தப்பாவும் அம்மையாரிடம் பிச்சை என்று கேட்பவர்க்கு ஏதும் உண்ணக் கொடுக்குமாறு கூறினார். அம்மையாரும் சரியென்று கூறினார். ஆனால் சமையலறையிற் சென்று பார்த்தபோது உணவேதும் இருக்கவில்லை. அன்று மதியம் சோறு வடித்த கஞ்சியைக் கொடுக்கலாம் என எண்ணினார். ஓர் பாத்திரத்திற் கஞ்சியை எடுத்துக்கொண்டு ஒரு சிரட்டையையும் எடுத்துவந்தார். இளம் துறவியிடம் சிரட்டையைக் கொடுத்து, பாத்திரத்தைச் சற்று உயர்த்திப் பிடித்து, கஞ்சியை சிரட்டைக்குள் வார்த்தார். இளம் துறவியின் உடலிற் படிந்திருந்த அழுக்கும், அவரின் அழுக்கு ஆடைகளும் அம்மையாரை இவ்வாறு செய்ய வைத்தது. இளம் துறவியாரோ வேர்வை வழிய வழிய, அவ்வேர்வையும் கஞ்சியுள் விழவிழ மடக்மடக் என்று கஞ்சி அவ்வளவையும் குடித்து முடித்து விட்டுச் சிரட்டையை ஒருபுறம் வீசி எறிந்து விட்டுத் தம்போக்கிற் சென்றுவிட்டார்.

இளம் துறவியாரின் இச்செயல் அம்மையாரிற்கு வியப்பாகப்பட்டது. "பசிக்குக் கஞ்சி வார்த்தால் ஒரு நன்றி கூடச் சொல்லாமல், அட போட்டு வாறன் எண்டு கூடச்சொல்லாமல் இவர் போகிறாரே!" என்று வியப்படைந்தார். அந்த இளம் பிரம்மதானியின் அனுபூதி நிலையை அம்மையார் அப்போது அறிய வில்லையாதலால் அவர் அவ்வாறு நினைத்தார்.

இன்னுமோர் தினம் அந்தி சாய்ந்து சிறிது நேரத்தில் மிகக் கடுமையான மழை பெய்து கொண்டிருந்த வேளையில், அம்மையார் வீட்டுப் படலையில் "அம்மா பிச்சை" என்னும் குரல் கேட்டது. அதே கீச்சுக்குரல். அம்மையார் சென்று பார்த்தபோது முன்பு தாம் கண்ணுற்றவரே மழையில் தெப்பமாக நனைந்தபடி நின்றிருந்தார். அம்மையாருக்கு உள்ளம் நெகிழ்ந்து போயிற்று "ஓ!" அம்மாளாச்சி, உன்னை நம்பித் துறவு கொண்டவர்கள் இப்படியெல்லாம் கடினப்பட வேண்டுமா?" என்று அம்பாளை நினைந்த படி சுவாமிகளை வீட்டிற்கு வருமாறும் உடையெல்லாம் நனைந்து விட்டதனால் வேறு உடை தருவதாகவும் உணவருந்தித் தங்கள் வீட்டில் தங்கிச் செல்லுமாறும் கேட்க, இளம் சுவாமிகள் தமது கீச்சுக் குரலில் 'வேண்டாம் நான் இந்த வேட்டியை பிழிந்து போட்டுக் கட்டுறன். இரவு கோயிலடியில் தங்கிறன்" என்று கூறினார். இதனிடையே அம்மையாரின் கணவர் செல்லத்துரையும் அவ்விடம் வந்து ஒருவாறு சுவாமியை அழைத்து வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். சுவாமிகள் நீராட ஏற்பாடு செய்து புதிய வஸ்திரமும் கொடுத்து அணியச் செய்து, அவரை அமுது செய்வித்தார். சிறிது நேரம் உரையாடிவிட்டு சுவாமிக்கு

வெளித்திண்ணையிற் படுக்கை விரித்து அவரை அதில் துயிலச் செய்துவிட்டு, அம்மையாரும் கணவரும் வீட்டிற்குள்ளே படுத்துக் கொண் டனர்.

அவர்கள் துயில்கொண்டு சில மணி நேரத்தில் அம்மையாரின் கனவில் தோன்றி னாள் "அவன் யார் தெரியுமா?" எனது தவப் பிள்ளை. அவனை வெளியில் இருட்டிலை விட்டு நீங்கள் உள்ளே படுத்திருக்கிறீர்கள். அவனடி யில் ஒரு விளக்கையாவது வைத்து விடுங்கள்" என்று கூறி அம்பாள் மறைந்து விட்டாள். அம்மையார் எழுந்து கணவனாரை எழுப்பி விடயம் கூறினார். பின் துறவியின் தலைப் பாகத்தில் ஒரு விளக்கை வைத்து விட்டுப்படுத்துக் கொண்டார். காலையில் எழுந்ததும் அந்த விடயத்தை இளம் துறவியா ருக்குக் கூறினார். அதைக் கேட்ட அவர் "ஓ!" அப்படியே" என்று கூறிச் சென்றுவிட்டார். அவ்விளம் துறவியின் பிறப்பு, இணுவில் சிவகாமி அம்மனுடன் தொடர்புபட்டது. இனிமேற் கொண்டு இவ்வரலாற்றில் இவ்விளம் துறவியை 'சுவாமி' என்றே நாம் விழிப் போம். அம்மையார், சுவாமிகள் பக்திப்பிரவாகத் திற் பலமுறை தொடர லாயின. இந்நிலையில் அம்மையார் தமக்குள்ளே ஒரு விளக்குச்சுடர் தெரிவ தாயும் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் அவ்விளக்குக்கு அருகில் தமது உச்சிக் குடுமியில் ஓர் அடுக்கு நந்தியாவட்டைப்பூ சொருகியிருக்க அமர்ந்தபடி இருப்பதையும் கண்டார்.

இந்நிகழ்வின்பின் அம்மையார் கணவரு டன் குடும்ப வாழ்வில் ஈடுபட மறுத்தார். அவர் தானும் சுவாமியைப்போலத் துறவு நிலையை அடைய வேண்டும் என்று நினைத்து, நினைப் பைச் சுவாமிகளிடம் தெரியப்படுத்தினார்.

பன்றித்தலைச்சி அம்மன் ஆலய மகாமண்டப சந்நிதானத்திற் சுவாமிகளும் அம்மையாரும் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டனர். சுவாமிகள் தீட்சை வழங்க ஆயத்தமானார். அம்மையாரிடம் "உனக்குத் தாயாக, தந்தையாக, குருநாதனாக நின்று உன்னை ஆட்கொள்ளும் எனக்கு, உன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒப்புக்கொடு" எனக்கூறினார். அம்மையாரும் அவரின் கையில் இவை அனைத்தையும் மானசீகமாய் ஒப்படைத்தார். இதன்பின் சுவாமிகள் அம்மை யாரிற்கு மந்திரோபதேசமும் திருவடி தீட்சையும் வழங்கினார். இந்நிகழ்வுக்காலம் 1958. பன்றித்தலைச்சி அம்மன் முதலாளியின் வீட்டிலிருந்த கால்கள் மீண்டும் கைதடியை நோக்கி நடக்கத் தொடங்கிய காலம்.

சுவாமிகள், அம்மையார் கைதடியில் தவம் முடிப்பதே பெருமையானதென நினைத்து ஒரு தவக்குடிசை அமைப்பதற்காக ஏற்பாடு களை வைத்தியர் சின்னப்பு மூலம் செய்தார். அம்மையார் தவமிருந்த அந்தக் குடிசையே இன்று ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமமாகி மிளிர் கிறது. அம்மையார் காலத்தில் ஆரம்பப் பாடசாலை, ஏழைகளுக்கான அறக்கட்டளைத் திட்டங்கள், இலவச மருத்துவ முகாம், ஆன்மீகச் சொற்பொழிவுகள், சுவாமிகளின் குருபூசை

என்று பல்வேறு ஆக்கப்பணிகள் அங்கு நடந்த வண்ணமேயிருந்தன. ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள், செல்லம்மா அம்மையார் வழி நிலையில் வாரிசாக வந்து அம்மையால் ஆட்கொள்ளப்பட்டவர். ஸ்ரீமான் குழந்தை வடிவேல் அவர்களின் பிரசன்னத்தினாற்றான் ஆசிரமம் ஆனந்தநகராயிற்று. அதிசயிக்கத் தக்க பிரமாண்டமான கலைக்கூடமாக, தியான மண்டபம் கைதடியைத் திருக்கைலைக்கு உயர்த்தியவாறு காட்சிதரும், காசி விசுவநாதருக்கு ஒப்ப அமைந்துள்ள மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்.

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளது அருளொளிப் பிரகாசம் செல்லம்மா மாதாஜியாலும், மாதாஜியின் பிரகாரம் ஸ்ரீமான் குழந்தை வடிவேலுவாலும் பிரகாசிக்கத் தொடங்கியது.

"தொட்ட இடம் துலங்க வேண்டும், தாய்க்குலமே வருக. கைபட்ட இடம் கண்மலரும். தாய்க் குலமே வருக" என்ற நிலையை நிறுத்த, அம்மையின் மனதிற் கருக்கொள்ளப் பல்வேறு ஆன்மீக வரைபுகளைக் குழந்தை வரையத் தொடங்கினார். அவ்வரைவுகள் காலத்தால் அழியாது. இந்து நாகரிகத்துறையினர்க்கு ஒரு ஆராய்ச்சி மையமாக்கியுள்ளார் என்றால் மிகையாகாது.

06.06.1997 அன்று தவக்குடிசை தலமாக மாறுவதற்கான தியான மண்டபக் கால்கோள் வைபவம் ஏற்பாடாயிற்று. வேதாந்த மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள் முன்னைய தொடர்பை வலுப்படுத்துமாப்போல் உரிய நேரத்திற்கு வருகைதந்து தவமியற்றியவாறு இருந்தார். நல்லை ஆதீன பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற ஞானசீலர்களாலும், அன்பர்கள், அடியவர்கள் புடை சூழ்ந்து வாழ்த்திய வண்ணமிருந்தனர். துர்க்கா துரந்தரி அவர்களால் தியானமண்டபம் அடிக்கல் நாட்டப்பட்டது. அம்மையாரின் தவவாழ்விற்குத் தக்க துணையாக இருந்த சகோதரி தங்கம்மா இதனைப் பார்த்ததுடன், தனது மூக்கு மின்னியைக் கழற்றி அத்திவார அடிக்கல்லில் வைத்தார். 09.09.1998 அன்று தியான மண்டபமும், அந்தண சிரேஷ்டர்களின் ஆசியுடன் திறக்கப்பட்டது.

மாதாஜியின் தவச் செல்வன் ஸ்ரீமான் குழந்தைவடிவேலுவின் செயற்பாடுகள் பற்றி அம்மையார் கூறும்போது, சுருக்கமாக "செயற்கரிய செய்வார் பெரியர்" என்று மட்டும் கூறுவார். அது மட்டுமன்றி, குழந்தையின் மன உறுதி பற்றியும், இருமையினைக் கடந்து ஒருமையினைக் காண விழையும் தன்மையும் அறிந்து பிற்காலத்தில் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளது பணிகள் எவ்வித இடையூறுமின்றி எடுத்துச்செல்லப்படும் என்று அறிந்து கொண்டார்.

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளினது திருவுருவை நேரிற் காணாது சுவாமிகளது சமாதி நிலையின் பின்பு அவதரித்து, அவருடைய மானஸ தீட்சையை ஏற்று, மாதாஜி முன்னிலையில் குருவாக ஏற்று, முக்காலும் மகான் ஸ்ரீ

சச்சிதானந்த சுவாமிகளைத் தனது மனம், வாக்கு, காயத்திற் பதித்து வைத்துத் தனக்கென ஒரு அத்தியாயத்தில் தொடங்கி, மாதாஜி மனத் திரையில் ஓவியக் கீறல்களைத் தொடராகச் செய்தவண்ணமிருப்பது அனைவர்க்கும் தெரிந்தவிடயம். ஆசிரம அரும்பணிக்காய் உள்ளூரிம், வெளியூரிலும் குழந்தை பெரும் தொண்டர்குழாத்தையே உருவாக்கிவிட்டார். அவரது வசீகரவாக்கும் கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைய நா கோடானகோடி பெறும். என்ற படியான வாழ்வியலும் அவரது அரும்பணிக்கு மாதாஜி கொடுத்த இரு சிறகுகள்.

ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தின் பாலர் கழகத்திற்குப் பண்பான, பக்தியான, அறிவாற்றல் மிக்க ஒரு ஆசிரியை தேவைப் பட்டது. குழந்தையின் ஞானப் பார்வையில் அன்னத்தின் தூய வெண்மை தெரிந்தது. அம்மையாரிடம் தன் எண்ணத்தில் தோன்றிய அன்னத்தைப் பற்றி எடுத்துக்கூற அம்மையார் ஆனந்த மேலீட்டால் அன்னத்தின் வரவிற்காகக் காத்து நின்றவர்போல் நின்றார். அம்மையார் அன்னத்தைப் பார்த்து "பிள்ளைகளின் கல்விக்காய் வரவில்லை. நீதான் படிக்க வந்துள்ளாய்" என்று உபதேசித்தார். அர்ச்சுனனுக்குக் கண்ணபிரான் உபதேசித்த வார்த்தையாக அன்னம் ஏற்றுக்கொண்டது.

மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்

தான் ஒரு ஆசிரியை என்ற எண்ணத்தை வகுப்பறையிற் காட்டாது; தாயாகத், தாதியாக, வைத்தியராகக் காட்டிய சிறப்பு செல்லம்மா அம்மையாரின் தனி இடத்தைப் பெற்றது. இவ்வகுப்பறைப் போதனையால் அம்மையாரும், அன்னமும், இரும்பும், காந்தமும் போலக் கவரக் காரணமாயிற்று. தாயினும் மேலான தாயாக அன்னம் குகதாசன் குடும்பமே ஆட்கொள்ளப்பட்டுவிட்டது. அம்மையாருக்குச் பணிவிடை செய்வதை அம்பிகைக்குச் செய்யும் தொண்டாக்கி, அம்மையாரின் அருள்நோக்கில் தனது சத்குருவாக ஏற்றுக் கொண்டாள். அம்மையாரின் உபதேசங்களைப் புடம்போட்டுத்தீட்டி எடுக்கப்பட்ட அன்னம், தாயிடம் திருவடி தீட்சையும் பெற்று, இன்று ஆசிரமப்பணிக்காய் அம்மையாரின் இடத்திலிருந்தே பணிசெய்யும் பங்கு, அம்மையாரின் அருளாட்சிக்குக் கிடைத்த பரிசு எனலாம். அம்மையாரின் உடலிற்கு ஊறு ஏற்படும் போதெல்லாம் தன்னுடலிற்கு ஏற்பட்ட ஊறாக நினைத்துத் தக்க மருத்துவரை நாடியும், மருத்துவ நிலையங்களுக்குச் சென்றும் சிகிச்சை செய்வித்து வந்தார். ஆசிரம நிகழ்வுகள் யாவற்றிலும் அன்னம்மாவின் அன்புக் கணவர் காட்டும் பக்தி யோகம் பரவசமானது. பயன் எதுவுமின்றிப் பணியாற்றும் பங்கு சொல்லும் திறந்தன்று.

அம்மையார் தனக்குப்பின் ஏற்படும் வெற்றிடத்தைத் தாயுருவில் நின்று யார்தான் செய்யப்போகிறார்களோ என்று ஏங்கித்திரிந்த காலம் ஒன்றிருந்தது. அம்மையாரின் உடலிற்குப் புற்று நோயைக் கொடுத்துக் குருநாதர் தொடுத்த பரீட்சையிற் பலர் தோன்றினர். ஆனால் அன்னம் மட்டுமே சித்தியடைந்தாள்.

திருப்புகழ் சுவாமி மாதாஜியிடம் வந்து ஞான உபதேசங்களைப் பகிர்ந்து கொள்வது எண்பதுகளில் நடந்த வரலாறு. அக்காலப் பகுதியில் ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தில் திருப்புகழ் சுவாமிகள் சமாதியின் அடக்கத்திற் கென ஒரு கிடங்கை வெட்டி உரிய முறையில் படிகட்டி வைத்திருந்தார். "அம்மா இந்தக் கிடங்கு உனக்குத் தான்" என்று கூறிவிட்டுச் சில நாட்கள் அங்கிருந்துவிட்டுச் சென்று விட்டார். இச்சம்பவம் குறித்து நாம் எத்தகைய விளக்கத்தைதான் கூறமுடியும். அம்மையாரின் தவப் பெருமையை உலகிற்குக் காட்டத் திருவருள்வழி ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் செயலே இதுவென நாம் கொள்ளலாம்.

'எல்லா உலகமும் ஆனாய் நீயே' என்று தினமும் உச்சரிக்கும் திருநாவில் சத்சித் உச்சரிப்பு, 'தலையே நீ வணங்காய்' என்ற சிரசத்தில் ஒரு சரிவு; தொண்டு செய்யும் திருக்கரங்கள் ஒன்றுடன் ஒன்று இறுகப் பற்றிய நிலை; 'கண்ணிரண்டே யாவர்க்கும் கற் றோர்க்கு மூன்றுவிழி" என்பவற்றை நிலை நாட்டும் மூன்றாவது ஞானவிழியில் ஒளி வீச்சு; தேஜஸ் கூடிய உடலில் ஒரு ஒளிப்பிரவாகம். அவ்வுடலைச் சுற்றிக் கட்டிய வெண்ணிறச் சேலை. பரிசுத்தம் ஆத்ம பொக்கிஷத்திலுள்ளது என்பது போன்ற பிரதிபலிப்புக்கள் நிறைந்த நிலையில் 16.01.2000 (ஞாயிறு) மாலை ஏழு மணியளவில் தனது பிரியமான அன்னத்திடம் அம்மாவின் ஆத்மராகம் பாடத் தொடங்கியது. "நீ இல்லாத நேரம் எனது ஆத்மா குருவடி சென்றுவிடும் போலடா தெரிகிறது. நீ உலகியலின்படி என் உடலத்துக்காகக் கவலைப் படாதே" என்று கூற; அதற்கு அன்னம் "அவ் வாறு சொல்லாதீர்கள் என் தாயே, நான் என்றும் அம்மையின் திருவடியின் கீழேதான் இருப்பேன்" என்றதும் கயிற்றசிட்டிக் கந்தனின் மணியோசை "டாங் டாங்" என ஒலித்தது. அப்போது நேரம் இரவு 8.00 மணி 05 நிமிடம். வழமைபோல் அன்புக் குழந்தை வடிவேலுவும் அவ்விடம் வந்து சேர்ந்தார்.

"என்னைத் தூக்கி இருத்துங்கோ" என்றார் அம்மையார். அம்மையார் நிர்விகற்ப சமாதிநிலை எனும் யோகப்பயிற்சிக்குச் செல்ல இருப்பதாக எண்ணி அன்னமும், குழந்தையும் அம்மையைத் தூக்கி இருத்தினர். காந்தத்தாற் கவரப்பட்ட இரும்புபோலக் கைகளைக் கழற்றாது, கழற்ற முடியாது இருவரும் நிற்க, அன்னத்தின் தோளில் அம்மையின் சிரசு பதிந்தது. அப்போது நேரம் இரவு 8.05. அம்மாவின் பரிசுத்த ஆத்மா சச்சிதானந்தப் பெருவெளியிற் கலந்துகொண்டது.

அம்மையின் விதேகமுத்தி பற்றிய சேதி; கடல்சூழ் உலகமெலாம் விரைந்து சென்றது. பரிசுத்த ஆத்மாவைத் தாங்கி நின்ற பொன்னு டலத்தைப் பார்த்து வணங் கப் பக்தர்கள், அடியவர்கள், உற்றார், உறவினர், பாலகர், சீலர்கள் என்று ஊர் கொள்ளமுடியாதவாறு திங்கள் காலை ஆசிர மத்தை நோக்கி வந்த வண்ணமிருந்தனர். அம் மையின் அருளாசி பெற்ற அறநெறித் தொண்டர் கங்கைவேணியன் சமாதி பூசைக்கான நைவேத்தியத் திரவியங்களுடன் வந்து சேர்ந்தார். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் பீடாதி



மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

பதி, துர்க்கா துரந்தரி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பக்தர்களின் பஜனையுடன் கற்பூரமலையைக் கையில் ஏந்தியவாறு கைதடியை நோக்கிச் சிரசால் நடந்து வந்தார். இவ்வாறு வந்த மகான்களின் புனித யாத்திரைபற்றிச் சொல்லிட வார்த்தையில்லை.

மகாகும்பாபிஷேகக் கிரியைகள்போல சமாதி பூசைகள் மெய்சிலிர்க்க ஆரம்பமாயிற்று. வித்தகக் குருமணி ஸ்ரீமத் பரமசுவாமி அவர்கள் அம்மையின் கிரியைகளைச் சிவபூசையாக்கி நெறிப்படுத்தினார். உலகியலில் நின்ற ஊனக் கண்ணன்கட்கு ஞான ஒளிக்கீறுகள் அங்கு தென்படலாயிற்று. என்றாலும் சச்சிதானந் தரின் நாமத்தை உச்சரிக்கும் சங்கீத பூஷணம் பேரம்பலம் ஐயாவின் வேதபாராயணம் தேவர்களை விண்ணுலகிலிருந்து மண்ணுல கிற்கு அழைப்பது போன்று வானைப்பிளக்க, அம்மையின் திருவுடலுக்குத் திருக்கோவில் அமைக்கத் திடசங்கர்ப்பம் கொண்ட குழந்தைவடிவேலுவின் ஆனந்தக் கண்ணீர் அம்மையின் சமாதிக்கிடை யின் நனைந்தபடியிருக்க, "சிவாயநம" என்ற நாமத் தைப் பக்தர்கள் ஒலித்த வாறு, ஸ்ரீ சச்சிதானந்த அம்மையின் பொன்னுடலம் திருப்புகழ் சாமிக்கு என அமைக்கப் பெற்ற சமாதிக் கிடங்கினுள் சமாதி நிலைக்கு வைக்கப்பட்டது. "எனது தேகம்தான் மறை யும், ஆத்மா இங்கே தான் இருப்பேன்" என்ற அம்மா வின் அமுதமொழி அன்பு



மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்


மகன் குழந்தைக்கு அடுத்த கட்ட நகர்வுக்கு அத்திவாரமிட்டது.


பல்லவர்கால, நாயக்கர் கால, சோழர் காலப் பரிணாம கலை வடிவங்களைத் தாங்கி மாதாஜி லிங்கேஸ்வரருக்கான ஆலயக்கட்டு மானப்பணிகள் துரிதகதியில் நடைபெற்றன. 18.01.2008 வெள்ளிக்கிழமை இந்தியாவிலிருந்து பிரதிஷ்டைக்காகத் தருவிக்கப்பெற்ற சிவலிங் கத்திற்கு காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை நடைபெற்று அடியார்களின் தரிசனத்திற்காக வைக்கப்பட்டது. 08.04.2008 முதல் 06.05.2008 வரை பன்னிருதிருமுறை களை ஓதிய நாயன்மார்கள், ரிஷிகள், முனிவர் கள் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தை ஆசீர்வதிக்கும் முகமாக பன்னிரு திருமுறைப் பாராயணம் நடைபெற்றது. 06.05.2008 காலை 7.00 மணிக்கு பன்னிரு திருமுறை பூர்த்தி விழாவும் தொடர்ந்து 10.45 – 11.30 மணியளவில் ஆவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமும் நடைபெற்று; அதனைத் தொடர்ந்து மண்டலா பிஷேகமும் நடைபெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகியவை புறச்சூழலாக வைத்து, சைவ ஆகம விதிப்படி திருக்கோவில் அமைக்கப் பட்டது. சுருக்கமாகக்கூறின், கைதடி ஆனந்தநகரில், சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத்தில், திருப்புகழ் சாமிக்கென வெட்டிய சமாதிக் கிடங்கில் மாதாஜியின் பொன்னுடலம் பதித்து; அவ்வுடலத்தினுள்ளிருந்த பரிசுத்த ஆத்மாவிற்கு அழகான ஆலயம் அமைக்கப் படலாயிற்று. மாதாஜி லிங்கேஸ்வரர் அருட் கடாட்சம் அகிலமெல்லாம் பரவட்டும். ஸ்ரீமான் குழந்தைவடிவேலுவின் சிவப்பணி சிறப்புடன் தொடரட்டும்.


"வள்ளலார் தொண்டிற்கீடாய் – இன்று
வையத்தில் யார்தான் உளரோ?"


சிவாச்சாரியார் பிரதட்சணம்



பிரதான கும்பங்கள் பிரதட்சணம்


மஹா அபிஷேக வீதியுலா



விஸ்வப்பிரம்மஸ்ரீ ஈஸ்வரன் ஆசாரியாரைக் கௌரவித்தல்




மகாகும்பாபிஷேக பிரதம கும்பம் உள்வீதி உலா



பிரதான கும்பங்கள் ஊர்வலம்




பிரதானகும்பம் வீதியுலாவிற்கு தயாராகுதல்



நந்தி பலிபீட அபிஷேகம்









கும்பாபிஷேக நிகழ்வுகள்



எழுந்தருளி முகூர்த்தம் கௌரி அம்பாள் சமேத சந்திரசேகரர்


சிவத்திரு கு.கங்கைவேணியன் உரையாற்றும்போது







பரிவாரமூர்த்திகளுடன் லிங்கேஸ்வரப் பெருமான்




கோ பூசையின் போது




ஆலயத் தொண்டன் குகதாஸ் அவர்களைக் கௌரவித்தல்




நித்திய சிவாச்சாரியார்




பன்னிருதிருமுறை பூர்த்தி செய்த சிவத்திரு த. ஆறுமுகம் அவர்களைக் கௌரவித்தல்



பிரதான குருவால் தலைவருக்கு ஆசி வழங்கல்



தியான மண்டபம்



தவில் வித்துவான் தங்கவேல் கண்ணன் அவர்களை நல்லை ஆதீன முதல்வர் கௌரவித்தல்

# சிவபுராண விளக்க உரையின் சிறு தொகுப்பு

சுவாமிகளின் மாணாக்கர்
வைத்திய கலாநிதி சின்னப்பு

அவனன்றி ஒன்றில்லை. அவனுமல்ல உள்ளது அழியாது இல்லாதது தோன்றாது. மாயை-சத்து மல்ல முக்காலத்தும் நிலை உடையதல்ல. பூரண சிவமாகிய பிரக்மம் எக்காலத்தும் இருப்புடையது. இந்த மாயை தோற்றத்திற்கு வந்துள்ளதால் சூனியமும் அல்ல (இல்லாததும் அல்ல) காட்சிக்குத் தோன்று கின்றது. நோய் மூப்பு சாக்காட்டால் மறை கின்றது.

இந்த மாயை சத சத்துமல்ல சத்தும் அசத்தும் கலந்திருப்பதுமல்ல. முக்காலத்திலும் இருப்பை யுடைய சத்தாகிய கடவுளுக்கும் அசத்தாகிய மாயைக்கும் விலட்சணம் (வேறான) அனிர்வசனிய தோற்றம் அதாவது இப்படிப்பட்ட தென்று சொல்ல முடியாத சணம் நிலையில்லாத சுழற்சி உடையதாம்.

**எருது இரண்டு கன்றை ஈன்றது**

எருதாகிய பூரணசிம் என்னும் பிரக்மம் சத்தி சிவம் என்னும் கன்றுகளைப் பிறப்பித்தது என்பது இதன் பொருள். கீழ் தரப்படும் வாசக சுவாமிகள் கருத்து தாயிமிலி தந்தையிமிலிதான் தனியன் அகோ தான் தனியன். ஆக்கம் – படைத்தல் அளவு – காத்தல் இறுதி – அழித்தல். இவை எப்போதுமே இல்லை. ஆனால் ஆக்கு வாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய் என்பது வாசகர் கூற்றாகும்.

படைத்தல் காத்தல் அழித்தல் இல்லாதது என்று மாணிக்கவாசகர் பின் படைத்தல் காத்தல் எப்படி வந்தது? விளக்கம்: சிவபுராண விரிவுரை, 'மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி என்றார் ஆதிசங்கரர் மாயாவாதி என்றும் மாயையை வைத்து பூரண சிவத்தில் கூறுகின்றார் என்று தவறுகூறுகின்ற வல்லவ ஆச்சாரி, இராமனுசர், மத்துவர் போன்ற ஞானிகள் கூறுகின்றனர். மாணிக்கவாசகர் கூற்றையும் கவனிக்க வேண்டும் தன் பெருமை ஆகிய உலகத்தோற்றம் தான் காணத்தன்மயன் எனக் கடவுளைக் கூறுகின்றனர். சீவனுக்கும் ஈசனாகிய ஞானிக் கும் மட்டுமே பெருமை காணப்பட்டது. மேலே கூறியஞானிகள் முக்குண மூலப்பிரதிநிதி எங்கே உண்டு. பார்க்கும் இடம் எங்கும் நீக்கம் அற நிறைகின்ற பரிபூரண ஆனந்தம் என்று தாயுமான சுவாமிகள் கூறுகின்றார். எனவே மூலப் பிரகிரிதி எங்கே இருப்பு. இந்த முக்குணப் பிரகிரிதியின் செயற்கையே மனம் எனப் படும். இந்த மனம் சாத்தான் கல்லால் எறிந்தாலும், நெருப்பால் எரித்தாலும் போகுமா. இந்த சாத்தா னாகிய பிரகிரிதி எப்பவும் உள்ளதானால் அழிக்க முடியுமா? இதுவே விவர்த்தமாகிய பொய் கனாப் போன்ற காட்சியாம். விழிப்பில் யாவும் அணுவளவு இருப்பு இல்லை. விவர்த்தம்



மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்

என்றால் அதன் விளக்கம் தன் நிச்ஞான வடிவத்தில் அணுவளவும் களங்கப் படுத்தாது. வேறு தோற்றம் தோற்றுதல் உதாரணமாக ஆகாய நீலம், கைற்றின் அரவு, கட்டையில் புருடன் போன்ற மயக்கக் காட்சியாகும். ஆகாய நீலம் ஆகாய ஆழத்தால் தெரியும் மகிமை ஆகும். இதேபோல் பிரக்ம மாகிய பூரணத்தின் மகிமையுமாகும். இதுவே விவர்த்த தோற்றமாம். இதில் சக்தி, சிவம், உலகு, சீவர், கடவுள் பல வித்தை – கல்வி, ஞானம், ஆகமம், வேதம், உபநிடதம் அவித்தை – அறிவு அற்பமான கீழ்நிலை அடைந்ததாகும். பிறப்புமுதல் இறப்புவரை உள்ள துன்பங்களே. இதன் வடிவங்களாகும். வித்தையாகிய குரு சாத்திரத் தால் பிரம்மஞான விளிப்பு உண்டாகும். இந்த விளிப்பு மௌனம் மோனம் என்பதாம். இது என்றும் பூரணம் இதில் முத்திக்குரிய எவ்வித சாதனங்களும் இல்லை என்பதாம். விவர்த்த தோற்றத்தில் மாயையில் உதித்த தடத்த சிவத்தில் அனிர்வசனிய மாகத் தோற்றம் ஆகும். திருஷ்டி சிருஷ்டிவாதம் – நீ பார்க்கும் போது இந்த உலகு தோற்றம் மரணம் தியானம் நிர்வி கர்ப்பம் இதில் உலகமில்லை. பிராணன் சீவன், புலன்கள் உண்டு. இதில் லயரூப நிவர்த்தி அத்தியந்த நிவர்த்தி தோற்றம் முழு மையாக அழிந்துவிடும். இதில் சீவன், பிராணன், புலன்கள் இல்லை. சிவ பூரணத்தில் ஒன்றாதல். சிவபுராண விளக்க உரையில் இதன் விரிவு உள்ளது.



கர்மகாண்டம்
உபாசனாகாண்டம்
ஞானகாண்டம் – சிவபுராண விளக்க உரையிற் காண்க
கர்மகாண்டம் – சைமினி முனிவர், வியாத பகவானின் மாணாக்கர்
ஞானகாண்டம் – வியாத பகவான் கர்த்தார்
கர்மகாண்டம், உபாசனாகாண்டம் – இரண்டும் ஞானகாண்டத்திற்கு அழைத்துச் செல்லும் மிகுதி சிவபுராண உரையிற் கண்டு கொள்க. கடவுளுக்கு மாயாவி என்று மற்றொரு பெயருண்டு. மாயாவி என்றால் வித்தை காட்டுபவன். ஒரு மாமர வித்தாகிய ஒன்றை வைத்துப் பல விதமான மரங்களையும் உயிர் களையும் காட்டி, முடிவில் முன்பு உள்ள அந்த வித்தை உள்ளபடி இருப்பதை காண்பிப்பான் இந்த ஞானத்தால் சீவன் 'நான்' என்ற தலை யெழுத்தை அழிக்க சிவம் 'நான்' என்ற விழிப்பு நிலை அடைவான். துவம் பதம் சீவன் தற்பதம். ஈசன் அசிபதம்; பூரண சிவம்: இதில் சீவன் ஈசன் மாண்டு விடுவர். இவையாவும் சிவபுராண விரிவுரையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. சிவபுராணத்தின் தொடக்கமும் முடிவும் திருவாசகத்தின் தொடக்கம் முடிவை உள்ள டக்கியது.

பிரகதார்னிய உபநிஷத்தின் சங்கர பாட்சியத்திலும் வார்த்திகத்திலும் சங்கர பாசிய ஆனந்த சிரி வியாக்கியானங்களோடு கூடிய மாண்தூக்கிய உபநிஷத்தின் காரிகையிலும் வாசிட்டத்திலும் வேதாந்தமுத்தா வலியிலும் விரித்திப் பிரபாகரத்தின் எட்டாவது பிரகாசத்தி லும் ஆத்ம புராணத்திலும் அத்வைத சித்தி முதலிய கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக் கிறது. எவர்களுக்கு விஷேச விருப்பம் இருக்கிறதோ அவர்கள் அங்குகாண்க. மேற் கூறிய கிரந்தங்களின் விரிவுரைகளின் அனுபவமே சிவபுராண விளக்க உரை.

# சைவசித்தாந்தம் காட்டும் வாழ்வியல் - சில சிந்தனைகள்

பேராசிரியர், கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சைவ சித்தாந்தம் என்பது உயிர்கள் சிவத்துடன் சம்பந்தப்பட்டு அடையும் பெரு நெறியை விளக்குவதாகும். சைவம் சிவத்துடன் சம்பந்தம் ஆவது என்று திருமூலர் குறிப்பிடு கின்றார். இறைவனது அருட் தொண்டு ஞானிகள் கண்ட முடிவுகளாகிய ஞானத் தொகுதியே சைவ சித்தாந்தம். காலத்தால் மாற்றம் பெறாத உண்மைகள் சைவ சித்தாந் தத்தில் பொதிந்துள்ளன. சிவனைப் பரம்பொரு ளாகக் கொண்டு, அப் பரம்பொருளை அறியவும், அடையவும் வழிவகைகளை அமைத்துக் கொடுத்தனர் நம் ஆன்றோர்கள்.

சைவசித்தாந்தம் தென்னாட்டுச் சைவ மரபிற் சிறப்படைந்தது. அதற்கு ஒரு தனி வரலாறே உண்டு. உலகத்தை வளம்படுத்தவும் மக்களின் வாழ்க்கையை செம்மையுறச் செய்ய வும், ஆறுகள் இயற்கையாகவே ஊற்றெடுத்துப் பாய்கின்றன. இவை இறைவன் எமக்கருளிய உயிர் காக்கும் செல்வம். எங்கோ பிறந்து காடும் மலையும் கடந்து கூனிக் குருகி விரிந்து படர்ந்து ஓடுகின்றன. ஊருக்கு அருகே பாய்ந்துவரும் ஆற்றில் இறங்கி அதன் நீரை எளிதிற் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஆற்றில் பல படித்துறைகளை முன்னோர்கள் அமைத் துள்ளனர். அவ்வாறே உயிர்களின் கட்டாகிய மலத்தை நீக்கவென்றே இறையருள் என்னும் பேராறு பொங்கிப் பரந்து பாய்கின்றது. இவ் ஆற்றில் நம் முன்னோர்கள் பல படித்துறைகளை அமைத்தனர். கரை புரண்டோடும் அருளாற்றை அடைவதற்குரிய அருள் துறைகள் அவை. இவ்வாறு ஏற்பட்ட பல துறைகளில் ஒன்றே சைவத்துறை. "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். சைவத் துறையில் நிற்ப வர்கள் அகச் சமயிகள். அவர்களது வாழ்க்கை இலட்சியத்திற்கு வழிகாட்டுவது சைவசித் தாந்தம். இதன் பெருமையை குமரகுருபரர் அழகாகப் பாடியுள்ளார்.

"ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித் தாந்தத்
தேனமுது – (அருந்தினர் சிலரே)

என்று கூறுவார். வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழியமைக்கின்றது சைவ சித்தாந்தம். இது வகுத்துத் தரும் வாழ்வியல்; சுவைத்து இன்புறத்தக்கது. அனுபவத் திறத்தால் இறை உண்மையை உணர்த்து கின்றது இந்த அனுபவ உண்மை. சமய குரவர்களது வாழ்க்கை வரலாற்றிலி ருந்து தெரியவருகின்றது. சைவ சித்தாந்தம் என்பது சமய குரவர்களாலும், சந்தான குரவர்களாலும் மாறுபடாத ஒரே நெறியிலே வாழ்க்கைக்கு ஏற்றவாறே காட்டப்பட்டுள்ளது. அதன் படி வாழ்ந்து ஈடேற முயல்வது எமது பொறுப்பு.

பதி, பசு, பாசம் மூன்றும் உட்பொருள்கள் என்றும், அவை அநாதியாகவே

உள்ளன என்பது சைவ சித்தாந்தம் கூறும் கோட்பாடு. அவற்றுள் அறிவுடைப் பொருள் கடவுள் ஒருவரே. அறிவிக்க அறிபவை எண்ணில்லாத ஆன்மாக்கள். அறியாமையை உடையவை பாசங்கள். இந்த அறியாமையிலி ருந்து நீங்கி அறிவை அடைவதே ஆனந்தம். இக் கொள்கை என்றும் மாறாதது. நாம் அக் கொள்கையினது வாழ்க்கை அனுபவத்திற்குக் கொண்டு வருவது எமது முயற்சியிலேதான் தங்கியுள்ளது.

மானிடப் பிறப்பின் நோக்கத்தை அறிந்து அந்த நோக்கம் நிறைவேறும் முறையில் வாழ்வதே சைவ சித்தாந்தம். பாசம் என்பதில் அடங்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றுள் ஆணவம்தான் நன்றேயாய் அநேக சக்திகளை உடையதாய் இருப்பது. வாழ்க்கை யில் உயிர்களின் அறிவினை விளங்க வொட்டாது தடுப்பது இதுவே. ஆணவத்தால் கட்டுண்டு. இயக்கம் அற்றிருக்கும் உயிர்களை இயங்கத் துணை செய்து அவற்றை உயர்த்துவது மாயையே. இதன் காரியந் தான் தனுகரண புவன போகம் என்பன. கன்மம் என்பது உயிர்கள் செய்யும் வினைகளின் தொகுப்பு. இவையே வாழ்விற் பிறப்பு இறப்புக்களுக்குக் காரண மாய் இருப்பவை. உயிர்கள் முற்பிறவியில் நல்வினை, தீவினை வாயிலாகத் தேடி வைத்தது சஞ்சிதம் என்றும், அதனை இப் பிறவியில் அனுபவிப்பது பிராரத்துவ வினை என்றும், அனுபவிக் கும் போது உண்டாக்கிக் கொள்வது ஆகாமிய வினை என்றும் கூறப்படும்.

"எத்துணை மேம்பட்ட பக்தி நிலை கைவரப்
பெற்றாலும் செய்த வினையை அனுபவித்தே
ஆக வேண்டும் என்றே"

சைவ சித்தாந்தம் கூறுகின்றது. பட்டி னத்தார் கழு மரத்தில் ஏறும் நிலையை முன்னிட்டுப் பாடுவதும் குறிப்பிடத்தக்கது.

"என்செயலாவது யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த ஊனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினை யோ இங்ஙனே வந்து மூண்டதுவே"

எனினும், இறைவன் தன்னடியவர் படும் துன்பத்தைத் தானே துணை நின்று எடுத்துச் சுமப்பான் என்பதையும், முடிவில் அவை யாவும் இன்பமாகவே முடியும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். வினைகள் செய்வதனாலேயே நாம் மீண்டும் மீண்டும் பிறக்கின்றோம். இறைவன் எமக்கு அரிய மானிடப் பிறவியினைத் தந்ததன் நோக்கம் இனிப் பிறவாப் பெரும் பேற்றை அடைய வேண்டும் என்பதற்காகவே. பிறவிகளிற் சிறந்த பிறவி மக்கட்பிறவி. மற்ற உயிர்களுக்கு இல்லாத அறிவுடைமையே இப்பிறவியைச் சிறப்புடையச் செய்கின்றது. இவ்அறிவு உடைமையின் முதிர்ச்சியே நிட்டை. கடல் என்ற மோனநிலை. எமது வாழ்வில் இவ் அறிவினை நலமுறப் பயன்படுத்தச் சைவசித்தாந்தம் வழிசெய்கின் றது. நல்லதன் நலன்களையும், தீயதன் தீமைகளையும் அறிவதும் பாவ புண்ணியங் களைப் பகுத்து உணர்வதும் இவ்வறிவின் பயனாகும். உண்மையான சமயி வாழ்க்கையின் அடி நிலையை அறிந்துணர் பவன். அந்த அறிவு தன்னை அறிவதற்கும் இறைவனை உணர் வதற்கும் துணைசெய்யும். இம் மானுடப் பிறவியை இறைவன் எமக்கு அளித்ததன் நோக்கம் இதுவேயாகும். இதனால் தான் தாயுமானவர்,

"எண்ணரிய பிறவிதனில் மானுடப்பிறவி தான்
யாதினும் அரிது அரிது காண்

இப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
யாது வருமோ அறிகிலேன்"

என ஏங்குகின்றார்.

"வாழ்த்த வாயும்
நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும்"

தந்த தலைவனுக்கு நன்றி செலுத்தவே இம் மானிடப் பிறவியின் முதல் நோக்கம் என்பதைச் சைவ சித்தாந்தம் வற்புறுத்துகின்றது. எமது வாழ்க்கையிற் சைவ சித்தாந்தம் உயிரையும் உள்ளத்தையும் வளமாக்கலாம் என்பதை நிரூபிக்கின்றது. அப்பர் கூறுவார்:

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டும் இவ்வையகத்தே"

எமது வாழ்வின் செயற்பாடுகளைத் தெய்வத்தை உணர திருப்பிவிடுதல் வேண்டும் என்பதற்காக வகுத்தமைக்கப்பட்டவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நன்னெறிகள்.

புலன்களைக் கட்டுப்படுத்தவும் மாபெரும் சக்தியாகிய மனத்தை தெய்வத்தின்பாற் திருப்பவும் ஏற்பட்டவையே சைவ சாதனைகள். இதன்மூலம் பிறவியை மாண்பாக்கலாம். சிவ தரிசனத்தைக் காணலாம். சிவானந்தத்தினுள் திளைக்கலாம். தெய்வம் என்பதோர் சித்த முண்டாக்குவதே இப் பிறவியின் நோக்கம். வாழ்க்கையில் வெற்றி பெற முதலில் நாம் எம்மை ஆளும் வழியைத் தெரிந்து கொள்ளவேண்டும். மகாகவி பாரதியார் விநாயகர் நான்மணி மாலையில்:

"தன்னையாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்
மணக்குள விநாயகா வான்மறைத் தலைவா
தனைத்தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில்
எல்லாப் பயன்களுந் தாமே யெய்தும்
அசையா நெஞ்சம் அருள்வாய் உயிரெலாம்
இன்புற்றிருக்க வேண்டி நின் னிருதாள்
பணிவதே தொழிலெனக் கொண்டு
கணபதி தேவா வாழ்வேன் களித்தே".

எனப் பாடுகின்றார்.

சைவ சித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறியில் 'நீ உனக்காகவே இறைவனை வணங்குகின்றாய்' என்ற கருத்து குறிப்பிடத் தக்கது. சோற்றை எமக்காகவே உண்ணு கின்றோம் அல்லாமல் சோற்றுக்காக உண்ப தில்லை. அது போன்று வழிபாட்டையும் எமக்காகவே செய்கின்றோம். வழிபாட்டை மேற்கொள்ளாத மக்களது தன்மையைப் பேய்க்கு நிகராக்குகின்றார் சுந்தரர்.

"நாயேன் பல நாளும் நினைப்பின்றி மனந்தன்னைப்
பேயாய்த் திரிந்தெய்த்தேன்".

என்கிறார். தாயுமானவரும்: செகத்தாரை யெல்லாம் கூவியழைத்துப் பேரின்ப வெள் ளத்தை அனுபவிக்கும்படி வேண்டுகின்றார்.

"அகண்டாகார சிவயோகமென்னும் பேரின்ப
வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க்
கிடக்குதையோ
இன்புற்றிட நாம் இனி எடுத்த தேகம் விழுமுன்
புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே"

என்பது அவரது அறை கூவல்.

ஆன்மாக்களின் துன்பந்தொலைத்து இன்பம் பெருக வேண்டும் என் பதையே சைவ சித்தாந்தம் வற்புறுத்துகின்றது. சிவஞான போதம் பத்தாம் சூத்திரம் பாச நீக்கத்தை யும், 11ஆம் சூத்திரம் சிவப்பேற்றையும் எடுத்துக் கூறுகிறது. பாசம் முற்றிலும் நீங்கப் பெறுவதே ஆன்ம சுத்தி. இதற்கு இறைபணி நிற்றல் வேண்டும். இறை பணி நின்றால் மும்மலங் களும் நீங்கும்.

"அவனே தானே ஆகிய
அந்நெறி

ஏக னாகி இறைபணி நிற்க
மல மாயை தன்னொடு வல்வினை இன்றே"
(சிவஞானபோதம் : 10)

11ஆம் சூத்திரம் சிவப்பேற்றை உணர்த்து கின்றது. இது இப்பிறவியிலேயே கிடைக்கும் வழியைச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றும் பிறவியின் நோக்கத்தை உணராது வாழ்நாள் எல்லாம் வீணாகக் கழிக்கின்றனர் அநேகர் என்பதைத் திருமூலர்:

"பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேரிழந்தாரே"
(திருமந்திரம் – 37–7)

'உண்டு பல்யோனி எல்லாம் ஒழித்து மானிடத் துதித்தல்
கண்டிடின் கடலைக் கையால் நீந்தினன் காரியம்தான்'

என அருணந்தி சிவாச்சாரியார் இப் பிறவியின் அருமருந்தன்ன தன்மையைப் போற்றுவார்.

எல்லையில்லாத கருணைகொண்டு இறைவன் உயிர்களுக்கு அருள் புரிகின்றார். அத்தகைய இறையை அறியாமையினால் தொழாமல் இருப்போம் ஆயின் நாம்கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன என்று வான்மறை தந்த வள்ளுவன் கேட்கிறார்.

'கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'
(திருக்குறள் – கடவுள் வாழ்த்த–2)

சைவ சித்தாந்தத்தில் இறையின் பெருமையைப் பற்றிக் கூறும்போது அதற்குச் சிறப்புக் குணங்கள் இருப்பதாகக் கூறுகின்றது. அவற்றை வள்ளுவரும் கடவுள் வாழ்த்தில் கூறுகின்றார். மனிதன் இறைவனைத் தொழும் பொருளாக நினைத்தால் அதில் சிறப்பு ஒன்றும் இல்லை. இறையிடம் உள்ள சிறப்பான குணங்களை மனிதன் தன்வாழ்வை அடிப்படைக் கொள்கைகளாக மாற்றிக்கொள்ளவேண்டும். இறைவனையே வாழ்வுப் பொருளாக வழிபட்டால் அத்தகைய நற்குணங்கள் ஏற்பட இடமுண்டு. மேல்வரும் குறள்கள் இக்கருத்தை வலியுறுத்து கின்றன.

"கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"
(குறள் – கடவுள்வாழ்த்து –9)

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"
(குறள் – கடவுள்வாழ்த்து–7)

மானிடருக்கு இயற்கையிலேயே சில தீய குணங்கள் உள்ளன. அவை ஆணவ மலத்தின் வீரியமாகும். எனவே அறத்தோடு கூடிய வாழ்வே சைவ சித்தாந்தம் கூறும் வாழ்வு.

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"
(குறள்–அறன்வலியுறுத்தல்–5)

சைவ சித்தாந்த வாழ்வு சித்தித்தால் அப்பர் கூறுவது போன்று:

"மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மா நிலத்தே"

என்ற உயர் பேறு கிடைப்பதாகும். எனவே கடவுளின் திருவடிகளை இடைவிடாமல் நினைப்பவர் இன்ப உலகிற் சிறப்புற நிலைத்து வாழ்வர். இதனை வள்ளுவர்

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"
(குறள்–கடவுள் வாழ்த்து – 3)

என்ற குறள்வழி வலியுறுத்துகின்றார். பரிணாம வளர்ச்சியில், மேல்நிலையில் உள்ள மனிதன் தனது நிறைவான வளர்ச்சியை துரிதப்படுத்தச் சில விசேட அறங்களைக்

கடைப்பிடித்தொழுக வேண்டும். தன்னறிவு தெளியும் வரையிற் சான்றோர் ஒருவரை நாடி நிற்க வேண்டும். எனவே கடவுளை நன்குணர முற்படுவதே சைவ சித்தாந்தம் காட்டும் வாழ்வியல் ஆகும். எமது வாழ்வில் நிரந்தரமாக சுகத்துடன் நிம்மதியாக வாழ முடியுமா? என்ற வினா சைவ சித்தாந்தம் காட்டும் சமய வாழ்வில் எழ வேண்டியதே இல்லை.

கருகிய கரி நெருப்புடன் சம்பந்தப்படும் போது அதன் இயற்கையான கருமைமாறி ஒளிர் கின்றது. அதேபோன்று எமது மனம் தெய்வீக ஒளியிற் கலந்திருப்பின் நிறைவான மனிதத்து வத்தை எம்மில் நாம் காணலாம்.

சைவ சித்தாந்தத்தில் உயிர்கள் படிமுறை யிற் பக்குவப்படுதலை தசகாரியம் விளக்கு கின்றது. அவை தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவ போகம், சிவயோகம் என்பனவாகும். இதற்கு அணி செய்யும் வகையில் திருக்குறளும் பொருத்தமான கருத்தினைக் கூறுகின்றது.

"கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"
(குறள் – மெய் உணர்தல்–6)

ஒருவன் தான் கற்க வேண்டியதைக் கற்று மெய்ப்பொருளை உணர்தல், மீண்டும் இப் பிறப்பிற்கு வாராத வழியை அடைவர்.

எனவே எமது வாழ்வில் நாம் பெருமை யடைவதற்கோ அன்றி சிறுமையடைவதற்கோ காரணமாக அமைவது நாம் செய்யும் கருமமே யாகும் என்பதை

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"
(குறள்–தெரிந்துதெளிதல்–5)

என வள்ளுவர் குறிப்பிடுவது சிந்தனைக் குரியது. எனவே சைவ சித்தாந்தம் கூறும் வாழ்க்கை நெறி, இதயக் கோயிலில் இறைவனை இருத்தல் ஆகும். அதுவன்றி மானிடப் பிறவியின் மகத்துவத்தை உணரமுடியாது. அத்துடன் "திருவடி சேர்தல்" என்பது கூட இதே பொருளில் அமைந்தது. அப்பர்: "தேவனை என்னுள்ளே தேடிக்கண்டு கொண்டேன்" எனப் போற்று கின்றார்.

திசையறிகருவி திசையைக் காட்டுவது போன்ற உண்மையான வாழ்க்கையின் திசை யைக் காட்டும் கருவிதான் சமயம். சைவ சித்தாந்தம் கடைந்தெடுத்த வாழ்க்கைத் திட்டத்தின் பெட்டகமாகும். சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளகுவதுடன், நுண் பொருள்களையும் உணர்த்துவது சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தக் கொள்கைகள் மிகப்பழைமையானவை. சங்க நூல்களிலும் பிற்காலத் தமிழ் நூல்களிலும் இச்சமய நுண்பொருள்கள் விரவிக் காணப்படுகின்றன.

சமயத் தத்துவங்கள் பலவற்றிலும் மேம்பட்டதாய் விளங்குவது சைவ சித்தாந் தம் என்பதை உமாபதி சிவாச்சாரியார் சிவப் பிரகாசம் என்ற நூலில்,

"புறச்சமயத் தவர்க்கிருளாய்
அகச்சமயத்தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப்
பொற்பனிபோல பேதப்
பிறப்பிலதாய் இருள்
வெளிபோல் பேதமுஞ் சொற்
பொருள்போற்
பேதா பேதமுமின்றிப் பெருநூல்
சொன்ன
அறத்தினால் விளைவதாம்
உடலுயிர்கண் ணருக்கன்
அறிவொளிபோற் பிறிவரும்
அத்துவித மாகுஞ்
சிறப்பினதாய் வேதாந்தத்
தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத்
தெரிக்கலுற்றாம்"

எனச் சைவ சித்தாந்த மேன்மையைப் போற்றுகின்றார். உலகியல் நெறிகளோடு ஒத்ததாய் அறிவியலுக்கு ஏற்புடையதாய் அனைத்துச் சமய நெறிகளையும் தழுவியதாய் விளங்குவது சைவ சித்தாந்தத்தின் சிறப்பாகும். இந்நெறி வாழ்வியலோடு இணையும் சிறப்பு சாக்கிய நாயனார் சிவநெறியைப் பின்பற்றிய வகையிற் காணலாம். அவர் அந்நெறியை பின்பற்றியதற்குரிய காரணத்தைச் சேக்கிழார் பெருமாள் கூறுமிடத்து:

"செய்வினையும் செய் வானும்
அதன் பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவ நெறி
அல்லவற்றுக்கு இல்லை என
உய்வகையால் பொருள் சிவன் என்று
அருளாலே உணர்ந்தறிந்தார்"

எனச் சிறப்பிக்கின்றார். ஏனைய சமயங்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு சைவ நெறிக்கே உண்டென்ற கருத்து வற்புறுத்தப் படுகின்றது. வினைகளும் அதைச் செய்யும் உயிர்களும் வினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களும் அவற்றை உயிர்கள்பாற் சேர்ப்பிப்பவனாகிய இறைவனும் உண்டெனக் கூறும் சமயம் சைவம் ஒன்றேயாகும். சமய வாழ்வோடு இணைந் திருப்பதே சைவ சித்தாந்த நெறியின் சிறப்பம்சமாகும்.



மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்

சைவ சமயத்திற்குச் சிறப்பாக உள்ள சாதனைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்காகும். இவை இறைவனை அடைய உதவும் நன்மார்க்கங்கள். தென்னாட்டில் ஆலய வழிபாட்டோடு இணைந்து இவை மக்கள் வாழ்க்கைக்கு உதவி வருகின்றமை கண்கூடு.

"விரும்புஞ் சரியை முதன் மெய்ஞ்ஞான நான்கும் அரும்பு
மலர், காய், கனி போலன்றோ"

எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார். சமய வாழ்வு சிறப்புப்பெற உதவும் சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய நான்கையும் அருணந்தி சிவாச்சாரியார்;

"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
தாசமார்க்கம் மென்றுஞ் சங்கரனை அடையும்
நன்மார்க்க நாலவைதா ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்று சதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தா லெய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்தி பத மென்பர்".

என்றார்.

சைவசித்தாந்தம் கூறும் இக்கருத்துக்கள் சைவ சமய வாழ்வியற் சாதனைத்திறனை உருவாக்கப் பெரிதும் துணையாக அமைவன. இவ்வாறு சைவ சமய வாழ்வில் மேன்மையுறவும், இறைவன் அருளைப்பெற்று இறைவன் திருவடிப் பேறு பெறவும் ஏற்ற வழிவகைகளைச் சைவ சித்தாந்தம் காட்டி நிற்கின்றது. தளைப்பட்டுள்ள ஆன்மாக்கள் தளையை நீக்கி இறைவன் அருளைப்பெற்று அவனடிக் கீழ் இன்பந் துய்ப்பதே சைவ சித்தாந்தம் காட்டும் வாழ்வியலின் பெரு நோக்கமாகும்.

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.

என்ற மணிவாசகரின் திருவாக்கு சைவ சித்தாந்த வாழ்வியலுக்கு எம்மை ஆற்றுப் படுத்துவதாகும்.

# சரீர யாழும் சாரீர யாழும் ஓர் ஆய்வு


சாகித்ய இசைப் பேரரசு இசைத்தமிழ் வேந்தர்.தமிழிசைக் காவலர்
சங்கீத கலாநிதி, டாக்டர் வி.மு.நவரெத்தினம்
M.Mus.Phil. & J.P.,
தலைவர், இசைவளாகம்,
இராமநாதன் நுண்கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


நாதப்ரம்மாகிய சரீர யாழின் மூலப்பிரம் மமாக விளங்குபவர்கள் ஞானிகள். இறை வனையடைய இவரிற்குக் கிடைத்த நாத க்ஷேத்திரமே உடல். இச்க்ஷேத்திரத்தில் சீவாத்மா தங்கித் தனது பயணத்தைப் பரமாத் மாவை நோக்கிச் செல்லும் பாங்கு பல்வகைப் பட்டது. சச்சிதானந்த ரிக்ஷிகளின் ஞானக் குழந்தையாக வாழ்ந்த மாதாஜி அம்மையார் திருநாமத்தில் சித்தர் சிவாலயம் ஒன்று கருணைசெறி கைதடியில் அமைந்துள்ள மையின் பேறாக எழும் ஆய்வு மலரில் "சரீர யாழ் மற்றும் சாரீர" யாழ்களின் சிறப்புச் சிவத்தை அமைக்குமாறு எவ்வகை என்பது சுருக்கமாக நுட்பமாகக் காணப்படுகின்றது.

"பாவோடணைதல் இசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தானமெட்டானும் – பாவாய்
எடுத்தல் முதலாவிருநான்கும் பண்ணிப்
படுத்தமையால் பண்ணென்று பார்"

(சிலப் 3.23 அடி. உரை)

என்று அடியார்க்கு நல்லார் சூத்திரம்

"பாவோடிணைதல் இசை என்றார் பண் என்ற
தோவாப் பெருந்தானம் எட்டானும் – பாவாய்
எடுத்தல் முதலாய் இருநான்கும் பண்ணில்
படுத்தமையால் பண்ணென்று பார்"2

(பஞ்சமரபு நிற. செய் 52)

என்று அறிவனார் பஞ்சமரபுச் சூத்திரமும் பண்ணினதும், பாடல்களினதும் உள்ளாழத்தை உள்ளபடி உரைத்து நிற்றலால் அறியலாம்.

பண்ணுக்கும், பாவுக்கும் மிடற்றுக்கும் மிக்க என்றுமே இணை பிரியாததொடர்பு உள்ளது. தமிழில் ஆக்கப்பட்டிருக்கும் நமக்குக்கிடைத் திருக்கும் திருமுறைப் பாடல்கள் பல்லாயிரம் வகையும், ஏனைய பிற்காலத் தமிழ் பிரபந்தப் பாடல்களையும் அதனதன் வகைக்கு ஏற்றபடி இசை மரபிற்கேற்றபடி, இசைநுட்பத்தினதும் தாள அமைதிக்கும் ஏற்றபடி, சொற்பதப் பொருள் இருளறுத்து வெளியிடும் ஒரே ஒரு ஏக இசைச் சாதனம் சரீரயாழ் அல்லது மிடறு என நாம் உணர் வோம்.

உலகத்திலே மிடற்றின் இலக்கணங்களைக் கொண்டு முதலில் அமைந்த இசைக் கருவி களான குழலும், யாழும் மிடற்றுப் பாடலுக்குத் துணைதருவனவேயன்றி பண்பாடல்களில் அல்லது தமிழ் பாடல்களில் உள்ள ஓர் எழுத்தையோ அல்லது சொல்லையோ அன்றி அதன் பதங்களையுயோ உரைக்கத் தகுதியற்றவை. இதை முதலில் மிகத் தெளிவாக நாம் உணர்தல் வேண்டும்.

இதனாற்றான்

"காழியர் கோன் சம்பந்தனின்னிசைத்
தமிழ் ஒருபதும் உரைப்பவர்
கலைமகள், மலைமகள், ஜயமகள், புவிமகள்
புகழ்மகள் தரவருமிவ்விரு நிலனினில்
ஈசர் எனும் இயல்பினரே எனு

ஞானபோனகரே தம் திருவாயால் உரைத்து நிற்றல் காண்போம்.

எனவே பண்பாடல்களது நாதம் விரிந்துறையும் மூலக் கருநிதியமான ஐம்பூத (சரீரயாழ்) சரீரத்தின் விரிந்த தத்துவத்தை மிகக் குறுக்கிக் காண்போம்.

"மெய் வாய் கண் மூக்கு செவியென்று பேர்பெற்ற
வைவாயு மாயவற்றின் மீதெடுக்கத் துய்ய
சுவையொளி யூறோசை நாற்ற மென்றைந்தாம்
அவை முதற் புற்கலமாம்
4 (பஞ்.சூத். 33)

மன் உடம்பாயும், நீர் வாயாயும், நெருப்புக் கண்ணாயும், காற்று மூக்காகவும், ஆகாயம் செவிகளாகவும் நிலை பெற்று நமது உடல் ஆகும். இதில்

முதன்மையானது ஆகாயம், ஆகாயத்தால் இசைக்குரிய ஒலி, ஓசைகளைச் செவி ஆராய்ந்து அறியும். அடுத்து மண் எனும் உடம்பு நாதமூல ஊற்றினை ஆராய்ந்தறியும்.

வாய், நீரின் தன்மையால் சுவைகளை வகைப் படுத்தும்– அதி உன்னத கடமையைச் செய்யும், இங்கு 96 வகை – கேள்வி நுட்பங்கள் நடம்புரியும். நா, இசையின் எழுந்தருள் பீடநாயகமாக அமைந்து நிற்றலைக் காண்போம், தமிழ், சொல்,பதம், இனிமை, வண்ணம், ஒலி, ஓசை எல்லாம் இசையூடு எழில் தரும் இசைப் பெருங்காவாக விளங்குவது திருவாய்.

அடுத்துத் தீயால் கண் ஒளியைக் காணும் கடமையைப் புரிதல் காணலாம். அடுத்துக் காற்று – நாதம் உற்பத்தியின் ஓம்காரக் கருவை மூலாதாரத்திருந்து ஆறாதாரமூடு கண்டம் (மிடறு) உச்சிவரை கொண்டு செல்வது மூக்கு.

மூக்கின் வழிவகை செல்லும் வளியானது பஞ்சபூதப் பேழையான உடலின் இயக்கசக்தி. எனவே அதை ஓசைக்குரிய சக்தியாகக் காணலாம். இதையே

"ஓசையும் ஈசனும் ஒக்குமெனவுலகில்
வாசகப்பட்டு வருவதல்லால் – ஓசையை
மெய்யகத்தாலன்றிவினவ? வொணாதென்னுமிவை
வையகத்தார் சொல்லும் வழக்கு 5
(பஞ்.சூத். 41)

என அறிவனார் சுட்டுதல் ஓசைக்கு அடிப்படையான நாத வளியின் பெருமையை அறிவதுடன், அது பொருள்பட நின்றியங்கும், நம் உடலையும் வியந்து நிற்றல் காணலாம்.

கண்பார்வையையும், வாய் இசை நிற வண்ண சுவைகளையும் மூக்கு இசை நுட்பநுகர்வினையும் செவி – 96 வகை நுட்ப இசை நுண்ணலகுகளையும் கேட்டு உணர்கின்றது. மெய் (உடல்) இவை அனைத்தினதும் நின்றியங்குதலும் காண்போம்.

**2. மூலாதாரமும் ஒலியியக்கமும்**

இவ்வாறான சரீர யாழ் உடம்பில் மூலாதாரமும் ஒலியியக்கமும் மிக அற்புதமாக இருக்கின்றது. இதைப்பற்றி மிக அழகாகப் பண்டைய நூல்கள் உரைப்பது பல்லாற்றாலும் ஒன்றுபட்டு நிற்றல் காண்போம்.

ஒவ்வொரு மனிதரிடமும் காணப்படும் கைவிரல்களில் அங்குலப் பிரமாணங்களிற் காணப்படுகின்றது. அவ்வாறு காணப்படும் அங்குலப் பிரமாணங்களில் 96 கொண்டது அவரவர் உயரம். இவ்வாறு காணும் 96 அங்குலங்களில் மேலே காணப்படும் பகுதி அண்டம் 47 1/2 அங்குலமும் கீழே காணப்படும் பிண்டப் பகுதி அதாவது கருவாதாரக் கீழ்ப்பகுதி 47 1/2 அங்குலமும் ஆக 95அங்குலம் இந்த இரு பகுதிகட்குமிடையில் அதாவது அண்டத்திலும் இடையில் நாதன் (நாதரூபமான சிவன்) சீவாதார மூர்த்தியாக, மூலாதார மூர்த்தியாக உறைகின்றான். இவற்றை இசைமொழியில் உரைப்பதனால் இசை மூலாதாரம் என்போம். இங்கிருந்தே 96வகை கேள்வி நுட்பங்கள் (சுருதி) கிளர்ந்து எழுந்து சரீர யாழை இயக்கும் ஒலியும் ஓசையும் எழுகின்றது.

அநேகர் ஒலியையும் ஒன்றாக நினைப்பர் அது தவறு. இதனை அப்பர் சுவாமிகள் இருபெரும் பகுதிகளாக்கித் திருத்தாண்டகத்தில் உரைப்பர்.
"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" 6/5 என்பது அவ்விசைவாக்கு – ஆக ஒலியும் ஓசையும் ஈசனை நாம் கண்டுகொள்ளும் வடிவங்கள்.

ஒலியும் நிறமும் – ஓசையும் வண்ணமும் இசையுள் பெரும் நுண்மைகளைத் தாங்கி நிற்கின்றது. பலரும் அறியாத ஒன்று இவை விரிவஞ்சித் தவிர்க்கப்படுகின்றது.

தமிழில் காணும் எழுத்துக்களை வல்ஒலி, மெல்ஒலி, இடையொலி எனவும், தமிழிற் காணும் சொற்பதங்களை – வல்லோசை, மெல்லோசை, இடையோசை எனவும் நாம் இசைமூலம் வகுத்துக் கொள்ள வேண்டும்.

எழுத்துப் பிறப்புப் பற்றிய நுட்பங்களைத் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நன்னூல் முதலியன விரிவாகத் தருதல் காணலாம். அதுபோன்று தொல் சொல்பொருளதிகாரங்களும் பாவினங்களும் பண்ஆளத்தியியலும் சொல்லோசை சீரடிகள், பொருண்மை முதலியவற்றை விரித்து யாப்பருங்கலத்தூடாகப் பல்வாறு தருதல் காணலாம்.

இவற்றை உலகிற்கு குன்றனையாச் சுடராக விளங்கக்கூடிய ஏக சாதனம் சரீர யாழ் எனப்படும் உடம்பேயாகும். இதையே நாத க்ஷேத்திரம் என்பாம்.

**சரீர யாழிற் காணும் பெருந்தானம் எட்டும், மிடற்றுக் கிரியைகள் எட்டும்**

சரீர யாழுமாகிய உடம்பு இசை நாதத்தை ஆறாதாரங்களூடாக வெளித்தரும். அவை: மூலா தாரம். மேலாதாரம் (சுவா திட்டானம்) உந்தி, இரு தயம், கண்டம், உச்சிவழி யாகப் பெறப்படும்[7].

இவ்வாறு பெறப்படும் நாதமே (கேள்வி) இசை நுட்பங்களது அடிப்படையாகும். இவை பெருந்தானங்கள் எனப்படும். நெஞ்சு, மிடறு, நாக்கு, உதடு, அண்ணாக்கு/ பல், தலை என்ற எட்டு இடங்களில் நின்றும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்ற உடற் செய்கை யாற் பெறப்பட்டு நமது வாயால் இயல் நுட்பங்களும் இசை நுட்பங்களும் வெளிவருதலே பண்ணிசை எனப்படும்.

பண்ணிசையின் பண்புகளிற் பின்வரும் அம்சங்கள் மிடற்றால்

வெளிக்கொணரப்படுதல் முக்கியமான கவனத்துக்குரியனவாகும். இவற்றைப் பண்பாடலை அடிப்படையாக நோக்குதல் பொருத்தமானதாகும்.

(1) எடுத்துக்கொண்ட பண்ணின் அல்லது பண்கள் அமைந்த பாடல்களின் இயற்சிறப்பு – இவை, சீர்களாலும், வர்ணங்களாலும் – நிறங்களாலும், சந்தங்களாலும், இசைக் கட்டளைகளாலும் எழுத்து – சொல் – பொருள் வன்மையாலும் நிறைந்து காணப்படுவதுடன், கவித்துவவாண்மையையும் மேலெடுத்துக் காணப்படும்.
சான்றாகச் சம்பந்தர் அருளிய
"யாமாமாநீ யாமாமா – மேற்கூறிய அனைத்து அம்சங்களுடன் பெருஞ்சீர் வண்ணத்தின் சிகரமாக விளங்குகின்றதைக் காண்போம்"[8].

இன்றும் தமிழின் சிறப்பு "ழ" கரம் சம்பந்தர் பாடல்கள் மூலம் காண்க. – அங்கு ஒரு பெரிய காட்சி "சூழ்தரு வல்வினையும்" திருப்பனந்தாள் பதிகம் "போழிளவெண்மதி" மவ்வளவு "ழிகரத்தையும், கொம்பளவு ளகரத்தையும் பக்கம் பக்கம் நிறுத்தி விடுகிறார். தமிழ் உச்சரிப்புத் தெளிவு அற்ற எவரும் இப்பாடலை இசைக்க முடியாது.

"போழுமதி தாழு நதி
பொங்கரவு தங்கு
புரிபுன்சடையினன்
யாழின் மொழி மாமை
விழியேழை 10
(சம் 2ம் திரு. திருப்பிரமபுரம்)

மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



மேற்கண்ட பாடல் வகைகளை, "ழ" கரத் தன்னாட்சியை மிடற்றினால் இயம்ப முடியாதவர்களால் எப்படி இசைக்க முடியும். இவை தமிழோடும் இயலோடும் காணும் பாரிய விடயங்களில் ஒரு துளி. சம்பந்தரது இயல் வண்ணத்தை பன் மடங்காக்கிய வண்மை பொருந்தியது அவரது இசைவண்ணம். இவற்றில் பேரறிவு பெற்றவர்களாற்கூட அவரது சந்த நுட்பங்களை ஏழிசை நுட்பங்களை அறிய இயலாது உள்ளது. சான்றாக,

"யாழ் மூரிப்பதிக தொடர்களையும்
திரு எழு கூற்றிருக்கை, திருமடக்கு
மொழி மாற்று, கோமுத்திரி பதிகத்தொடர்"

என அவை பலவாறு நீண்டு செல்வதைக் காணலாம்.

மிடற்றுப் பண்பாடல்களின்வகை தொகைப் பேராற்றல்களின் உனற்கரிய கிரீடமாக சம்பந்தர் பாடல்கள் விளங்கி நிற்பது, மிடற்றிசை வாணர்க்குக் கிடைத்த கிடைத்தற்கரிய இசைப்பெரும் புதையல்எனச் சிறு நுண்ணியறிவின் கொண்டு காணமுடிகின்றது. இவ்வாறு ஆளுமைமிக்கப் பண்பாடல்கள் அல்லது மிடற்றுப் பாடல்களின் உள்ளாழம் – நாதன் நாமம் அது நமச்சிவாய என்று நால்வரும்

துஞ்சல், காதல், சொற்றுணை, மற்று எனவும் சிவபுராணச் சிந்தனையால் "நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க" எனவும் திருவாய் மொழிந்தனர்.

நெஞ்சை நினைவுறுத்தும் அப்பர் "நிலை பெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு"[11] என நெஞ்சுறுத்தல் பதிகங்களை அருளியதோடு "பெரும்பற்றப் புலியூரானைப், பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"[12] "வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே [13] என இரந்திரந்துருகி வேண்டும் பான்மை, மிடற்றுப் பாடல்களாகிய பண்களின் மேன்மைக்கு ஒரு சிறு சான்று எனலாம். இன்னும் திருவாசகம்

எனும் மிடற்றிசைத்தேன் "ஆடுகின்றானைக் கூத் துடையான் கழற்கன்பிலே என்புருகிப் பாடுகின்றிலை" [14] என்று சுட்டுதல் காண்போம்.

திருமுறை அடியார்களாயினும், ஆழ்வார் பெருமக்களாயினும் உலகத்தவரை நோக்கி "இறைவனைப் பாடுமின் பாடுமின்" என்று பல்லாயிரம் பாடல்களைப்பாடி நம்மைப் பாடுமாறு ஆற்றுப்படுத்தித் தந்துள்ளனர். ஏன் அவர்கள் அவ்வாறு செய்கின்றார்கள். என்பதை அறிஞர் மட்டுமன்றி அறிவிலார்களும் அறிவர். அஃது யாதெனில் "சுந்தரரைத் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்ட சிவன், மதியிழந்து அவர் தவிக்கும்போது"அர்ச்சனை பாட்டேயாம் சொற்றமிழால் நம்மைப் பாடுக." 15 என்றார். இவை எல்லாம் இக்காலமன்றி எக்காலத்துக்கும் உரிய திருவாக்கு என்பாம்.

சுந்தரர்க்கு இறைவனே "பித்தா" என்று பாடுமாறு அடியெடுத்துக் கொடுத்ததாகச் சேக்கிழார் சுட்டுவர்". திருப்புகழ் ஆசிரியர் அருணகிரிக்கு அருணாசலம் அமர்ந்த முருகன் எத்துணை இயம்புவது.

மிடற்று இசைப் பண்பாடல்களை, அதாவது தமிழ்த் தெய்வத் திருமுறைகளை இறைவன் பெரிதும் உவந்து ஏற்று – பரிசும் பதமும் அருளிய வரலாறு "நாளும் இன்னிசையாற்றமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்குலகவர்முன்"

தாளமீந்து அவன் பாடற்கிரங்கும் தன்மை யாளன். 16 என ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த 7ஆம் திருமுறை ஆசிரியர் சுந்தரரால் போற்றப் படுதல் அவரது தக்கேசிப்பண் திருக்கோலக்கா பதிகத்தாற் பெறப்படும்.

திருவாசகத்தை உருகி உருகி மணிவாசகர் செப்ப தம் திருக்கரத்தால் அவற்றை ஏட்டில் பொறித்து நமக்குத் தந்தவன் "அழகிய சிற்றம்பலமுடைய அப்பன்" அல்லவா?

வாய்த்து நம்தாமக்கீதோர் பிறவி மதித்திடுமின் – 17
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே – 18
குனித்த புருவனை, கொவ்வைச் செவ்வாய்க்
குமிண் சிரிப்பனை, பனித்த சடைப்பவளமன்ன
மேனியனை, பால்வெண்ணீறனை, இனித்தமுடை
எடுத்த பொற்பாதனை – மிடற்றால் பாடுதற்கே சாரீர, சாரீரயாழுக்குக் கிடைத்தன.

என்பது நமது வாக்கன்று. நால்வர் திருவாக்கு. இதனாலன்றோ நமது நாவை ஆற்றுப்படுத்தி ஆரூர் பசுபதிச்சர பதிகத்தில் "பாடு நாவே" – 19 என்ற பதிகத்தைச் சம்பந்தரும் "நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சி வாயவே– 20 எனச் சுந்தரரும் போற்றுவர்.

"பாடுமின் பக்தர்கள் பரகதி பெறலாமே
சம்பந்தன் – 21
உரை சென் ஆன சொன்மாலை யோதும்
அடியார்கள் அரசாள்வர்
அடியார்கள் வானில் அரசாள்வர்
ஆணை நமதே" – 22

பண்ணியல் படலறாத ஆரூர்ப் பசுபதீச்சரம்
பாடும் நாவே – 23
பக்திமையாற் பாடலறாத ஆரூர்ப்
பசுபதீச்சரம் பாடும் நாவே –
24 என்றும்

நமது திருநாவை இறைவன் புகழை இசை யுடன் பாடுமாறு ஆற்றுப் படுத்தும் பெருந் தன்மைப் பொருந்திய திருமுறை களை – ஆராய் வதைவிட தக்கோரைக் கொண்டு பாடுவித்துக் கேட்பதே பல்கோடி சிவபுண்ணியங் கட்கு இணையானது என் பது நாம் அரிதிற் தெளிந்த சத்தியமும் உண்மையும் என்பாம்.

"ஞாலம் எழுமாம் ஆலவாயிலார்"
சீலமே சொலீர் காலன் வீடவே"
24

# கனவுகளும் பலன்களும்

அ.வே. மணிவாசகர்
யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்

நாம் காணும் கனவுகளும் அவை ஏற்படுத்துவதாகக் கருதப்படும் பலன்களும் பற்றிப் பல வாதப்பிரதிவாதங்கள் உண்டு. இருப்பினும் கீழைத்தேசத்திலும், மேலைத்தேசத்திலும் பல அறிஞர்கள் கனவுகளில் நம்பிக்கையுள்ளவர்களாகவும், அவை அர்த்தமுள்ளவையே என்றும் கருதுகின்றார்கள். பல காவியங்களிலும், வரலாற்றுச் சம்பவங்களிலும் கனவுகள்பற்றிக் கூறப்படுகின்றன. ஜூலியஸ் சீசர், கட்டப்பொம்மன் ஆகியோரின் மரணங்கள் ஏற்கனவே கனவுகள்மூலம் உணர்த்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்து மதத்தில் பிரஹதாரண்ய உபநிடதம், பிருஹ உபநிடதம், பிரஸ்ன உபநிடதம், மாண்டூக்கிய உபநிடதம் போன்றவை கனவுகளைப்பற்றிக் கூறுகின்றன. இந்துமத தத்துவத்தின்படி கனவு என்பது விழிப்பு நிலைக்கும், ஆழ்ந்த உறக்க நிலைக்கும் இடைப்பட்ட நிலையாகும். கூர்ம புராணப்படி பகவானே ஆத்மாவைக் கனவைக் காணும்படி செய்கின்றார். இராமானுஜர் கனவு விம்பங்கள் பகவானாலேயே படைக்கப்படுவதால் அவற்றிற்கு எதிர்காலத்தைத் தெரிவிக்கும் சக்தி உண்டு என்கின்றார்.

உறங்கியவுடன் தோன்றும் கனவுகள் கடந்த காலத்தோடு தொடர்புடையவை. நள்ளிரவு நேரத்தில் தோன்றும் கனவுகள் நிகழ்காலத்தோடு தொடர்புடையவை. விடியற் காலையில் தோன்றும் கனவுகள் எதிர்காலத் தோடு தொடர்புடையவை. பகலிற் காணும் கனவு பலிப்பதில்லை.

கனவுகளும் அவற்றின் பலன்களும் பற்றி இந்துமத சாஸ்திரங்களில் அதிகம் பேசப்படுகின்றது. இங்கு சுருக்கமாகக் கனவிற் தோன்றும் விடயங்களின் நன்மை தீமைபற்றி நோக்கப்படுகின்றது.

பின்வருவனவற்றைக் கனவிற் காண்பது நன்மையாகும். குழந்தை, அரசன், அரசி பிரகாசமான ஒளி, கோயிற் கோபுரம், தேவதைகள், திருநீறு, சந்தனம், பாக்கு, சங்கு, சாந்து, காலணிகள், பளிங்கு, தலையணை, மலை உச்சி, இளம்ஜோடி, பிணம், குதிரை, கழுதை, ஆமை, எறும்பு, எட்டுக்கால் பூச்சிகள், மாமிசம், கடிகாரம், கட்டில், பனிக்கட்டி, உடும்பு, சிங்கம், எருது, மான், சேவல், கிளி, உரல், உலக்கை, கலப்பை, சந்திரன், நட்சத்திரம், மீன், பச்சிலை, மரம், பசுமையான வயல், கீரைவகைகள், பருப்பு வகைகள், தானியங்கள், முயல், பட்டாடை, பழங்கள் (நாவற்பழம் பலாப்பழம் தவிர)

பின்வருவனவற்றைக் கனவிற் காண்பது தீமையாகும். திருமணம், எருமை, குரங்கு, விஷம், இரத்தம், பன்றி, விதவை, கொம்புள்ள மிருகங்கள், செம்மறியாடு, நாணயம், பண நோட்டு, புற்றுப் பல் விழுதல், எண்ணெய் தேய்த்து முழுகுதல், வெல்லம், பிண்ணாக்கு, பிரம்பு, பானைகள், ஆந்தை, நரி, கழுகு, காகம், குயில், பல்லி, நத்தை, நண்டு, ஈக்கள், மயில், கோழிக்குஞ்சு, மழை, வானவில், எலி இவை மேல் எழுந்தவாரியான எடுத்துக் காட்டுகளே இந்து மதத்தில் உள்ள சொர்ப்பன சாஸ்த்திரங்கள் கனவுகளைப் பற்றியும் அவற்றின் பலன்கள் பற்றியும் விரிவாகவும் ஆழமாகவும் பேசுகின்றன.

# மெய்ப்பொருளின் உண்மையை உணர்ந்து வாழ்ந்த சித்தர்கள் குடிகொண்ட லிங்கேஸ்வர ஆலய மகத்துவம்

நா. சிவதிருச்செந்தூர்நாதர்
*செயலாளர்*

உணர்வரிய மெய்ஞ்ஞானம் உதயமாவதற்கு தரப்பட்டது இன்மானுடப் பிறப்பாகும். மதி நலமுற்றாற்றான் மனநல மடையலாம். ஆக்கைக்கே இரைதேடி அமைந்து காக்கைக்கே இரையாகிக் கழியாமல் இவ்வுடம்பை முத்தி நலம் பெறும் ஏணியாக வைத்திருக்க வேண்டும். மனிதப் பிறவி தவிர்ந்த ஏனைய ஊனுடம்பு களுக்குத் திசையும் நரையும் இல்லை. மனிதப் பிறவிக்கு மாத்திரம் நரை திரை உண்டு. நாம் தவ வாழ்வு பெற்றுத் தனி ஞானம் அமைய வேண்டும் என்பதற்காக நரையை இறைவன் நமக்குத் தந்திருக்கின்றான். நரை வருமென்றஞ்சி நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார் என்று நாலடியார் கூறுகிறது. எனவே திருவடி ஞானம் பெறவே மனிதப்பிறவி நமக்கு வாய்த்துள்ளது என்பதை நாம் மறவாதிருக்க வேண்டும்.

இவ்வுலகிற் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அடைய விரும்புகிறான். கல்விகேள்வி முற்றிய சான் றோர்கள் பரிபூரண இன்பத்தையே ஆனந்தம் என்று கண்டார்கள். நாம் அடைய இருக்கும் அந்த ஆனந்தம் எம்மாலே எமக்குள்ளே விளைவிக்கப்படவேண்டியது. ஆன்மா ஆனந்த மயமானது, வியாபகமானது. ஆனால் அந்த நிலையை மறைத்துக் கொண்டு நிற்கிறது. ஆணவம் நீரைமூடிய பாசிபோல அது விளங்கு கின்றது. இறைவனை ஒன்றியிருந்து நினைப்ப வர்களுக்கு இப்பாசியாகிய இருள் நீங்க வாய்ப்பு உண்டாகும். பாசிபிடித்த இடங்களில் வழுக்கல் ஏற்படும். அதேபோன்ற ஆணவம் தாண்டவ மாடும். உள்ளத்தில் இறைவனுடைய திருவடி பதியாது வழுக்கிவிடும் அசுரசம்பத்துக்கள் இறைவாழ்வைத் தடுப்பன இறைவனோடு இசைந்த இன்பத்தை உடையோர் அசுரசக்தியை வென்றார்கள். செம்பொருட் சிறப்பை உணர்ந்து வீடுபேறு பெற்றார்கள் என்பதைப் புராண இதிகாசங்கள் காட்டுகின்றன.

நிலையற்றவற்றை நிலையானது என உண்ணும் மயக்கம் ஆன்மாக்களுக்கு உண்டு. இவ்வுல கத்திலே நாம்காணும் பொருள்கள் அத்தனையும் தோன்றி அழிவதைத் தினந் தோறும் கண்டு கொண்டு இருக்கிறோம். ஆனால் அவற்றை மெய்ப்பொருள் என்று கருதி மயங்கியும் விடுகின்றோம். இவ்வுடம் பையுமே "மெய் யென்று பேசும் பாழ் பொய்யுடல்" எனத் தாயுமானவர் கூறு கிறார். நிலையானதும், அழியாததும், மாறில்லாதது மான ஒரு பொருள் என்றும் உண்டு என்று மெய்ஞ் ஞானிகள் கண்டு அதற்கு 'இறைவன்' என்ற நாமத் தைச் சூட்டினார்கள். அதுவே மெய்ப்பொருள். மெய்பொருளைப் போற்றி யவர்கள் எல்லோரும் வாழ்ந் தார்கள் என்றும் பொய்ப்

பொருளைப் போற்றியவர்கள் வீழ்ந்தார்கள் என்றும் புராண இதிகாசங்களிற் காணுகிறோம். திசைமாறிச் செல்பவன் குறித்த இலக்கை என்றுமே அடையமாட்டான் பொய்யை மெய் யாகக் காண்பவர்களை "மங்குவார்" என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார். "மங்குவார் அவர் செல்வம் மதிப் போமல்லோம்" என்பது அவர் பாடலாகும்.

நாம் செய்த வினையை நாமே அனுபவிக்க வேண்டும். இறைவனிடம் அன்புசெலுத்தும் போது வினையனுபவம் தீர்ந்து மெய்யனுபவம் உண்டாகிறது. திருவாவினன்குடியில் முனிவர் கள், கந்தருவர்கள், தேவர்கள், வழிபாடு செய்கி றார்கள். ஆனால் மூவகையினரும் மூவகை நோக்கத்தோடு வழிபாடு ஆற்றுகின்றார்கள். பிறவியற வேண்டுமென்று வேண்டுகின்றனர். முனிவர்கள். உள்ளத்தில் இறைவன் இசை மயமாக ஒலியெழுப்பிக் கொண்டிருக்க வேண்டு மென்று இசை பாடுகின் றனர். கந்தருவர்கள் போக போக்கியங்கள், பதவிகள் நிலைபெற வேண்டும் என்று வழிபடுகிறார்கள் தேவர்கள். எல்லாவற்றையும் இறைவன் ஏற்றுகொள்கின்றான் மாணிக்கவாசகப் பெருமா னும் திருவாசகத்தில் தேவர்கள் வழிபாட்டு நோக் கத்தைக் காட்டுகிறார்.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்
வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து
தம்மையெல்லாந்தொழ
வேண்டிச்
சூழ்த்துமது கரமுரலும் தாரோலை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

திருவாவினன்குடியிலும் தேவர்களுடைய வாழ்த்து இவ்வாறே அமைத்துள்ளது. சங்கச் செய்யுள் ஒன்றில் முருகனைப் பார்த்து பாடுவதாக அமைந்த ஒரு பாடல்

நின்பால் இருப்பது பொன்னும் பொருளும் போகமு மல்ல
அன்பும் அறனும் அருளும் மூன்றே

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது வினைதீரும் காலத்திற்றான் இத்தகைய மெய்யனுபவம் கிடைக்கும்.

பற்றுக் காரணமாக வருவது பிறவி. பிறவி அலைகள் தொடர்ந்து எழுந்தும் விழுந்தும் வருகின்றன. 'எழு கடல் மணலை அளவிடின் அதிகம் எனதிடர் பிறவி அதிகமாயம்' என்றார் அருணகிரிநாதர். துன்ப அலைகளைத் தன் திருவடியாற் போக்கிப் புனிதமாக்கிக் கொண்டி ருக்கிறான் அலைவாய் விளங்கும் முருகப் பெருமான். ஆசைகள் அறுமளவுக்கு அறு முகவனின் திருவடிஞானம் கைகூடுகிறது. ஆசைகள் பெருகப் பெருக அமைதியின்மையும் அதிகரிக்கிறது. பிறர் பொருட்டு ஆசைப்பட்டால் அது பிறவியை அறுக்கும். தன் பொருட்டு ஆசைப்பட்டால் அது பிறவியைப் பெருக்கும் தாயுமானவரும் ஆசைப்படுகிறார்.

கொல்லா விரதம் குவலயமெல்லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவது என் விச்சை பராபரமே.

தன் பொருட்டு ஞானிகள் ஆசைப்படுவ தில்லை. இராவணன் ஆசைப்பட்டு அழிந்தான். துரியோதனன் ஆசைப்பட்டுத் துணைவரோடு அழிந்தான். சூரன் ஆசைப்பட்டுக் கிளை முத லோடு தொலைந்தான். ஆசை அற வேண்டும். இதற்கு இறைவனை நினைக்க வேண்டும்.

"வேண்டுதல் வேண்டாமை யிலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில"

என்பது வள்ளுவருடைய கூற்று. துன்பத்தை நீக்கும் வழியை இங்கு காணுகின்றோம். ஆசை அறும்போதுதான், உபதேச குரு வாய்க்கின்றார். முருகனே உபதேசகுரு. பரமனுக்கு உபதேசித் தான்; அகத்தியருக்கு உபதேசித்தான்; அருண கிரிநாதருக்கு உபதேசித்தான்; பாம்பனடி களுக்கு உபதேசித்தான்; உலகேழும் தானே அகண்டாகார நிலையில் விளங்குகின்றான் என்பதை உணர்த்தி நிற்கின்றான். குருமூர்த்தி தன்னிடம் ஞானம் பெற்றவர்களுக்கும் இந் நிலையை அமைய வைக்கின்றான். இந்நிலை வந்துவிட்டால் விருப்பு வெறுப்பு ஏற்பட இடமில்லை. இன்பமும் துன்பமும் சமனிலையில் அமைந்துவிடும். பகை நட்பு என்பதும் ஏற்படாது.

இந்நிலையில் வாழ்ந்து காட்டிய இடமாக அமைந்துள்ளது கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் வாழ்ந்து காட்டிய மாதாஜி செல்லம்மா அம்மையார் வாழ்கை நிலை. எமது நாட்டின் கண் வாழ்ந்த சித்தர்கள் கூறிய உபதேசத்தின் வழிவாழ்ந்து, இறை அடிசேர்ந்த இந்தப் புண்ணிய பூமியில் இன்று எம் மத்தியில் மாதாஜி லிங்கேஸ்வர ஆலயமாகக் காட்சி கொடுக்கின்றது. இதிற் கூறப்பட்ட தத்துவ நிலையை எவன் ஒருவன் தன்னகத்தே கொள்கின்றானோ அவன் இப்பாரில் எல்லாரும் மதிக்கும் ஞானியாக வாழ்வான் என்பது உண்மை நிலையாகும்.

**தக்கசா தனத்திலிருந்து குருபரன் தாளை நோக்கி**
**மிக்கவெண் ணீற்றையள்ளி உடம்பினிற் தரித்து நன்கு**
**சிக்கிய மனத்தை நீக்கி நின்மலப் பரமந்தன்னில்**
**சொக்கியே நிற்பதன்றோ நல்லருள் ஞானநிட்டை**

**பொழிப்புரை:**

பொருத்தமான இடத்தில் பொருத்தமான பயிற்சியுடன் இருந்து, குருநாதர்களில் சிறந்தவருடைய திருப்பாதங்களை நினைந்து அல்லது நோக்கியவாறு, பெருமைமிக்க வெண்ணீற்றை (விபூதியை) அள்ளி உடம்பிலே தரித்து, பந்தபாசங்களில் சிக்கித்தவிக்கும் மன இறுக்கங்களைத் தளர்த்தி மாசற்ற அல்லது மலபந்தம் விடுபட்ட முழு முதற் பொருளிலே திளைத்து நிற்பதன்றோ ஞானநிட்டை அல்லது திருவருட் தியானமாகும்.

# கைதடிப் பதிக்குக் கிடைத்த மாதாஜி லிங்கேஸ்வரர்

*திருமதி சிவலோஜினி கிருஷ்ணமூர்த்தி*
**ஆசிரியை**

தவத்திரு சச்சிதானந்த சுவாமி அவர்களைக் குருவாகக் கொண்டு சன்மார்க்க நெறியில் வாழ்ந்து, குருமணியின் பாதமே துணை எனப் பகர்ந்து, தன்னை நாடிவந்த அடியவர்களின் அல்லல் களைந்து அருள்மழை பொழிந்தவர் சுவாமி செல்லம்மா அம்மையார் அவர்கள். இவர் சச்சிதானந்த சாகரத்தில் படிந்து அக்கருணை நதியின் அருளமுத மொழி பருகி இற்றை வரைக்கும் எங்களை இறைமய வாழ்க்கை வாழவைத்த தெய்வம் அம்மா அவர்களே என்றால் அது மிகையாகாது.

ஆத்ம ஞானிகளின் பாதங்கள் பதிந்த அம்மையாரின் ஆச்சிரமத்தில் தியான மண்டபம் ஒன்று திகழ்ந்து காணப்படுவதும் பேரானந்தத்திற்குரியதாகும். எனவே அம்மையார் அவர்களின் சிவழிபாட்டு சிவனடியார் தொடர்பால் உயர்ந்த இக்கிராமத்திற்கு, மகுடம் வைத்தாற்போல ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் மாதாஜி லிங்கேஸ்வரர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

எனவே இந்த லிங்க விக்கிரகத்தின் மகிமை இந்தியாவிலுள்ள நர்மத ஆற்றங்கரையில் திருவுள்ளம் கொண்ட காசிவிசுவ நாதப்பெருமான்தான் தற்போது கைதடிப் பதியில் மாதாஜி லிங்கேஸ்வரராக சிவலிங்க வடிவில் ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரம ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு 6.5.2008 இல் மகா கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெற்று அதனைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்றது.

இந்தக் கும்பாபிஷேகக் கிரியையினதும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவலிங்கத்தினதும் சிறப்புப் பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போமேயானால், திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு நிகழ்த்தப்படும் கிரியைகளின் உயிர்நாடியாக விளங்குவது மந்திரமாகும். கிரியைகளில் ஈடுபடும் ஒருவனுக்கு புறஅடக்கமும், அக அடக்கமும் படிப்படியாக ஏற்படும், பக்தியுடன் நல்ல கிரியைகளில் மனம் ஈடுபாடு கொள்ளுமிடத்து உள்ளத்தில் ஒரு நிறைவான உணர்வு மேலிடுகின்றது. இவ்வுயர் நோக்கத்திற்காகவே சமயக்கிரியைகள் மக்களாகிய எம்மிடத்தே நிலைபெற்று விளங்குகின்றன.

இத்தகைய கிரியைகளின் சிறப்பினைக் கருத்திற் கொண்டே சைவசித்தாந்த சாஸ்திர நூல்களில் ஒன்றாகிய சிவப்பிரகாசம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"கிரியையென மருவுமவை யாவும்
ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்"

அதாவது ஆகம நூல்களில் 'கிரியை' எனச் சொல்லப்பட்டுப் பொருந்தி இருப்பனயாவும், ஞானம் கிடைப்பதற்குக் காரணமாக அமைவன வாகும்.

அடுத்து சிவலிங்கத்தின் சிறப்புப் பற்றி நோக்கின் இச் சிவலிங்கம் பசுவினிடத்திற் பால் அதன் உடம்பு முழுவதும் செறிந்திருப்பினும், மடியினிடமாகப் பெற்றுக் கொள்ளுதல் போல, இறைவன் எங்கும் நிறைந்தவராக இருப்பினும் அவரின் அருளைத் திருக்கோயில் உள்ளி ருக்கும் சிவலிங்கத்தினூடாகவே பெற்றுக் கொள்ளுதல் சாத்தியமாகும்.

> "திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
> சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவணங்கே"

என்பது சிவஞானசித்தியார் கூற்றாக மிளிர்கிறது.

ஆகம மரபின்படி நிறுவப்படும் கர்ப்பக் கிருகத்தில் அமைந்திருப்பது சிவலிங்கமாகும். இது இறைவனது அருவுருவத் திருமேனியாகும். இதனைச் சதாசிவ மூர்த்தம் எனவும் கூறுவர். சிவலிங்கத்தில் கோமுகியுடன் கூடிய வட்ட வடிவமாகிய பீடம் சக்தியைக் குறிக்கும். அதன் மேலுள்ள இலிங்கம் சிவத்தைக் குறிக்கும். இவை இரண்டும் பொருந்திய வடிவமே உலகம். இதனைச் சத்தியுஞ் சிவமுமாய தன்மை யிவ்வுலக மெல்லாம்" என்று ஞானசாத்திரம் என்னும் நூல் கூறுகின்றது. எனவே இலிங்கம் என்றால் உலகம் ஒடுங்குவதற்கும் மீளத் தோன்றுவதற்கும் காரணமாயுள்ளவடிவம் என்பது பொருளாம்.

இயற்கை அழகைச் சிவவடிவிற் காணு வதைப் போன்று ஐம்பெரும் பூதங்களையும் சிவலிங்கத்திற்காணும் மரபும் உண்டு. திருக்கோயில் இடம்பெறும் பிரதிஷ்டையாகிய கும்பாபிஷேகத்திலும் இவ் இயற்கைத் தத்து வத்தினை உணரமுடிகிறது. எங்கணும் வியாபித்து விளங்கும் இறைவன் இவ் வியற்கைச் சக்திகள் வழியே அதாவது ஆகாயம், காற்று, தீ, நீர் என்ற வரிசையிற் படிப்படியாக ஒடுங்கி, பிருதுவி அம்சம் பொருந்திக் கர்ப்பக் கிருகத்தில் உறையும் சிவலிங்கத்தில் இறுதியில் நிறைவெய்துவதும் குறிப்பிடத் தக்கது.

மேலும் சிவலிங்கத்தின் பெருமையை எடுத்துப்பார்க்கும்போது சிதம்பரம் என்னும் தில்லைப் பெருங்கோயிலில் அருவுருவாகிய சிவலிங்கம் நிலைபெற்று விளங்கும் இடம் திருமூலட்டானம் எனச் சுட்டப்படுகிறது. தென்னாட்டிலும் ஈழத்திலும் உள்ள சிவத் தலங்கள் யாவற்றிலும் கருவறையில் விளங்கு வது சிவலிங்கத்திருமேனியாகும். வீதிக்கு எழுந்தருளும் மூர்த்தம் அம் மூலலிங்கத்தின் படிமத் திருமேனியாக அமை யும். இவ்வாறு மூர்த்தி விசே டம் பெற்றுச் சிவலிங்கம் கருவறையில் மூலவிக்கிரக மாய் முதன்மை பெற்று விளங்கி, கைதடிப் பதியில் ஆலயத்தில் அமைந்து காணப்படுவது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

மேலும் லிங்க புராணத்தில் இடம்பெறும் பிரம்மா, விஷ்ணு அடிமுடி தேடிய கதையும், சிவ புராணத்தில் லிங்கத்தை பிரணவத்தோடு தொடர்பு படுத்துவதையும் பார்க்கும் போது, புராணங்கள் லிங்கத்தை சிவனுக்குரிய

அடையாளமாகவே குறிப்பிடுகின்றன. வரலாற்று ரீதியில் நோக்கின் இராமன் தனக்கு ஏற்பட்ட தோஷங்களில் இருந்து விடுபட இராமேஸ் வரத்தில் இலிங்கமொன்றினை நிறுவி வழிபாடு செய்த மரபும் காணப்பட்டது. இவ்வாறாக பாரெங்கணும் நிறைந்து விளங்கும் இறைவனைச் சிவலிங்கத்திற் சிறப்பாகப் புலனாகும்படி செய்யும் கிரியையும் சிவலிங்கத் தத்துவத்தினை உணரத் துணை புரிவதாகும். இவ்வகையில் உலகும் உயிர்களும் பூதங்களும் சிவனிடத்தே பொலிவுபெறும் காரணத்தால் "எல்லாம் சிவமயம்" எனச் சைவர் போற்றுவர்.

ஆகவே பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தின் வழிபாட்டம்சம் ஆலயங் களினூடாக நீண்டகாலப் பாரம்பரிய உணர்வின் நிகழ்காலச் சின்னங்களாக அமைந்து பக்தி உணர்வை வளர்ப்பதோடு, ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உதவுவனவாக உள்ளன. அந்தவகையில் எமது கிராம மக்களுக்கு ஒரு வரலாற்றுப் பெருமையை இவ்வாலய வழிபாடு ஏற்படுத்தித் தரும் என்பது எனது எண்ணம்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது
இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"

**மனத்தினை விடயபாதை சென்றிடா தடக்கித்**
**தினைப்பொழு தாயின் வாசனை வழிவிடாது**
**அனைத்துமாய் நிற்கும்ஞானதற்பர நிலையில் நின்று**
**வனப்பெரு மாய்கை தன்னை நீப்பது ஞானநிட்டை**

**பொழிப்புரை:**

மனத்தைப் பிறவிடயங்கள் மேல் செல்லாது அடக்கி தினைப்பொழுதிலாவது உலக இன்பங்களில் செல்லவிடாது எல்லாமாக நிற்கும் திருவருள் கூட்டும் மேம்பட்ட நிலையில் நின்று எம்மை மாய்க்கும் துன்பத்தை நீக்குவதே ஞானநிட்டையாகும்.

# என் கடன் பணி செய்து கிடப்பதே

தாயின் அடியமையவள்
திருமதி அ. குகதாசன்

"ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து இவ் உலகு எங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் எந்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே"

என்ற அபிராமிப்பட்டரின் பாடலுக்கு இணங்க ஒரே பராசக்தி பல சக்திகளாக விரிந்து அண்டம் எல்லாம் நிறைந்து அருள் ஒளி பரப்பும் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயமாக இன்று திகழ்கின்றது. எனது குருவான அன்னையின் சக்தி சுத்தப் பிரம்மம் ஆன சிவலிங்கமாகவும் அடியவர்களின் வினைகளைக் களையும் விநாயகன் ஆகவும் தந்தைக்கு உபதேசம் செய்த பாலமருகனாகவும் எம்மை எல்லாம் காக்கும் ஆனந்த வைரவராக காட்சி கொடுத்துக் கொண்டு இருக்கின்றது. "ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க" என்ற கூற்றும் இதை உணர்த்துகின்றது.

பாலர் பாடசாலை ஆசிரியராக இங்குவந்த எனக்கு ஆத்மீக தத்துவங்களையும், கருத்துக் களையும் திருவாய் மலர்ந்தருளிய மாதாஜியின் சக்தி என்றும் வாழவைக்கின்றது. மாதாஜியின் தவத்தின் மேன்மையை அருட்கடாட்சத்தை வார்த்தைகளாற் கூறமுடியாது. மாதாஜியின் குரு பக்தியும் தவத்தின் வலிமையும் அருட் கடாட்சமும் ஒன்றிணைந்து மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயமாகத் திகழ்கிறது.

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் அருட் கடாட்சத்தினால் மாதாஜியின் உள்ளத்திலே ஸ்ரீமத் குழந்தைவடிவேலு கருக் கொள்ளத் தொடங்கினார். அவரினால் செயற்படுத்தப்பட்ட அறப்பணிகள், நூல்வெளியீடுகள், உருவாக்கப் பட்ட கட்டிடங்கள் மாதாஜியின் தவத்தின் மேன்மையை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. மேலும் மாதாஜியின் சமாதி வைபவங்கள் சமாதியிலே உருவாக்கப்பட்டுள்ள மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் என்பன அமைவதற்கு மூலகர்த்தாவாக தாயின் அருட்கடாட்சம் பெற்ற ஸ்ரீமத் குழந்தைவடிவேலு விளங்குகின்றார்.

நடமாடும் கோயிலாக விளங்கிய தாய்க்குச் செய்த சேவை மகத்தானதும் பெருமைக்குரிய தொன்றானதும் ஆகும். சிவனடியாருக்கு செய்யும் சேவை ஒரு ஆலயம் அமைத்து வணங்குவதற்குச் சமனாகும். சிவபோகம் என்னும் பேரின்ப வெள்ளத்தில் திழைத்த தாயின் உடம்பு கோயிலாகி மாதாஜி லிங்கேஸ்வரர் என்னும் பெயர் பெற்றுள்ளது. கருணை நிறைந்த அருள்மொழி தேசவிளக் காகத் திகழ்கின்றது.

"சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி திகழும்
பராசக்தியும் சக்தி தழைக்கும் சிவமுமாகிய
மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு
என் கடன் பணி செய்து கிடப்பதே.
தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவுரு சிந்தித்தல் தானே

மாதாஜி லிங்கேஸ்வரர் பெருமானை வணங்கித் திருவருள் பெற்று வாழ்வோமாக.



# இந்துக்கள் வழிபாட்டில் விரதங்கள்

திருமதி நீரஜா சரவணபவசர்மா
இணுவில்.

இந்துமதத்தில் வழிபாடு என்பது மிகவும் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. எல்லா மதங்களிலும் வழிபாடு என்பது ஒரு பொதுவான விடயம். ஆனால் இந்துமதத்தில் மனிதன் கடவுளுடன் ஐக்கியமாகி விடுகின்றான். அதற்கு அவனது வழிபாடே காரணமாகும். இந்தவிதமான வழிபாட்டை மேற்கொள்ள இந்துமதத்தில் வகுக்கப்பட்ட கோட்பாடே விரதமாகும்.

"விரதம்" என்ற சொல்லின் பொருள் வளர்ச்சியை ஆராய்ந்தால் "விரத" என்ற சொல் "ரித்" என்ற வடமொழிச் சொல்லுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதை ஆராயலாம். 'ஒழுக்க நெறியை நிலை நாட்டுதல்' எனும் பொருளில் 'ரித' என்ற சொல் வேதங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'ரிதம்' என்ற ஒழுங்கு முறைமையே 'விரத' என்ற பொருளில் மனிதவாழ்வில் ஒரு சீரான ஒழுக்கத்தை வற்புறுத்தும் நோக்கிற் பிற்காலம் வளர்ச்சி அடைந்திருக்கலாம்.



மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்



இயற்கை ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் இருப்பது போல, மனிதவாழ்வும் ஒரு குறித்த கட்டுப்பாட்டுக்கமைய இயங்குவது நன்மை தருமெனச் சமயங்கள் யாவும் கூறுகின்றன. விரதக் கிரியைகளும் மனித சமூகத்தை 'ஒழுக்கம்' என்ற கயிற்றினாற் கட்டி வைத்துப் பேணும் ஒரு சாதனமாகவே இந்து சமயத்திலே அமைந்து இருக்கின்றன எனக் கூறினால் மிகையாகாது.

"கர்த்தவீய விஷயே நியத; ஸங்கல்பர் வ்ரதம்"

அதாவது, தான் செய்ய வேண்டிய விஷயத்தில் உறுதியாக மனதில் தீர்மானம் செய்வதற்கே விரதம் என்று பெயர். ஆகவே விரதம் அனுட்டிக்கும்போது என்ன என்ன செய்ய வேண்டும் எதை எதைச் செய்யக்கூடாது என்பதை இந்துமத நூல்கள் பலவும் விரித்துக் கூறுவதை நாம் அவதானிக்கலாம்.

"மனம் பொறிவழிபோகாது நிற்றற் பொருட்டு
உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம்
வாக்கு, காயம் என்னும் மூன்றினால் கடவுளை
விதிப்படி மெய்யன்போடு விசேடமாக வழிபடுதல்"
இதுவே விரதத்தின் தாற்பரியமாகும்.

இதனையே சதபதபிரமாணமும்
'மனிதன் எதுவித உணவுமின்றி விரதநாட்களில்,
உவாவாஸ நாட்களில் கடவுள் நினைவிலே
எந்நேரமும் மூழ்கியிருப்பன்"
எனக் கூறுகின்றது.

ஆண்டு முழுவதுமே விரதங்களும், விழாக்களுக்குள் நிரம்பியுள்ளன. எந்தநாளும் நல்லநாள்தான். அப்படிச் சிறந்த நாளாகச் செய்துகொள்ள சித்த சக்தி வேண்டும். இப்படியான சித்தசக்தியை அளிப்பதுதான் விரதம். விரதங்கள் புதிய நம்பிக்கையையும்

மகிழ்ச்சியையும் ஏற்படுத்தவல்லது என்ற நம்பிக்கையே இந்துசமய மரபில் விரதங்கள் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பெறக் காரணமாயிற்று எனலாம். மேலும் தெய்வபக்தி என்ற அடிப்படையிற் பண்டிகைகளை அமைத்தாற்றான் அதைத் தொடர்ந்து மக்கள் நடாத்தி வருவார்கள் என்ற உண்மையை நம்முன்னோர்கள் அறிந்திருந்தனர். பொருளாதாரம் ஒருபுறம் இருக்க, மக்களின் பண்பு வளரவும். தெய்வபக்தி பெருகவுமே விரதங்கள் அமைந்துள்ளன.

சமூகத்தில் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தும் சாத்வீகசாதனமாகவே விரதம் அமைந்துள்ளது. ஒவ்வொருவரும் தத்தம் நெறிக் கட்டுப்பாட்டுக்குள் வாழ்வதாற் சிறந்த குடும்பத்திட்டம், பண்பாடு, உடல் ஆரோக்கியம், தூய்மை, கொடை, அழகு, சுகாதாரம் முதலிய சிறந்த விழுமியங்களாக உருவாகின்றன. ஆகையால் வெறுமனே உபவாஸமிருந்துகொண்டு சகலவிதமான அழுக்காறுகளுடன் விரதம் பூணுவதைவிட எளிய பண்புகளை வளர்த்து ‘சத்தியவிரதம்’ பூண்டொழுகுவதே உண்மையான விரத நெறியாக இந்துமதம் வகுத்துள்ளது. இந்துக்களின் விரத நியமங்களை ஆகம நூல்கள் இரண்டு பிரிவிலே வகுத்துக் கூறுகின்றன. அவையாவன:

ஆன்மார்த்தம்
பிரார்த்தம்

இவை முறையே காமிக விரதம், நிஷ்காமிய விரதம் என்ற பெயரிலே அழைக்கப்படுகின்றன. ஆன்மீக ஈடேற்றம் கருதியும் பயன்கருதாது மேற்கொள்ளப்படும் விரதம் பரார்த்த காரியம் எனப்படும். மனிதன் தன் உலகியல் தேவைகளை முன்னிட்டுச் சுய நன்மை கருதிப் பின்பற்றப்படும் விரதம் ஆன்மார்த்தமானது எனப்படும்.

இவ்வாறு பின்பற்றப்படும் விரதமானது நாட்டில் வாழும் இந்துக்கள் எல்லோராலும் பின்பற்றப்படும் விரதங்கள் பெரும்பாலும் ஒன்றாகவே காணப்படுகின்றன. ஆனால் அவற்றைப் பின்பற்றும் விதிமுறைகளில் அவர்களிடையே மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிவன், சக்தி, முருகன், திருமால், விநாயகர், சூரியன் போன்ற அறுவகைக் கடவுளருக்கும் உரிய விரதங்கள் மூன்று மரபிலே அடக்கப்படும். அவை வாரவிரதம், திதிவிரதம், நட்சத்திர விரதம் எனப்படும். இவ்விரதங்கள்யாவும் மாதங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். குறிப்பாக இந்துசமய நியதிப்படி ஒவ்வொருநாளும் ஏதோ ஒரு வகையிற் புண்ணிய காலமாக இருப்பதால் அவரவர் நோக்கிற்குத் தக்கவாறு அனைவரும் ஏதோ ஒரு வழியைப் பின்பற்றப்படும் வகையிலே இந்து விரதங்கள் அமைந்திருப்பது உற்று நோக்கத் தக்கது.

தொகுத்து நோக்கும்போது இந்துக்களின் வழிபாட்டு நெறியில் முக்கியம் பெறும் விரத நெறிகள் சாதாரண மக்களை ஆன்மீக வாழ்விற்கு இலகுவாகப் பயிற்சியளிக்கும் கருவிகளாகவே பயன்படுத்தப்படுகின்றன. உலகியற் சூழல்களில் ‘கடவுள் வழிபாடு’ என்னும் மேலான கடமைகளின் நியமங்களைக் கணம் தோறும் கடைப்பிடிக்க முடியாதவர்கள் வாரத்தில் சில நாட்களேனும் விசேடமுறையில் இறை வழிபாட்டில் தம்மை ஈடுபடுத்துவதற்கு விரதங்கள் அதி எளிமையான சாதனங்களாக விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை.

# சக்தியின் மகத்துவம்

க. மகிந்தன்
யாழ்ப்பாண இந்துக் கல்லூரி

"அருளது சக்தியாம் அரன் தனைக் கருளையன்றி
தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை"

என்பது சைவசித்தாந்த உண்மை. சிவமானது அரிய பொருள் சக்தி. எளிமையான பொருள் சிவம். அருமையின் அழகாகத் தோன்றும் போத சக்தி எளிமையின் அழகாக விளங்குகின்றாள். "சிவம்" எனும் பதத்திற்கு இவ்விரு இயல்புகளும் காணப்படுகின்றது. 'சி' என்றால் அரிய பொருள்; 'வ' என்றால் எளிய பொருள். இதனாலேயே சிவமும் சக்தியும் இரண்டறக் கலந்து உள்ளதெனச் சைவசித் தாந்தம் கூறுகின்றது. அதனால் "சக்தி இன்றி சிவம் அசையவும்முடியாது" எனச் சௌந்தர்ய லஹரியில் சங்கராச் சாரியாரும் குறிப்பிடுகிறார்.





சக்தியின் அருட் செயல்களை அடிப்படையாகக் கொண்டு உருவமும் நாமமும் கொடுத்து வழிபடப் பட்டது. சக்தியைப் பற்றிக் கூற வந்த சாக்த புராணங் களில் அவளது வயதுகளையும், தொழிற்பாடுகளையும் வகைப்படுத்திப் பெயர்கள் இடப்பட்டுள்ளன. சிறு பிள்ளைப் பருவத்தை சாந்திகா எனவும், ஏழு வயதுப்பருவத்தை சண்டிகா எனவும், எட்டு வயதுப் பருவத்தை சாம்பவி எனவும், பத்து வயதுப் பருவத்தை கௌரி எனவும் அழைக்கப் பட்டதைக் காணக்கூடியதாக உள்ளது. "எல்லா உயிர்களிலும் சக்தி வடிவமாகத் திகழும் தேவிக்கு வணக்கம்" என மார்க்கண்டேய புராணம் அம்பிகையின் அருட்பிரபாவத்தை எடுத்து விளக்குகிறது.

சக்தியானவள் ஈஸ்வரனின் உடலின் அரைப்பாகத்தில் உமாமஹேஸ்வரியாகவும், விஷ்ணுவின் மார்பில் மஹாலட்சுமியாகவும், பிரம்மாவின் நாவில் வித்யா தேவியாம் சரஸ்வதியாகவும், ஆறுகளில் கங்கா தேவியாகவும், பூமியெங்கும் பூமா தேவியாகவும், அன்னத்தில் அன்னபூரணியாகவும் நிறைந்திருக்கும். சக்தி தன் பேராற்றலினால் ஈரேழு பதினாங்கு லோகங்களையும் இயக்குகின்றாள் சக்தியின் மூர்த்தங்கள் 200ற்கும் அதிகமாகக் காணப் படுகின்றன. இறைவனின் 64 திருவிளையாடல் களின் போதும் சக்தி ஆனவள் இறைவனின் துணைவியாக, நாயகியாக வந்தருள்கின்றாள்.

சோழர்காலத்தில் சக்திக் கோயில்கள் திருமுற்றம் என அழைக்கப்பட்டது. சக்தியை பண்டைய காலத்தோர் பழையோர், முதியோர் என்று அழைத்தார்கள். நம் நாட்டில் கிடைத்த சுடுமண் பெண் தெய்வ உருவங்களும், லிங்க வழிபாடு பற்றிய சான்றுகளும் தாய்த்தெய்வம் சக்தியாகவும் அருவுருவ நிலையில் லிங்க

வழிபாட்டுடன் சேர்த்தும் வழிபட்டதை எடுத்துக் காட்டுகின்றன.

பிரமன் மனைவியை பிராமி எனவும்; விஷ்ணுவின் மனைவியை வைஷ்ணவி எனவும், குமரன் மனைவியை கௌமாரி எனவும், இந்திரன் மனைவியை இந்திராணி எனவும் பரமேஸ்வரரின் மனைவியை பரமேஸ்வரி எனவும் யமனின் மனைவியை சாமுண்டி எனவும் பல்வேறு வடிவங்களில் உருவகப்படுத்தியுள்ளார்கள். சக்தியின் பல்வேறு வடிவங்களை சங்கரர் மூன்றாக வகுத்துள்ளார். உலக இயக்கத்திற்கும் தொழிற்பாட்டிற்கும் நாயகியாக துர்க்கையையும், உலகின் தொழிற்பாட்டின் மூலாதாரமான செல்வத்திற்கும் நாயகியாக இலட்சுமியையும், உலகியல் வாழ்க்கையின் ஈடேற்றத்திற்கு உரியவளாக அறிவு விருத்திக்கு நாயகியாக சரஸ்வதியையும் சங்கரர் குறிப்பிடுகிறார்.

மதுரையிலே மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும் காசியிலே விசாலாட்சியாகவும், கேரளத்திலே பகவதியாகவும் சிருங்கேரியிலே சாரதா ஆகவும், மைசூரிலே சாமுண்டி எனவும் அசாமிலே கர்மாக்யா எனவும் மகாராஸ்டிபுரத்திலே பவானி ஆகவும் அருள் பாலிக்கின்றாள். சக்தியானவள் பேராற்றல் மிக்கவள். எதையும் வெல்லக் கூடியவள் எத்தடைகள் வந்தாலும் தகர்த்தெறிவாள், சர்வ வல்லமை உடையவள். அத்தகைய சக்தியை நாம் வணங்கி வழிபடுவோமேயானால் எமது பிறவிப் பயனைத் தீர்த்து இறைவனை அடையலாம்.

**தனித்து வேதாந்த விடத்தினிற் சென்று**
**மனத்தினைப் பொறிவழி செல்லா தடக்கி**
**நினைபெனு மாசையால் காற்றை விடுத்து**
**வனப்பெரு மான்மாவி லிருப்பது ஞானநிட்டை**

**பொழிப்புரை:**

தனிமையான பற்றற்ற இடத்திலே சென்றிருந்து, பொறி வழிகளிற் செல்லாது மனத்தையடக்கி, நினைப்பெனும் ஆசை வழிச்செல்லும் மூச்சுக்காற்றை அடக்கி அல்லது விடுத்து, இருந்தபடி இருந்து ஆன்ம தரிசனம் பெற்றிருப்பதே ஞானநிட்டையாகும்.

# கோவிற் கும்பாபிஷேகத் தத்துவம்

மு. பத்மரூபன்
உயர்தர மாணவன்
யாழ் மத்திய கல்லூரி

"கோவில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்றனர் ஆன்றோர். ஆயினும் விஞ்ஞானம் விரிந்து விளங்கும் இக்காலத்தில் கடவுள் எங்கும் இருக்கும்போது அவரை ஏன் கோவிலில் சென்று வணங்க வேண்டும்? என்று கேட்போர் பலர். அவர்களிடம் மின்சக்தி எங்கும் இருக்கிறது. அதை எல்லோரும் பெற்றுக் கொள்ளாமல் முறைப்படி அமைக்கப்பட்ட மின் சக்தி நிலையத்தில் மாத்திரம் பெற முடிவதேன் என்று நாம் கேட்கிறோம். ஆகாய வெளியிற் பரந்து கிடக்கும் சங்கீத ஒலியைக்கூட ஒருவர் வானொலிப் பெட்டியின் உதவி இல்லாமற் கேட்க முடிகிறதா? அது போலவே எங்கும் வியாபித்துள்ள கடவுளின் அருட் சக்தியைப் பெறக் கோவில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆலய அமைப்பு ஆத்மாவின் தன்மையையே புலப் படுத்துகின்றது. இன்னொரு வகையிற் கூறினால் மக்கள் சீவத்தன்மையிலிருந்து சிவத் தன்மையைப் பெறுவதற்கு வழிகாட்டுவதே கோவில் வழிபாடாகும் எனலாம். இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதி, பற்றறுத்துப் பவப்பிணி நீக்கி முத்தி அடைய வேண்டுமாயின் கோவில் கும்பாபிஷேக தத்துவத்தை அறிந்து உணர்ந்து வழிபட வேண்டும்.





இறைவனுடைய தெய்வீக சக்தி எங்கும் நிறைந்திருக்கிறது. பூரணப் பொருளாய் அச்சக்தி எங்கும் நிறைந்திருப்பினும் இலகுவில் அதை எல்லோராலும் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. மின்சக்தி ஆகாயமெல்லாம் பரந்து கிடக்கிறது. அதனை இயந்திரங்களால் கிரகித்து மின்பெட்டிகளால் சேகரித்து வைக்கிறோம். பின்பு மின்சக்தி நிலையத்திலிருந்து கம்பிகள்மூலம் வேண்டிய இடத்திற்கு மின்சக்தி அனுப்பப்பட்டு, வெளிச்சம், சூடு, காற்று முதலிய தேவைகளுக்குப் பயன்படுத்துகிறோம். அதேபோலத்தான் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் தெய்வீக சக்தியும் கோவிலிலே சேகரிக்கப்பட்டுப் பக்தர்களுக்குப் பயன்படுகிறது. மின் சக்தியைப் பெறுவதற்கு ஒரு திட்டமுண்டு. அதேபோன்று கோவிலும் சிற்பாசிரியனின் திட்டப்படி அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது. கும்பாபிஷேகத்தின்போது யாகசாலையிற் செய்யும் வேத மந்திரங்களின் மூலம் ஆலயத்திற்குரிய சக்தியைப் பெறுகிறோம். யாகங்கள் கும்பாபிஷேகம் மூலம் மூர்த்தியில் தெய்வீக சக்தி நிரப்பி வைக்கப்படுகிறது. யாகசாலையில் நீர் நிரம்பிய பல கலசங்கள் இருக்கும். அக்கலசத்தில் அந்தணர்களின் வாக்சக்தி நிரம்புகிறது. கலசத்தில் இருக்கும் சலத்திற்கு ஜெபத்தினது ஒலி அலைகளை விரைவில் ஈர்க்கும் தன்மையுண்டு. வெள்ளி தங்கம் தாமிரம் என்பவற்றினாலான கலசங்களுள் இருக்கும் தண்ணீருக்கு இச் சக்தியைப் பெறும் வாய்ப்பு மிகவும் அதிகம். இந்த உண்மையை அறிந்தே ஆசாரியர்கள் யாகசாலையில் தாமிர கலசங்களில் நீர் வைத்து ஜெபம் செய்கின்றனர். அத்துடன் கலசங்களைச்

சுற்றிலும் தானியங்களை முளைக்கச் செய்து பசுமையை மேலும் கலசத்திற்கு ஊட்டி, வேத மந்திரங்களை ஓதுகின்றனர். யாகசாலையில் தேங்கும் ஒலிச்சக்தியைத் தங்கம் அல்லது வெள்ளிக் கம்பி மூலம் கல்லாயிருந்த மூர்த்திக்கு அனுப்புகின்றனர். கும்பாபிஷேகத்தின்போது உருவேற்றப்படுகின்ற தெய்வீக சக்தியினாலே சிற்பியினால் செய்யப்பட்ட வெறும் சொரூபம் வேத மந்திர சக்தியைப் பெற்று, பூரணப் பொருளாக அருள் கொடுக்கும் மூர்த்தியாக அமைகின்றது. தங்கம் அல்லது வெள்ளியிற் செய்த யந்திரத் தகடுகளிலும் இச் சக்தியைப் பாய்ச்சி மூர்த்திகளுக்கு அடியில் வைக்கின்றனர். அருள் நிறைந்த மூர்த்தியிடமிருந்து அடியார்கள் அருளைப் பெறுகின்றனர்.

ஆலயத்திற்கு அன்பர்கள் சென்று அஞ்சலிக்கும்போது வேண்டுவோர் வேண்டுவன ஈயும் பெருமான் அருட்சக்தியை அளித்துக் கொண்டே இருக்கிறார். கும்பாபிஷேகத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட தெய்வீக சக்தி அடியார்கள் எடுக்குந் தோறும் குறையாமல் இருக்க வேண்டுமல்லவா? அதற்காகவே ஆலயங்களில் ஆராதனைகளும், பூசைகளும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகமும் நடைபெறுகின்றன. ஆலயத்தில் நடைபெறும் நித்திய நைமித்தியங்கள் (நித்திய பூசை, விசேட திருவிழா) தெய்வீக சக்தி என்றும் நிறைவுற்றிருப்பதற்காகவே செய்யப்படுகிறது. இறைவனுடைய பஞ்கிருத்தியத்தையும் நித்திய நைமித்தியம் நினைவுறுத்துகிறது.

தெய்வீக சக்தி நிறைந்துள்ள ஆலயத்திற்கு நாம் செல்லும்போது அருட்சக்தியை நாம் கிரகிக்கக் கூடிய வகையில் எமது இதயத்தைத் தூய்மைப்படுத்திக்கொண்டு செல்லுதல் வேண்டும். துருப்பிடித்த இரும்புத்துண்டில் மின்சக்தி பாய்வது குறைவு, அது போலவே அழுக்கு நிறைந்த மனதுடையார்க்கும் அருட்சக்தியைப் பெறுவது கடினம். ஆயினும் அடிக்கடி ஆலயத்திற்குச் செல்வதால் அங்குள்ள அருளொளி படப்பட மனிதன் படிப்படியாக மாசு நீங்கி இறைவனின் கல்யாண குணங்களைத் தானும் பெற்றுக்கொள்கிறான்.

ஆலய அமைப்பை நோக்குவோமானால்: அது ஒரு யோகி. கால்களை நீட்டி மல்லாந்து படுத்திருப்பதை ஒத்திருக்கும். யோகியின் பாதம் போன்று உள்ளது. முன்பாகக் கோபுரம். கர்ப்பக்கிரகம் சிரசு போன்றது. யோகியின் சிரசின் மையம் போன்று மூலஸ்தானத்திலுள்ள தாமரைப்பூக் கண்ணாடியும் விளக்கும் அமைந்துள்ளன. அங்கே உள்ள தீபம் இறைவனுடைய அருவுருவத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

ஆலயம் வெளிப்புறத்தில் அகன்று விசாலமாகி உள்ள செல்லச் செல்ல ஒடுங்கிச் செல்வது லௌகீக விஷயங்களில் பரந்துபட்டுச் செயலாற்றும் மனமானது. இறைவனை அணுக அணுக ஒடுங்கிச் சென்று ஒருமைப்படுவதைப் புலப்படுத்துகின்றது. "கர்ப்பக்கிரகம் கருங்கற் களிலமைந்த சிற்றிடமாக இருப்பது ஏன்?" இதனைச் சிந்தித்தல் வேண்டும். கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியிருக்கும் ஆலய மூர்த்தியில் அருட்சக்தி நிறைத்து வைக்கப்பட்டிருக்கின்றதென அறிந்தோம். அதிக சக்தி வாய்ந்த மின்சாரச் சேமிப்பு எவ்விதம், அபாயம் ஏதும் ஏற்படாமல் நல்ல முறையிற் பத்திரமாகப்

பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றதோ அது போலவே சக்தி வாயந்த் கோவில் மூர்த்தியும் சிறிய அறைக்குள் வைக்கப்பட்டுள்ளது. அச் சக்தியைப் பெறுவோர் தத்தமது நிலைக்கேற்ற இடங்களில் நின்று பெற்றுக்கொள்வர். வேத மந்திரங்களினால் சேகரிக்கப்பட்ட தெய்வீகம் அரும்பெருஞ் சக்தி வாய்ந்தது. அச்சக்தி மூலஸ்தான மூர்த்தியிலிருந்து வீசிக் கொண்டே இருக்கிறது. அருட்சக்தி வேண்டி அஞ்சலிக்கும் அடியார்கள் மனதில் எத்தகைய சிந்தனைகள் இருக்கின்றனவோ அவை மேலும் தூண்டப்பட்டு செயலாற்றும் அடியார்கள் மனது எல்லாம் ஒரு தன்மையாக இருப்பதில்லை. சில சுயநலம் மிக்கதாயிருக்கும். சில சுயநலம் குறைந்திருக் கும். சில சிற்றின்பங்களைப் பெரிதும் நாடும். வேறு சில பேரின்பத்தையே நாடும். சில தான் மட்டும் வாழ வஞ்சிக்கும். சில தான் வாழாவிடினும் பிறர்கெட வேண்டுமே என்று சிந்திக்கும். இவ்விதம் பல்வேறு வகைப்பட்ட உள்ளம் படைத்த மனிதர்கள் ஒரே இடத்தில் நின்று அருட்சக்தியைப் பெற்றால் நல்லெண்ண முடைய நன்மையும், மற்றையோர்க் குத் தீமையும் அதிகமாகும். அதனாலேயே சாத்வீக குண முள்ள பிராமணன் மூர்த்தியின் அண்மையில் நின்று வணங்கலாம் என் றும், இராசதகுணம் படைத்தோர் சற்று விலகி உள் மண்டபத்துள் வணங்க வேண்டும் என்றும், தாமசகுணம் படைத்தோர் வெளி மண்டபத்திற்குத் தூர விலகி நின்று வணங்க வேண்டும் என்று விதிக் கப்பட்டுள்ளது. குணத்தை யொட்டி ஆலய வழிபாடு செய்வோர்க்கு இடம் வகுக்கப்பட்டுள்ளதே அல்லாமல் செய்யுந்தொழில் பற்றி வந்த சாதியை ஒட்டி ஆலயத்தை வழிபடுவோருக்கு இடம் வகுக்கப் படவில்லை. ஆலயத்தை வழிபடச் செல்வோர் தமது நாளாந்த வாழ்க்கையில் சீரிய சிந்தனையும், செயலும் உடையவராக வாழ்ந்து வர முயற்சிக்க வேண்டும்.



கோயில்களில் நந்தியைக் காணலாம். அவை ஆன்மாவினது ஆணவத்தைக் குறிக்கும். சில பெரிய கோவில்களில் மூன்று நந்திகளைக் காணலாம். முதற் காணும் நந்தி பெரிது. இது 'நான்' என்னும் ஆணவம் பெரிதாய் இருப்பதைக் குறிக்கும். அடுத்ததாக உள்ளது அதிலும் சிறிது அது இறைவன் அண்மையிற் செல்லும்போது ஆணவத் தடிப்பு குறைந்து எல்லாம் அவன் செயல் என்பதைக் காட்டுகிறது. அதன் அருகிற் பலிபீடம் இருக்கும். இங்கேதான் ஆத்மாவின் ஆசாபாசம் இச்சைகள் பலியிடப்பட்டு ஆன்மா சுத்த சத்வகுணத்தை அடைகிறது. அடுத்ததாக உள்ள மிகச் சிறிதான நந்தியே சத்துவ குணம் நிறைந்த ஆன்மாவைக் குறிக்கிறது. அஃது இறைவனை நோக்கி இன்புற்றிருக்கும். அதற்கும் அப்பாற் செல்வோமானால் கர்ப்பக் கிரகத்துள் நந்தி இல்லாமல் இருப்பதனைக் காணலாம். ஆணவம் நீங்கப்பெற்ற ஆன்மா தன்னையிழந்து இறைவனோடு ஒன்றாகக் கலந்து ஐக்கியப்படும் நிலை அங்கு புலப்படு கிறது. இறைவனோடு ஐக்கியப்பட்ட நிலை பேரின்ப நிலையாகும். மேலே கூறிய கோவில் உண்மைகளை அறிந்து வணங்கு வதோடு ஆலய வழிபாட்டு முறையிலுள்ள தத்துவங் களையும் அறிந்து கொள்வது மிக நல்லது.

நம்மிற் பலர் கோவிலுக்குச் செல்கின்றனர். ஆயினும் கோவிலுக்கு ஏன் வந்தோம் என்பதை அறியாமலும், அறிந்திருந்தும் அதனை மறந்தும் வெளிப்பார்வையளவில் கோவில் வழிபாடு செய்யும் சமயாசார சீலர்களாய் காணப்படு

கின்றனர். 'ஆ' என்பது ஆன்மா. 'லயம்' என்பது ஒடுங்குதல். எனவே உலக விவகாரங்களிலிருந்தும் விடுபட்டு கடவுட் சிந்தனையில் ஆன்மா ஒடுங்குமிடமே ஆலயம் என்பதை மறந்து, அங்கே தான் உலக விஷயங்களைப் பற்றி ஆராய்கின்ற னர். சுற்றத்தவர்களின் சுகசேமம், நண்பர்களின் நன்மை தீமை, அரசியல் கட்சியின் ஆர்ப்பாட்டங்கள், கயவர்களின் திருட்டு புரட்டு இன்னும் எத்தனையெத்தனையோ விவகாரங்கள் இக்காலம் ஆலயத்தில் நிரம்பியிருக்கின்றன. அந்தோ பரிதாபம்! கற்றவர்கள் கல்லாதவர்கள் அனைவருமே வழிபடும் தத்துவத்தை வெளியிலேவிட்டு உள்ளே சென்று பயன்பெறாது வெறுமனே திரும்புகிறார்கள். ஆலயத்தில் நடைபெறும் கிரியைகள் ஒவ்வொன்றும் எமக்கு ஆத்மீக ஞானத்தை உபதேசிக்கின்றன. அவற்றை அறிந்து உணர்ந்து வழிபடுவோமாயின் பெரும் பயன் பெறுவோம்.

ஆலயத்திற்குச் செல்லும்போது பழம், தேங்காய், கற்பூரம், பூ, பூமாலை என்பவற்றைக் கொண்டு செல்கின்றனர். இவற்றை ஏன் கொண்டு செல்லவேண்டும். இறைவனுக்கு அர்ப்பணிப்பதற்கு செல்கிறோமென்றால் அகில உலகப் பொருள்களையும் ஆக்கிய இறைவனுக்கு அவர் படைத்த ஒரு சிறு பகுதியை அர்ப்பணிப்பது விந்தையாகும். தேங்காயை இறைவனுக்கு அர்ப்பணிப்பதால் அவர் அடைகின்ற பயன் யாதும் ஒன்றுமில்லை. தேங்காயின் தன்மையைப் போலுள்ள ஆண்மாவை அர்ப்பணிக்க வேண்டும். ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ள தும்புகள் நிறைந்த தேங்காய் மட்டை ஆண்மாவிலுள்ள ஆசாபாசங்களைத் தாமச குணத்தைக் குறிக்கிறது. அவற்றை (தேங்காய் மட்டையை ஒருவன் தானே உரித்து விடுவதுபோல) தனது முயற்சியினால் நீக்கி விட வேண்டும். தேங்காயின் தடித்த ஓடு நீக்குவதற்கு மிகக் கடினமான ஆணவத்தைக் குறிக்கும். தம்மைக் குருவிடம் ஒப்படைத்தால் அந்த ஆணவத்தடிப்பு குருவினால் நீக்கப்படும். இதனையே குருவிடம் கொடுக்கப்படும் தேங்காய் குறிக்கிறது. உடைக்கப்பட்ட தேங்காயின் உள்ளிருக்கும் வெண் பருப்பு சாத்வீக குணத்தைக் குறிக்கிறது. ஆணவம் நீங்கிய தூய்மையின் சாத்வீக உள்ளம் தெய்வ சந்நிதானத்தையே நோக்கும் என்பதைக் காட்டவே உடைக்கப்பட்ட தேங்காய்ப் பாதிகள் இறைவன் பாதத்தைப் பார்க்க நிவேதிக்கப் படுகின்றன. இந்த உண்மையை உணர்ந்தோமானால் ஆயிரக் கணக்கில் ஆண்டவனுக்குத் தேங்காய்களை உடைத்தும் யாதொரு பயனுமில்லையே என்று திண்டாடுவதை விட்டு விடுவோம். நான் ஆயிரம் தேங்காய்கள் உடைத்தேன் என்று பெருமை அடித்துக் கொள்ளும் பக்தர்களும் உண்டு. ஆணவத்தை நீக்கத் தேங்காய் உடைக்கும் தத்துவத்தை மறந்து தேங்காய்க்குள்ளேயே ஆணவம் புகுந்து கொள்கிறது. வழிபாட்டின் தத்துவத்தை மறந்து விடுவதாலேயே பலர் கோயிலுக்குச் சென்றும் பயனடையாத வெறும் கையினராய்த் திரும்புகின்றனர். எம்மிடமுள்ள பாசங்கள் பற்றிப் பிடித்த மனத் தேங்காயை உரித்து உடைத்து நிவேதித்துக் குருவருளையும் திருவருளையும் பெற்று வாழ்வதே ஆலய வழிபாட்டின் பயனாகும்.

இனிமையுள்ள கனிகள் மனிதன் செய்யும் நல்வினைகளைக் குறிக்கிறது. நல்வினையும் பிறவிக்குக் காரணமானதே. எனவே பிறவியை அறுத்துப்

பேரின்பந்தரும் முக்தியை விரும்பு வோர் நல்வினையையும் நீக்கிவிட வேண்டும். 'நல்வினையும் பிறவியைத் தருமெனில், வினை செய்யாதிருப்பது எப்படி?' என்ற கேள்வி எழலாம். மனிதன் வினை செய்ய வேண்டும் என்பது உண்மையே. நல்லவை நினைந்து நல்லவை செய்து அதனாலாகும் பயனாகிய பணியை இறைவனிடம் ஒப்படைத்து விடுவோமா னால், வினை செய்தும் செய்யாதவர்களாகி விடு தலை அடைவோம். இந்த உண்மையையே கிருஷ் ணபகவான் பகவத்கீதையில் பற்றற்று பணிசெய். பயனை எதிர்பாராதே என்று கூறியுள்ளார்.

இறைவன் சந்நிதானத்தில் எரிக்கப்படும் கற்பூரம் எதனைக் குறிக்கின்றது? அதன் வெண்மை நிறம் மலபரிபாகப்பட்டு இறைவ னோடு ஐக்கியப்படுதற்குப் பக்குவ நிலைய டைதற்கு தூய ஆன்மாவைக் காட்டுகிறது. கற்பூரத்தில் அக்கினி பட்டதும் ஜோதியாக எரிந்து ஈற்றில் கற்பூரம் கரைந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகிறது. அது போலவே பரிசுத்த மனம் படைத்த ஆன்மாவின் தெய்வீக ஒளிபட்டதும் அது ஜோதி சொரூபமாக மாறித் தன் உருவம் மறைய (ஆத்ம சொரூபம்) தெய் வீகத்தோடு கலந்து விடுகிறது. அத்துடன் பக்தர்கள் பலரும் நெருங்கி வழிபடுகின்ற இடத்தில் உண்டாகின்ற அசுத்தக் காற்றையும் ஓரளவு அகற்றி நறுமணம் வீசிச் சுகத்தைக் கொடுக்கும் பொருளாகவும் உள்ளது. இத் தகைய சிறந்த கற்பூரம் இறைவனால் இயற்கையிலேயே படைக்கப்பட்டுள்ளது. இயற்கையில் விளைந்த கற்பூரத்தை இன்று ஆலயத்தில் காண்பது அரிதாகிறது. எண்ணெயும், கொழுப்பும் இன்னும் வேறு இரசாயனப் பொருளும் சேர்த்து உண்டாக்கிய செயற்கைக் கற்பூரமே எங்கும் எரிகிறது. அதன் புகை ஆலயத்தைக் கரியாக்கு வதோடு வணங்கி நிற்கும் அன்பர்களுக்கும் சுவாச நோயை உண்டாக் குகிறது. இத்தகைய கற்பூரத்தைக் கட்டுக் கட்டாக கொழுத்துவதிலும் பார்க்க கொழுத்தா மலே விடுவதும்நலம் தரும். கற்பூரம் தீபம் காட்டி கட்டாயம் கடவுளை வழிபட வேண்டும் என்றால் நல்ல கற்பூரத்தைத் தேடி வாங்கி எரிப்பது சாலச் சிறந்தது.





எனவே அருட்சக்தியை அள்ளிச் சொரிந்து எம்மை ஆட்கொள்ளும் இறைவன் எழுந்தருளி இருக்கும் ஆலயத்தைப் போற்றுவோம். "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்றனர் ஆன்றோர். தூய உள்ளத்துடன் சென்று தெய்வீக சக்தியைப் பெற்று நாமும் தெய்வீகத் தூய்மை அடைவோம். பக்தர்கள் தெய்வீக சக்தியைப் பெற்று பயனடைய ஆலய நிர்வாகிகளும் அருட்சக்தி நிறைந்திலங்க ஆலயத்தைப் பாதுகாப்பார்களாக.

# சமய சாதனை

மு. பவளதர்சினி
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில்
அறநெறிப் பாடசாலை ஆசிரியை

சமயம் என்பதற்கு எத்தனையோ வரைவிலக் கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. "மனிதன் தனது வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங் களில் இருந்து விடுதலையடைவதற்குச் சாதக மாய் உள்ள வாழ்க்கை வழி சமயம்". என்றும் "மனிதன் தன் கீழான சிந்தனைகளில் இருந்து விடுபட்டு நற்சிந்தனைகளில் வாழ்ந்து, வாழ எடுத்துக்கொள்ளும் பிரயத்தனமே சமயம்" என்றும்" மனதைப் புலன்வழிச் செல்லவிடாது பஞ்சேந்திரியங்களைக் கட்டுப்படுத்தி, பக்தி யோடு இணைந்து, நித்திய அநித்திய வஸ்து வைப் பிரித்தறியும் விவேகத்தை விருத்தி பண்ணிக் கொள்வது சமயம்" என்றும், "பிரபஞ்ச நியதிக்கிரியை வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழி வகுப்பது சமயம்" என்றும் "மனிதனுக்குள்ளே இருக்கும் தெய்வீகத்தைத் துலங்கச் செய்வது சமயம்" என்றின்னோரன்ன பலவாறாக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. மனிதன் மனிதனாகவாழ வேண்டுமானால் சமயம் அவசியம். "சமயத்தை சமுதாயத்தில் இருந்து எடுத்துவிட்டால் மிஞ்சுவது காட்டு மிராண்டிகளின் கூட்டமே" என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

உலகத்திலுள்ள புல், பூண்டு, மரம், செடி, மிருகம், பறவை மற்றுமுள்ள உயிரினங்கள் அத்தனைக்கும் பரிணாம வளர்ச்சி விதி முறையே வகுக்கப்பட்டு வரையறுக்கப்பட்டுள் ளது. இயற்கையை மீளவோ அன்றிப் புதிய விதிமுறையை வகுத்துக் கொள்ளவோ இவைகளுக்கியலாது. இவைகளுக்கு வேண்டிய வற்றை இயற்கை தானாகவே அளிக்கிறது. ஆனால் மனிதனுக்கு வேண்டியவற்றை மனிதன் இயற்கையிடம் இருந்து, அதன் துணை கொண்டு தனது சொந்த முயற்சியால் தேடிக் கொள்ள வேண்டும். மனிதனின் பரிணாம வளர்ச்சி அவனது சொந்த முயற்சியிலேயே தங்கியிருக்கின்றது. அவனது வளர்ச்சிக்கு வேண்டிய சக்தியும் அதை அறியும் அறிவும் அவனுக்குள்ளேயே இருக்கின்றது. அதை அறியும் ஆர்வம் அவனுக்கேற்பட அதை அடையும் மார்க்கத்தையும் கண்டு அடைந்து விடுகிறான். ஆகவே மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு ஞானசக்தி இச்சாசக்தி கிரியா சக்தி என்ற மூன்று சக்திகளும் தொழிற்பட வேண்டும். மனிதன் தனது முயற்சியால் இவற்றை இயக்கியாக வேண்டும். ஆகவே சமயம் என்பது மனிதனின் தன்னினைவுள்ள பரிணாம வளர்ச்சி (Religion is the conscious evolution of man) என்றும் கூறப்படுகின்றது. மனிதனின் பரிணாம வளர்ச்சி வெறும் உடலைப் பொறுத்ததன்று. ஏனெனில் மனிதன் வெறும் ஸ்தூல உடல் அன்று. அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான மயகோசம், ஆனந்தமய கோசம் என்ற ஐந்து அம்சங்களைக் கொண்டவன் மனிதன். இந்த ஐந்தும் ஒன்றோ டொன்று ஊடுருவி இணைந்து நிற்கின்றன. இவ் ஐந்து உடல்களும் ஒருங்கே கவனிக்கப்படல்

வேண்டும். ஸ்தூல உடல் மாத்திரம் கவனித்துப் பேணப்படுமானால் மனிதனின் வளர்ச்சி தடைப்பட்டுத் தளர்ச்சி ஏற்படும். நோயும் பிணியும் சஞ்சலமும் மனிதனைப் பீடித்துக் கொள்ளும். மனிதனின் பரிணாமவளர்ச்சியின் முதற்படியே அன்னமய கோசம். இதனின்று விடுபட்டுப் பிராணமய கோசத்தில் தங்கி அதற்கப்பால் மனோமய கோசத்தையும் விஞ்ஞானமய கோசத்தையும் தாண்டி, ஆனந்தமய கோசத்தை அடையே வேண்டும். இத்தனை உயரத்திற்கு எழும்ப வேண்டும் என்றால் அத்தனை தீவிரமாகச் சாதனையில் ஈடுபடவேண்டும். எந்த மனிதனும் சுதந்திரமாகவும், ஆனந்தமாகவும் வாழவே விரும்புகிறான். அதனைப் பெறுவதற்குச் சாதனை அவசியம். ஏன் எனில், சாதனை யின்றிச் சாவின்றி, வாழ்வில்லை, சாந்தியின்றி வாழ் வில்லை.

விஞ்ஞானிகள் தமது நீண்டகால ஆராய்ச்சி களின் முடிவுகளை உலகம் பயன் பெறும்படி வெளியிடு வதுபோல, மெய்ஞ்ஞானிகள் தமது அனுபவ முடிவுகளை யெல்லாம் சமய சாஸ்திரங் களாக வடித்துத்தந்துள் ளனர். அவை போதனை யாக மட்டும் இருப்பதாற் பயனில்லை. அவற்றை வாழ்க்கை அனுபவமாக மாற்றி அமைத்தலே சாதனையாகும். சாதனை யாக்கப்படாத சமய சாஸ்தி ரங்களால் ஒருவித பயனு மில்லை. தத்துவ ஞானிகள் தத்துவ தர்ஷணிகளாக மாட்டார்கள். சகல சாஸ்தி ரங்களையும் கற்றறிந்த ஒரு தத்துவ ஞானியின் அறிவு, அவனுக்குவரும் சஞ்சலம், வருத்தம், சோதனை, நேரத்தில் பயன்படாது போவதைக் காணக் கூடியதாய் இருக்கின்றது. அறிவை அனுபவம் ஆக்கவே சாதனையாகும்.





சாதனை எக்காலத்தும் இன்றியமையாதது. ஆனால், சாதனா முறை மக்களின் ஆற்றலுக் கும், சமுதாயச் சூழ்நிலைக்கும் ஏற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டியது. உதாரணமாக கிருத யுகத்திலே ஞானம் மேலோங்கி நின்றது. ஆகவே தியானம் முக்கிய சாதனாமுறையாக அமைந்தி ருந்தது. அக்கால மக்கள் வெட்டவெளியில் இருந்து தியானத்தில் ஆழ்ந்து போகக்கூடிய சக்தியுடையவர்களாக இருந்தார் கள். ஆனால் இக்காலத்தவருக்கு இது எளிதன்று. அக்கால மக்கள் உடல் வலியும் மனவலியும் பெற்றிருந்த னர். உச்சி வெயிலில் சுற்றிவர நெருப்புச் சுவாலையின் நடுவே நின்று தவம் செய்தனர். ஆனால் இக்காலத்தவரின் உடல்நிலை மனநிலை இப்படித்தவம் செய்வ தற்கு இடம் கொடுப்பதில்லை.

நமது சாஸ்திரங்களில் பலவழிகள் கூறப் பட்டுள்ளன. ஒவ்வொருவரும் தத்தமது மனோ நிலைக்கும், சுபாவத்துக்கும் தக்கபடி அவற்றில் ஏதாவது ஒரு வழியைத் தேர்ந்தெடுத்து உறுதியாகப் பின்பற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. சிலரிடம் உணர்ச்சி மேலோங்கி நிற்பதையும், சிலரிடம் புத்தி மேலோங்கி நிற்பதையும், சிலரிடம் செயல்முறை மேலோங்கி நிற்பதையும் காணலாம். உணர்ச்சி மேலோங்கி நிற்பவர்கள் பக்தி மார்க்கத்தையும், புத்தி மேலோங்கி நிற்பவர்கள் ஞான மார்க்கத்தையும், செயல்முறை மேலோங்கி நிற்போர் கிரியா மார்க்கத்தையும், (கர்ம யோகம்) கைக்கொள்ள லாம். எந்த மார்க்கத்தைக் கைக்கொள்பவருக் கும் சற்குருவின் சகாயம் இன்றியமையாதது. விளக்கும், திரியும், எண்ணெய்யும் இருந்தாலும், அதை ஏற்றி வைப்பதற்கு ஒரு ஆள் தேவை. அதுபோல சாதகனின் தரமறிந்து தகுதியறிந்து,

அவனை வழிநடத்த குரு அவசியமாகின்றான் என்பது இந்துக்களின் பாரம்பரியம் ஆகும். சாஸ்திரங்களில் நம்பிக்கையின்றி அவற்றைச் சோதிப்பதும், குருஸ்தானத்தில் இருப்பவர்களைக் குறை கூறுவதும் இன்றைய இந்து சமுதாயத்தின் சாபக்கேடாக இருக்கின்றது. இந்துமத உண்மைகளை உள்ளபடி அறியாமையே இதற்குக் காரணமாம். தக்க ஆச்சாரியாரிடம் சமயசாஸ்திரங்களை, அவற்றின் தாற்பரியங்களையறிந்து, முறைப்படி ஐயந்திரிபறக்கற்று அதன்படி நிற்க முற்படுவதே இப்பாபச் செயலுக்குத் தகுந்த பரிகாரமாகும்.

குருஸ்தானத்தில் இருப்பவர்களைக் குறை கூறுவதற்குப் பதிலாக அவர்களை இறைவனெனப் பாவனை செய்தல் இருசாரருக்கும் தவமாயிருக்கும். சிவவேடம் பூண்டுவந்து தன்னைக் குத்திய முத்திநாதனைக்கூட இறைவனாகப் பாவித்துத் தான் இறக்கும் பொழுது தனக்குச் சிவனை நினைவுபடுத்தியமைக்கு நன்றி தெரிவித்த மெய்ப்பொருள் நாயனாரின் சரித்திரம் வெறும் புராணப் புழுகன்று. நமது சமயத்தின் உயிர்த்தத்துவமாக அமைந்திருக்கின்றது. கோயிற் குருமாரை இகழ்தலிலும் பார்க்க அவர்களை ஆதரித்தல் மேலானது. அவர்கள் அருளுரையோதலில் தவறினார்களென்றால் அதற்குச் சமுதாயமே பொறுப்பாக இருந்திருக்கின்றது. முற்காலத்தில் அரசர்கள் அவர்களை ஆதரித்தனர். ஆனால் இக்காலத்தில் சமுதாயம் அவர்களை ஆதரிக்கத் தவறிவிட்டது. ஆகையினால் அவர்களின் நிலைதாழ்ந்து விட்டிருக்கின்றது. கொண்ட எனும் பண்பு குன்றியதே. இதற்கு முக்கியகாரணமாகும். சாதித்துவேஷம் இன்று இந்து மக்களைப் பேயாட்டம் ஆட்டிக் கொண்டு இருக்கிறது. அவனவன் தொழிலுக்கும், சுபாவத்திற்கு ஏற்பவே முற்காலத்தில் வர்ணப் பிரிவு ஏற்பட்டது. காலப்போக்கில் சமுதாய வளர்ச்சியில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இன்று சாதிக் கட்டுக் கோப்பு நீங்கிச் சாதிப் பிரிவினை சாதித்துவேஷமாக உருப்பெற்று சமுதாயத்தை உருக்குலைத்துக் கொண்டிருக்கிறது. பிறப்பினால் மட்டும் ஒருவனை இழிகுலத்தவன் என்று கூறிவிட முடியாது. நல்ல சிந்தனை, உயர்ந்த நோக்கம், பெரியோர் சேர்க்கை, அறிவு அன்பு, முதலியவற்றாலேயே ஒருவன் தன்னைத்தான் உயர்த்த முடியும். இந்த நீதியிலே பாகுபாடு செய்ய முற்பட்டால் முற்பிறப்பில் பிராமணன் கூடத் தாழ்ந்தவனாக வும், இழிகுலத்தவன் உயர்ந்தவனாகவும் கணிக்கப்பட இடம் உண்டு. ஆகவே தீய எண்ணம் உடையவர்களே தீண்டப்படாதவர்கள். பிறப்பால் மட்டும் தாழ்ந்த குலமென்று கொள்ளப்படுவோரை ஆலயத்துட் பிரவேசிக்கக்கூடாதென்ற கொள்கை அர்த்தமற்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக "முற்போக்கு வாதம்" என்ற மூடக் கொள்கையால் வாலிப உலகம் தறிகெட்டுத் தவிக்கிறது. சமயக் கோட்பாடுகளை உள்ளபடி அறியாமல், அறிய முற்பட்டால் அதன் தாற்பரியத்தை விளங்கிக் கொள்ளாமல் நமது ரிஷிகள், மெய்ஞ்ஞானிகள் கூறிப் போந்தவற்றை அவமதிப்பது அறியாமையிலும் அறியாமையாகும். விஞ்ஞானம் எத்தனையோ வசதிகளைச் செய்து கொடுத்தும் மனிதன் பயத்தினாலும் நோயினாலும் பீடிக்கப்பட்டு மனிதன் அவதியுறுகிறான். சாதி என்பது மனநோய். வியாதி என்பது உடல்நோய். வியாதிக்கு விஞ்ஞானம் சிகிச்சையளிக்கலாம். ஆனால் சாதிக்கு அதனிடம் மருந்தில்லையே!

மிருகம், பறவை மற்றுமுள்ள உயிரினங்களிலும் பார்க்க அதிகமாக வியாகூலமடைவது மனிதன் மாத்திரமே. ஏனெனில் மனிதனைத் தவிர மற்றைய உயிரினங்கள் இயற்கைக்குக் கட்டுப்பட்டு வாழ்கிறது. மனிதன் இயற்கைவழி வாழாமல், மனம் போனபடியெல்லாம் போய், வாழ்வின் நோக்கம் நிறைவேற முன்பே தான் அழிந்துவிடுகிறான். இந்த நிலை மாற வேண்டும் எனில் தீவிரமான சமயசாதனை செய்ய வேண்டும்.

நாத சக்தியால் எத்தனையோ அரிய செயல்களை எல்லாம் விஞ்ஞானிகள் செய்து காட்டுகின்றனர். நமது மகரிஷிகள் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் மந்திரம் எல்லாம் நாத சக்தியை அடிப்படையாகக் கொண்டவை. நாத சக்தியும், பக்தியும், மந்திரத்துக்குரிய மகரிஷியின் சுருளும் சேர்ந்து மந்திரம் பலனளிக்கின்றது. அனுபவ ஞானிகள் இறைவனையழைத்த நாமத்துக்கும், மந்திரத்துக்கும் அளப்பரும் சக்தியுண்டென்பது மறுக்கமுடியாத உண்மை. தக்க குருவைத் தேடி அவரின் இஷ்ட மூர்த்தத்தின் மந்திரத்தைக் குருவாயால் முறைப்படி கேட்டு விதிமுறை வழுவாமல் அவற்றைத் தீவிரபக்தியுடனும் முழுமனதுடனும் ஜெபித்து வந்தால் மனம் உறுதியடையும். எண்ணிய எண்ணியங்கெய்தும் திண்மையு முடையவராவர் என்பது திண்ணம்.





ஆயுத பலத்தால் சாதிக்க முடியாதவற்றை ஆத்மீக சக்தியால் சாதிக்கலாம் என்பது அண்ணல் காந்தி நமக்குக் காட்டிய உண்மை வழியாகும். சர்வ சாதாரண குழந்தையாகப் பிறந்து சாதாரண மனிதனாக வாழ்ந்த மோகனதாஸ் காந்தி, மகாத்மாவானதும் செயற்கரிய செய்ததும் சமய சாதனையினால் என்றால் மற்றவர்களுக்கு அதெப்படி முடியாத காரியமாகும். அரசியல் வேறு சமயம் வேறு என்ற பேச்சுக்கே இடம் இன்றி, அரசியலிற் சமயத்தைப் புகுத்தி வெற்றி கண்டவர். மகாத்மா இன்று இலங்கை வாழ் இந்துக்களை நோக்கியுள்ள அரசியற் பிரச்சனைகூடச் சமய சாதனையின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்பதை மகாத்மாவின் "சத்தியசோதனை" நமக்கு அறிவுறுத்துகின்றது. இன்றைய சூழ்நிலையில் மக்கள் மனம், வேண்டாத எண்ணங்களாலும் எரிச்சல், பொறாமை, கோபம், தாபம் போன்ற வற்றாலும் மெலிவுற்று நலிந்து கிடக்கின்றது. இப்படி நலிவுற்ற மனத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனில் ஆழ்ந்த நம்பிக்கையுடன் தீவிர சாதனை செய்தல் வேண்டும். சாதனையின் முதற் படியாக அழிவுப் பாதையில் நம்மை இட்டுச் செல்லும் எண்ணங்களை அப்புறப்படுத்த வேண்டும். இதற்கு இறைவனின் திருநாமத்தை மிகுந்த பக்தி சிரத்தையுடன் அல்லும், பகலும் நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் ஜெபிக்க வேண்டும்.

அடுத்ததாக சமய சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டவற்றை விதிமுறை வழுவாது கடைப்பிடிக்க வேண்டும். விலக்கப்பட்டவற்றை உடனே விலக்கிவிட வேண்டும். கொடை, சேவை, அன்பு, முதலியவற்றை ஆத்ம பாவனையுடன் செய்தல் அவசியம். உள்ளும் புறமும் தூய்மையுற்றிருத்தல் அவசியத்திலும் அவசியம். ஜெபத்தால் மன ஒருமைப்பாடு கிட்டும். சேவை, அன்பு முதலியவற்றால் உடலும், உள்ளமும், மனமும் தூய்மையடையும் மன ஒருமைப்பாடு கிட்டில் ஆழ்ந்த தியானமும் அனுபூதியும் கைவரப் பெறுதல் திண்ணம்.

ஆகவே, இன்றே இப்பொழுதே இங்கேயே மக்கள் துன்பத்தினின்றும் விடுபட்டு நீடித்த இன்பம் அனுபவிக்க வேண்டில், தீவிர சமய சாதனை அவசியமாகின்றது.

# மாதாந்த பூஜை விபரம்

பிறந்த தினத்தைக் குறிக்கும் மாதம் தினமும் காலைச்சந்தி – அர்ச்சனை அந்த மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் அபிஷேகம் பிரசாதம் வழங்கப்படும்.

அந்த மாதத்தில்வரும் புனர்பூச நட்சத்திரத்தில் திருவாசக முற்றோதல் பங்குபற்றும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

## மாத உபயம் ரூபா 15000/=

## இதுவரை மாதாந்த உபயத்திற்குப் பதிவுசெய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| தைமாதம் | செல்வன் விகாஷ் விஜயகுமார் | லண்டன் |
| மாசிமாதம் | செல்வி சகானா சந்திரகுமார் | லண்டன் |
| பங்குனிமாதம் | செல்வி பிரியங்கா குகதாஸ் | லண்டன் |
| சித்திரைமாதம் | செல்வன் சிவேஸ் சிவஞானந்தன் | சுவிஸ் |
| வைகாசிமாதம் | செல்வன் விதுஷன் ரமேஸ் | கனடா |
| ஆனிமாதம் | செல்வன் றோகான் குகதாஸ் | லண்டன் |
| ஆடிமாதம் | திரு.திருமதி சி.வசந்தன் | சுவிஸ் |
| ஆவணிமாதம் | M.S.இராசையா | கைதடி கிழக்கு |
| புரட்டாதி | செல்வன்ஸ்ரீ சஸ்டிகாந்தா குழந்தைவடிவேலு | லண்டன் |
| ஐப்பசிமாதம் | திரு.திருமதி வே.விஜயரூபன் | லண்டன் |
| கார்த்திகைமாதம் | செல்வன் பகீரதன் சிவபாதசுந்தரம் | கனடா |
| மார்கழி | கு.கங்கைவேணியன் | வேணி களஞ்சியம் யாழ்ப்பாணம் |

உள்வீதி கொட்டகை அமைத்தல், நவக்கிரக சுவாமிகள் அமைத்தல்போன்ற திருப்பணிகள் நிறைவேற உண்டு. அடியார்களின் அன்பளிப்பை எதிர்பார்க்கின்றோம்.

அடியார்கள் அனைவரும் காசி விசுவநாதப் பெருமானின் நர்மதாஆற்றில் திருவுள்ளம் கொண்ட மாதாஜி லிங்கேஸ்வரப் பெருமானைத் தரிசிப்பதன் மூலம் காசி சென்ற பலனை அடைவீர்கள்.

**பிள்ளையார்**

திருவாளர் கந்தையா தம்பிப்பிள்ளை கைதடி கிழக்கு, கைதடி அவர்களின் ஞாபகார்த்தமாக அவருடைய குலதெய்வமாகிய வீரகத்தி விநாயகப் பெருமானை அவர்களுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எழுந்தருளச் செய்துள்ளார்கள்.

**முருகன்**

திருவாளர் சுப்பர் இராமலிங்கம், திருமதி செல்லம்மா இராமலிங்கம் கைதடி தெற்கு, கைதடி அவர்களுடைய ஞாபகார்த்தமாக அவர்களுடைய குலதெய்வமாகிய இணுங்கித்தோட்ட முருகப்பெருமானை அவர்களுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், எழுந்தருளச் செய்துள்ளார்கள்.

**சிவன், அம்மன் எழுந்தருளி**

திருவாளர் இளையதம்பி கைதடி வடக்கு, கைதடி. அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வர் இ.குகதாஸ், மருமகள் கு.சச்சிதானந்தமலர், பிள்ளைகள் சேர்ந்து எழுந்தருளி மூர்த்தியான சிவன், அம்மன் எழுந்தருளச் செய்துள்ளார்கள்.

**வைரவர்**

கைதடி தென்கிழக்கைச் சேர்ந்த திரு.க.குகதாஸ், அன்னபூரணி குகதாஸ், மக்கள் விமல்ராஜ், தவராஜ், மருமகள் சேர்ந்து உபயமாக வைரப்பெருமானை எழுந்தருளச் செய்துள்ளார்கள்.

**மாதாஜி லிங்கேஸ்வரர்**

சிறுதுளி பெருவெள்ளம்போல் பல அன்பர்களின் அன்பளிப்பு மூலமும், குறிப்பாக சிவத்திரு.கு.கங்கைவேணியன், திருவாளர் அ. சிற்றம்பலம், திருவாளர் இ.குகதாஸ், திரு.கு.சஷ்டிகாந்தா, திரு.வே.விஜயரூபன் தம்பதியர் போன்றோர் பெருநிதியுடன் மூலமூர்த்தியாகிய மாதாஜி லிங்கேஸ்வரப் பெருமான் எழுந்தருளியுள்ளார்.

**மஹா மண்டபம்**

திருமதி சோ.தங்கம்மா, கைதடி வடக்கு, கைதடி அவர்களின் ஞாபகார்த்தமாக மஹா மண்டபம் அமைந்துள்ளது.

**தரிசன மண்டபம்**

திருமதி கா.மனோராம்பிகைஅம்மா கைதடி வடக்கு, கைதடி அவர்களின் ஞாபகார்த்தமாகத் தரிசன மண்டபம் அமைந்துள்ளது.

**மணிக்கோபுரம்**

திருவாளர் இரத்தினம், திருமதி அன்னம்மா இரத்தினம் கைதடி தெற்கு, கைதடி அவர்களுடைய ஞாபகார்த்தமாக அவர்களுடைய பிள்ளைகள் மணிக்கோபுரத்தை அமைத்துத் தந்துள்ளார்கள்.

**காண்டாமணி**

திருவாளர் சங்கரப்பிள்ளை வரதராசா கைதடி கிழக்கு, கைதடி அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது மனைவி புனிதவதி வரதராசா, மக்கள் விஜிதன், கஜிதன், கலெக்ஷனா ஆகியோர் கோபுரத்தில் அமைந்துள்ள காண்டாமணியை அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

**ஒலிபெருக்கி**

திரு.சதீஸ் குழந்தைவேலு மீசாலையைச் சேர்ந்தவர் தற்போது பிரான்ஸில் இருப்பவர் புதிதாக ஒரு ஒலிபெருக்கியை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார்.

**உள் வீதித் தூண்கள் அமைத்து மதில் அமைத்தல்**

திரு.திருமதி அம்பலவாணர் தம்பதியரி ஞாபகார்த்தமாக திரு.அ.சிற்றம்பலம், பிள்ளைகள் (சுவிஸ்) விரைவாக ஆரம்பிக்கவுள்ளார்கள்.

# மண்டலாபிஷேக உபயகாரர்

1. திரு. இ. சிவஞானந்தன் (சுவிஸ்)
2. திரு. வே. உதயகுமார் (கொழும்பு)
3. திருமதி பு. வரதராசா (கைதடி)
4. திரு. ச.கந்தசாமி (கைதடி)
5. திரு. பொ. பொன்னம்பலம் (கைதடி)
6. திரு. ச.கனகர் (கைதடி)
7. திரு. செல்வநாயகம் (கொழும்பு)
8. திரு. இ. சின்னத்துரை (கைதடி)
9. திரு. சி. சுப்பிரமணியம் (கைதடி)
10. திரு. ச.இராசையா (கைதடி)
11. திரு. க.இராசேஸ்வரன் (கைதடி)
12. திருமதி சசிகலா ரமேஸ் (கனடா)
13. திருமதி நா. சறோசா (கைதடி)
14. திரு.வீ.சிங்கராசா (கைதடி)
15. திரு. மு.சே.இராசையா (கைதடி)
16. திரு. க.டவுனேஸ்வரன் (கைதடி)
17. திரு. கு. செல்லர் (கைதடி)
18. திருமதி கௌசியா விஜயரூபன் (லண்டன்)
19. திரு. துரைசிங்கம் (துரை) (கைதடி)
20. திரு. க.சசிகுமார் (கைதடி)
21. திரு. வே.பொன்னுத்துரை (கைதடி)
22. திரு. சு. கோபாலன் (செட்டி) (கைதடி)
23. திருமதி சாந்தினி குழந்தைவடிவேல் (மீசாலை)
24. திரு. அ. சிற்றம்பலம் (கொழும்பு)
25. திருமதி உஷாமினி ஆரூரன் (கனடா)
26. திரு.S. நாகராசா (நாவற்குழி)
27. திரு. ஆ. இராசதுரை (கைதடி)
28. திரு. பா. சபேஸ்ரூபன் (மானிப்பாய்)
29. திரு. செ. சந்திரசேகரம் (கைதடி)
30. திரு. S. ஆறுமுகராசா (கைதடி)
31. திரு. த. ஆறுமுகம் (கைதடி)
32. திரு. சு. செல்வராசா திருமதி வீரசிங்கம் (கைதடி)
33. திரு. சிவபாதம் (கைதடி)
34. திரு. கு. கங்கைவேணியன் (வேணிகளஞ்சியம் யாழ்)
35. திருமதி சிவமலர் சந்திரன் (கைதடி)
36. திரு. கா. சுயந்தன் (கைதடி)
37. திரு. வே. விசுவநாதர் (கைதடி)
38. திரு. க. குருபரன் (கைதடி)
39. திரு. சி. கருணானந்தன் (கைதடி)
40. திரு. சி. கனகரட்ணம் (கைதடி)
41. திரு. உருத்திரசுந்தரம் (கைதடி)
42. திரு. கு. விமல்ராஜ் (கைதடி)
43. செல்வி கி. அபினஜா (கைதடி)
44. திரு. கு. சஷ்டிகாந்தா (லண்டன்)
45. திரு. சி. பகீரதன் (கனடா)
46. திரு. செ. தனபாலசிங்கம் (கைதடி)
47. திரு. க. மயூரன் (கைதடி)
48. 1008 கலச சங்காபிஷேகம் :–

திரு. இ. குகதாஸ் (லண்டன்)

108 கலச சங்காபிஷேகம் பிள்ளையார் உபயம் :–

திரு. த. புஸ்பராசா (இந்தியா)

108 கலச சங்காபிஷேகம் முருகன் உபயம் :–

திரு.K. தேவராஜா (ஜேர்மனி)

108 கலசசங்காபிஷேகம் சிவன் பார்வதி உபயம்:–

வைத்திய கலாநிதி K.T.S சபாநாதன்

108 கலச சங்காபிஷேகம் வைரவர் உபயம் :–

திரு.க. குகதாசன்



## மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்

## திருப்பணி மொத்த வரவு செலவு 10.06.2008

| | | |
|---|---|---|
| ஆசிரம கையிருப்பு | 485000.00 | |
| இலங்கை வங்கி மூலம் | 39595.00 | |
| தேசிய சேமிப்பு வங்கி மூலம் | 75000.00 | |
| இந்து கலாச்சார அமைச்சு மூலம் | 100000.00 | |
| திரு.கு. கங்கைவேணியன் யாழ்ப்பாணம் | 100000.00 | |
| திரு.அ. சிற்றம்பலம் (கொழும்பு) | 100000.00 | |
| திரு.இ. குகதாஸ் (லண்டன்) | 340000.00 | |
| மணிக்கோபுர அன்பளிப்பு | 206800.00 | |
| திருமதி மனோராம்பிகை அம்மா ஞாபகார்த்த வரவு | 200000.00 | |
| 1201–1286 வரை சிறு வரவுகள் | 462563.00 | |
| 1301–1319 வரை சிறு வரவுகள் | 241100.00 | |
| திரு.கு. சஷ்டிகாந்தா (லண்டன்) | 500000.00 | |
| திரு.வே. விஜயரூபன் (லண்டன்) | 500000.00 | |
| தலைவர் முற்பண வரவு | 451887.75 | |
| வைரவர் மொத்த செலவு | | 145000.00 |
| காண்டாமணி மொத்த செலவு | | 202000.00 |
| மணிக்கோபுரம் மொத்த செலவு | | 475000.00 |
| பிள்ளையார் மொத்த செலவு | | 95000.00 |
| முருகன் மொத்த செலவு | | 95000.00 |
| சபை, கௌரி அம்பாள் சமேத சந்திரசேகரர் மொத்த செலவு | | 470000.00 |
| தரிசண மண்டப மொத்த செலவு | | 200000.00 |
| திரு மஞ்சக்கிணறு மொத்த செலவு | | 115000.00 |
| கருவறை, அர்த்தமண்டபம், கோபுரம் ஏனைய செலவுகள் | | 2004955.00 |
| | 38,1945.75 | 3801945.00 |



தலைவரின் முற்பணம் ரூபா 451887.75 திருப்பணி செய்த அடியார்களின் தருமதிகளைத் தரும் பட்சத்தில் திரும்ப தலைவருக்கு வழங்கப்படும்.

திரு. பொ. கந்தசாமி
பொருளாளர்.

# நன்றியுரை

குருவருளும் திருவருளும் ஒன்றிணைந்து எமது கைதை நகரிலே மாதாஜிலிங்கேஸ்வரர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளைக் குருவாகக்கொண்ட மாதாஜியின் தவத்தின் மகிமையை சமாதி எமக்குவெளிக்காட்டுகின்றது. அந்த சமாதியிலே மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் அமைப்பதற்கு அடியவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

இந்த ஆலயத்தைக் கட்டுவதற்குப் பல ஆலோசனைகளைத் தந்து கால்கோல் விழாவை முன்நின்று நடாத்தியும், இந்தியாவில் இருந்து லிங்கேஸ்வரப் பெருமானை எடுத்து வருவதற்கு ஒழுங்குகளையும் செய்து உதவிய தவத்திரு கணேசானந்த மஹாதேவ சுவாமிகளுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். லிங்கேஸ்வரப் பெருமானை இந்தியாவில் இருந்து கொண்டு வந்து தந்த சிவத்திரு நவரட்ணம் ஐயாவிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது ஆலயத்தின் கட்டுமானப் பணி தொடக்கம், மஹாகும்பாபிஷேகம், நித்திய, நைவேத்தியக் கிரியைகள், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் போன்ற நிகழ்வுகளுக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கிய எமது ஆலயத்தைச் சிக்கனமாகவும் பக்திபூர்வமாகவும் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற பிரம்மஸ்ரீ கு.உமாசுதசர்மா அவர்கட்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.



அறிவுரைகள், ஆசியுரைகள் கூறி எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற பிரம்மஸ்ரீ யோ.குருசாமிக்குருக்கள் அவர்கட்கும் எமது நன்றியைத் தெவித்துக்கொள்கின்றேன்.

பிரம்மஸ்ரீ கு.சண்முகபவசர்மா இப்புதிய ஆலயத்தில் சைவ ஆகம ஒழுங்குகளுக்கமைய நித்திய, நைவேத்தியக் கடமைகளைக் கருணை உள்ளத்தோடும், பக்தியுடனும் செய்து வருகின்றார். அவர்கட்கு எமது நன்றியைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய ஆவர்த்தன மஹாகும்பாபிஷேக பிரதமகுரு பிரம்மஸ்ரீ தாணுவாசுதேவக் குருக்கள் சைவ ஆகம முறைப்படி சிறப்பாக நடாத்தி வைத்தார். அது மட்டுமல்லாது சங்கீத ஞானத்தையும் வெளிக்காட்டத் தவறவில்லை. திருவூஞ்சற் பாடல்களை அவரே இயற்றி அவரே பாடிய இசைஞானம் அடியார்களை மெய்மறக்கச் செய்தது. அவர்கட்கு எமது இதய

பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவருடன் இணைந்து கிரியைகளைச் சிறப்பாக நடத்திய அந்தணப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ் ஆலயம் அமைப்பதற்குத் தன்னால் ஆன சகல உதவிகளையும் தந்து உதவியவர் சிற்பாசாரியரான அராலியூரைச் சேர்ந்த விஸ்வபிரம்மஸ்ரீ ஈஸ்வரன் அவர்களாகும். இந்த ஆலயத்தின் கட்டிட வேலைகள், சிற்பவேலைகள், விக்கிரகங்கள், காண்டாமணி உட்பட எல்லாக் கருமங்களையும் காலம் தவறாது பூர்த்திசெய்து தந்தார். அவர்கட்கு மனமுவந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது ஆலயத்தின் கூரைவேலைகளைச் செய்துதந்த திரு.S.நாகராசா ஆச்சாரியார் அவர்கட்கு மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இங்கு கட்டடப் பணிகளை ஞாபகார்த்தமாக அமைத்துத் தந்த எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். "சிறு துளி பெருவெள்ளம்" போல் பல அன்பர்களின் மனமுவந்த அன்பளிப்பு மூலமும் சிவத்திரு கு.கங்கைவேணியன், திருவாளர் அ.சிற்றம்பலம், திருவாளர் இ.குகதாஸ், திரு.கு.சஷ்டிகாந்தா, திரு.வே.விஜயரூபன் தம்பதியர் போன்றோரின் பெருநிதியுடனும் இவ் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிதியினை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாதாஜியின் அருளாசியையும் பேர் அன்பையும் பெற்றவர்கள் திரு.க.குகதாசன் குடும்பத்தினர் ஆகும். மாதாஜியின் சமாதிமுதல் இன்று மாதாஜி லிங்கேஸ்வரப் பெருமான் எழுந்தருளி இருக்கும் காலம்வரை சகல பணிகளையும் மனப்பூர்வமாகவும், இதயசுத்தியுடனும் ஆற்றி வருகின்றார்கள். அவர்களுக்கும் பெருமகிழ்ச்சியுடன் நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாதாஜியின் அருளாசியைப் பெற்ற ஓர் அன்பர் வைத்திய கலாநிதி K.T.S.சபாநாதன் அவர்கள் ஆவார். ஆச்சிரமத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் அவர் கலந்துகொள்ளத் தவறுவதில்லை. ஆச்சிரமத்தின் வெளியீடுகளான ஞானநிட்டை, அருளொளி செல்லம்மா மாதாஜி நூல்களுக்கும், மஹா கும்பாபிஷேக மலர் நூலுக்கும் தொகுப்பாசிரியராகப் பணியாற்றினார், அவர்கட்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிவத்திரு த.ஆறுமுகம் அவர்கள் பன்னிரு திருமுறைப் பாராயணத்தை மிகவும் பக்திபூர்வமாக நிறைவேற்றித் தந்துள்ளார். அவருடன் இணைந்து செல்வன் மு.பத்மரூபனும் துணை நின்ற ஏனைய அன்பர்களும் நிறைவேற்றினர்.

இவர்களுக்கும் மாதாஜி லிங்கேஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வீர சைவ மரபிலே உதித்த கணேசலிங்கம் ஐயா அவர்கள் காலம் தவறாது பூ, சரம், பூமாலைகள் தந்து சுவாமிகளை அலங்கரித்து அருட்காட்சியாக வைத்தமைக்காக அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது ஆலயத்திற்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் தந்து, கோயில் வளர்ச்சியில் ஆர்வம்கொண்ட செல்வன் சதீஸ் குழந்தைவேலு (பிரான்ஸ்) அவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.

மானிப்பாயைச் சேர்ந்த அன்பர் திரு.P.சிவகுமார் (சுகாதார பரிசோதகர்) அவர்கள் ஆலயத்திற்குத் தேவையான மின்சார உபகரணங்களை அன்பளிப்பாகவழங்கினார், அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மின்சாரப் பொருத்துனர் நாவற்குழியைச் சேர்ந்த அப்புச்சி அவர்கள் சிறந்த முறையிற் பொருத்தித் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கும்பாபிஷேகத் தினத்தன்று நாதஸ்வர, தவில் இசைமழைபொழிந்த கைதடி திரு.S.தங்கவேலு குழுவினர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக. அவர் அன்பளிப்பாக இப்பணியைச் செய்தமைக்கு நாம் என்றென்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மாதாஜியின் அருளாசியைப்பெற்று அன்று தொடக்கம் இன்றுவரை கௌரவப் பணியாளராகப் பல பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார். வாலாம்பிகை அம்பாள் செயலாளரான திரு.K.S.பூபாலசிங்கம் அவர்கட்கும் பெருமகிழ்ச்சியுடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலய கும்பாபிஷேக காலத்தில் வாலாம்பிகை அம்பாள் தொண்டர்கள் பல பணிகளைச் சிறப்புறச் செய்து தந்தார்கள் அவர்களுக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்கின்றேன்.

ஆலய கும்பாபிஷேக காலத்தில் பல துறைகளிலும் பல உதவிகளைச் செய்து உதவிய கைதடி கிழக்கு, இந்து வாலிபர் சங்கத் தொண்டர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளில் வெளியிட உதவிய அன்பர்களுக்கும் எமது நன்றியைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது ஆலயத்தில் நடைபெறும் நிகழ்வு அனைத்தையும் பக்திபூர்வமாகச் செய்து தருவது புகைப்படக் கலைஞர் திரு. செ. இரங்கநாதன் ஆவார். தமது பணியை இரவு பகல் பாராது ஒத்துழைப்பும் உதவியும் நல்கினார். எமது பாராட்டுதலுக்கும் பெருமைக்கும் நன்றிக்கும் உரியவர் ஆவார்.

பந்தல் சேவை முதல்வர் திரு. க. இராஜேஸ்வரன் அவர்கள் கும்பாபிஷேகத் தினத்திற்கும் மண்டலாபிஷேகப் பூர்த்திக்கும் தனது பந்தல்களை இலவசமாக வழங்கிச் சிறப்பித்தமைக்கு எமது நன்றி என்றென்றும் உரித்தாகுக.

கும்பாபிஷேக மலருக்கு அருளுரை, பக்தியுரை, ஆசியுரை, வாழ்த்துரை தந்து உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மஹா கும்பாபிஷேக மலரை அழகாகவும், சிறப்பாகவும் உரிய நேரத்தில் அச்சுப் பதிவுசெய்து தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



யாராவது தவறுதலாக மறக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாதாஜி லிங்கேஸ்வரப் பெருமானின் பரிபூரணமான திருவருள் கிடைக்க வேண்டும் என்று திருவடிகளைத் தொழுது வாழ்த்துகின்றோம்.

பொ.கந்தசாமி
முன்னாள் பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்),
பொருளாளர், மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்.



